விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 08 வியாழக்கிழமை (21.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 092

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வாக்கெடுப்பு இன்று
# மர்மமாய் இந்தியா

**இலங்கை அரசிற்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் சுவட்டத் தொடரில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானம் மீதான வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ளது. இந்நிலையில், இந்தியா தீர்மானம் தொடர்பில் உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதனையும் வெளிப்படையாக அறிவிக்காது தொடர்ந்தும் குழப்பமான அறிவிப்புகளையே வெளியிட்டு வருகிறது.**

சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனிவா நகரில் நடைபெற்று வரும் ஐ.நா. மனிதவுரிமை கவுன்சில் கூட்டத்தில், இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டுவந்துள்ளது. ஆனால், போர்க் குற்றத்தில் ஈடுபட்ட இலங்கை அரசை கண்டிக்கும் கடுமையான வாசகங்கள் இதில் இல்லை.

இலங்கையில் நடைபெற்ற தமிழர்கள் மீதான தாக்குதல்களை போர்க் குற்றமாகவும் இனப்படுகொலையாகவும் அறிவிக்க வேண்டும் என்பது தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்புக்களின் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ ஆதரவு கோரி
## வரலாறு காணாத போர் சென்னையில்

சென்னையில் நேற்று அனைத்துக் கல்லூரி மாணவர்களும் வரலாறு காணாத மாபெரும் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

சென்னை மெரீனா கடற்கரையிலுள்ள காந்தி சிலை அருகில் நேற்று காலை ஒன்பது மணிக்கு ஆரம்பித்த மாணவர்களின் போராட்டம் மாலை ஐந்தரை மணிவரை நடைபெற்றது.

கொளுத்தும் வெயிலையும் கருத்தில் எடுக்காமல் இருந்த மாணவர்கள்: தனி ஈழம் அமைக்க வேண்டும், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும், இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்று கோசங்களை எழுப்பி நாள் முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னையில் உள்ள கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் சென்னை நகர வீதிகள் எங்கும் பேரணியாக சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் சென்னை நகரமே போராட்டக் களமாக மாறியிருந்தது.

சுமார் ஐயாயிரம் மாணவர்கள் மெரீனாவில் ஒன்றுகூடியிருந்தனர். அதேவேளை காவல் துறையினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டனர்.

பழநெடுமாறன், கவிஞர் தாமரை, இயக்குநர்களான புகழேந்தி தங்கராஜ், கௌதமன், நடிகரும் கவிஞருமான ஜெயபாலன் போன்றோர் போராட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச விசாரணை வேண்டும்
### நவிப்பிள்ளை மீண்டும் கோரிக்கை

இலங்கையில் சர்வதேச சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மீண்டும் கோரியுள்ளார்.

இலங்கை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரி நவநீதம்பிள்ளையின் பிரதிநிதியான, (20ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க பிரேரணைக்கு எதிராக யாழில் நேற்று கண்டனப் பேரணி





(யாழ்ப்பாணம்)
இலங்கை அர்சாங்கத்திற்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சுவட்டத் தொடரில் அமெரிக்காவினால் கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். நகரில் நேற்று மாபெரும் கண்டனப் பேரணியொன்று (20ஆம் பக்கம் பார்க்க)

## நவிபிள்ளையின் உருவப்பொம்மை யாழில் எரிப்பு

(யாழ்ப்பாணம்)
ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் உருவப்பொம்மை நேற்று யாழ்.நகரில் தீயிட்டு எரிக்கப்பட்டதோடு போராட்டக்காரர்கள் அவருக்கு எதிரான (20ஆம் பக்கம் பார்க்க)

# அரசை போற்றுபவனை அணை; அவலத்தை கூறுபவனை அடை!



## அரசின் நிலைப்பாடு இதுவே- யாழ்.ஆயர்

(யாழ்ப்பாணம்)
அரசாங்கத்தை போற்றித் துதித்தால் மட்டுமே இங்கு நிம்மதியாக வாழ முடியும். அவ்வாறின்றி வெளிப்படையாக தமது அவலங்களை, கருத்துக்களைக் கூற முற்படும் தமிழ் மக்கள் ஓரங்கட்டப்பட்டு வாயடைக்கப்படுகின்றனர் என யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கனேடிய நாட்டு பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

கனேடிய நாட்டின் செனற்றர் ஹூக் டி செகால் மற்றும் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் திருமதி ஷெலி விஷல் உள்ளிட்ட நான்கு பேர் கொண்ட குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்த விஜயத்தின்போது யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இந்தச் சந்திப்பையடுத்து ஆயர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

. யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 3 வருடங்களைக் (02ஆம் பக்கம் பார்க்க)

CMB - CHENNAI -CMB - 16600/=
CMB - MADURAI -CMB - 14400/=
CMB - TRICHY -CMB - 16300/=
CMB - LONDON -CMB - 91800/=
CMB - FRANKFURT-CMB - 81300/=
Call 0777721235
AIRMARK
Travels & Tours
# 212, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
Tel:- 021 222 0033 / 021 222 4777
IATA

சித்திரைப் புத்தாண்டு
SALE
விசேட விலைக்கழிவு
சர்வதேச தரத்தில்...
சாதாரண விலையில்...
Ranjanas
CERAMIC
# 212, Palaly Road, Jaffna.
021 222 0033 / 021 222 4777 / 021 226 2000

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேரணை தாக்கத்தைக் குறைக்க இலங்கை கடும் முயற்சி

## ஆபிரிக்க தூதுவர்களுடன் சந்திப்பு



(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைத்துள்ள பிரேரணையில் இறுதி நேரத்தில் அமெரிக்கா அதிரடித் திருத்தங்களைச் செய்யலாம் என்பதால், அவ்வாறான ஒரு சூழ்நிலையைத் தடுக்கும் வகையில், ஜெனிவாவில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுடன் அமைச்சர் மகிந்த சமரசிங்க மற்றும் ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க ஆகியோர் அவசரச் சந்திப்புக்களை நடத்தி வருகின்றனர்.

பிரேரணையை இன்னமும் இறுக்கமாக்க இந்திய அரசு திருத்தங்களைச் செய்ய வேண்டும் என வலியுறுத்தி மத்திய அரசிலிருந்து தி.மு.க. வெளியேறியுள்ளதால், மத்திய அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் இறுதி நேரத்தில் பிரேரணையில் அதிரடித் திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இலங்கை இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

நேற்று முன்தினம் காலை முதல் வெளி நாட்டுத் தூதுவர்களுடன் சந்திப்புக்கள் நடந்து வருகின்றன. மனித உரிமைகள் பேரவையின் பிரதான அரங்கத்துக்கு அருகில் குறிப்பாக ஆபிரிக்க நாடுகளின் தூதுவர்களை இலங் கைக் குழு சந்தித்துப் பேசுவதைக் காண முடிந்தது என ஜெனிவாவில் உள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

ஐரோப்பிய நாடுகள் பல இலங்கைக்கு எதி ராக பேரவையில் வாக்களிக்க முடிவு செய் துள்ளதால் ஆபிரிக்க நாடுகளை இலக்கு வைத்து இலங்கை அரச குழு பேச்சுக்களை நடத்தி வருகின்றது.

திருத்தத்துடன் பிரேரணையை அமெ ரிக்க முன்வைத்திருக்கும் அதேசமயம் இந் தியாவில் இப்போதுள்ள சூழ்நிலைகள் ஏதாவது தாக்கங்களை இறுதி நேரத்தில் உண்டு பண்ண லாம் என்பதாலும், அப்படியான சூழ்நிலையில் இறுதி நேரத்தில் வாய் மூல திருத்தங்களை கொண்டு வரலாம் என்பதாலும் அப்படியான நிலைமைகளை சமாளிக்கும் வகையில் இலங்கைக்குழு இந்த அவசரச் சந்திப்புக்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசுக்கெதிரான அமெரிக்கப் பிரேரணை மீதான விவாதமும், வாக்கெடுப் பும் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் என் பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# அமெ.தீர்மானத்தை எதிர்த்து ஆதரவு கோருகிறது இலங்கை

## உறுப்பு நாடுகளுக்கு பீரிஸ் கடிதம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 22-வது அமர்வில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானம் மீது எதிர்ப்பு வாக்கெடுப்பைக் கோருவதற்கு இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

31 நாடுகளின் இணை அனுசரணை யுடன் அமெரிக்கா கொண்டு வந்துள்ள இத்தீர் மானத்திற்கு எதிராக வாக்களிக்குமாறு இலங்கை யின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது,

போருக்குப் பின்னரான இலங்கையின் நிலைமைகளை சரியான முறையில் கணிப் பிடாமல் இலங்கையை இழிவுபடுத்தி தனிமைப் படுத்தும் நோக்குடன் இத்தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளதாக அரசாங்கம் நம்புகின்றது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க முயற்சிகளுக்கு இத்தீர்மானம் குந்தகத்தை ஏற்படுத்தும். போரினால் வெற்றி கொள்ளப்பட்ட அமைதியை சீர்குலைக்க முயற் சிப்பவர்களைத் தவிர வேறு எவரும் இதன் ஊடாகப் பயன்பெறப் போவதில்லை.

பக்கச்சார்பாகவும், அரசியல் நோக்கத்துட னும் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானம் ஏனைய நாடுகளுக்கும் ஆபத்தை ஏற்படுத் தும். ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு வில் கடந்த முறை கொண்டு வரப்பட்ட தீர்மா னத்தை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள



வில்லை. அதுபோலவே இத்தீர்மானத்தை யும் இலங்கை அரசாங்கம் நிராகரிக்கின்றது.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு வில் கொண்டு வரப்பட்டுள்ள இத்தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்த அரசாங்கம் கோரிக்கை விடும்.

இந்நிலையில் இத்தீர்மானத்தை தோற் கடிக்க ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு வில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் ஆதரவை இலங்கை அரசாங்கம் எதிர்பார்க் கின்றது என இக்கடிதத்தில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதேவேளை இத்தீர்மானம் மீது வாக் கெடுப்பைக் கோராது விட்டால், அது ஏக மன தாக நிறைவேற்றப்படக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுவதாலேயே, இத்தீர்மானம் மீது வாக்கெடுப்புக் கோர இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

# அரசைப் போற்றுபவனை...

கடந்துள்ளபோதும், யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பிலும், தடுப்பிலுள்ள வர்கள் தொடர்பிலும், உரிய தகவல்களை வெளி யிட அரசாங்கம் மறுத்து வருகிறது. இதனால் தமிழ் மக்கள் அரசின் மீது அதிருப்தி அடைந் துள்ளனர்.

காணாமல்போனவர்களின் உறவினர்கள் அவர்களைத் தேடி அலைந்து திரிகின்றனர். தற்போதும் அவலத்தை சுமந்த நிலையிலேயே அவர்கள் உள்ளனர்.

அத்தோடு அரசாங்கத்திற்கு ஆதரவாக வும், அவர்களுக்கு சார்பாகவும், கருத்துக்க ளைக் கூறினால் மட்டுமே, நிம்மதியாக வாழ முடியும். மாற்றுக் கருத்துக்களுக்கு இங்கு இடமில்லை, மக்களின் கருத்துரிமை மறுக்கப் பட்டுள்ளது. அரசாங்கம் மற்றவர்கள் தன்னை போற்றித் துதிக்க வேண்டும் என்பதைத் தான் விரும்புகிறது.

தமிழர் பல விடயங்களில் மறைமுகமாக புறக்கணிக்கப்படுகின்றனர். அரச வேலை வாய்ப்புக்களிலும் சரி பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்குவதிலும் சரி புறக்கணிக்கப்படுகின் றனர்.

இந்த நடவடிக்கைகள் வெளிப்படையாக இடம் பெறவில்லை. ஆனால் மறைமுகமாக இடம்பெறுகின்றது.

அத்தோடு யுத்தத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் இராணுவப் பிரசன்னம் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு குறைக்கப்பட வில்லை.

மக்களின் காணிகளில் இராணுவத்தினர் முகாம்களை அமைத்துக் கொண்டு இருக் கின்றனர். கேட்டால் மீண்டும் பயங்கரவாதம் உருவாகாமல் தடுப்பதற்காகத் தான் என பதிலளிக்கின்றனர்.

அத்தோடு மீள்குடியேற்றத்திற்கு தடையா கவுள்ளனர். சிவில் நிர்வாகத்தில் தலையிடு கின்றனர்.

மேலும் பெரும்பான்மை பலத்தை வைத் துக் கொண்டு அரசாங்கம் தனது மனம் போன போக்கிற்கு செயற்படுகின்றது எனவும், பல குற்றச்சாட்டுக்களைத் தான் தெரிவித்தாகவும், வெளிநாட்டவர்கள் இங்கு அடிக்கடி வந்து இங்குள்ள மக்களின் நிலைவரத்தை அறி ந்து கொள்ள வேண்டும் எனவும் கோரியதாக ஆயர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வெளி நாட்டவர்கள் இங்கு வர வேண்டும். தமிழ் மக்களின் நிலைவரத்தை அறிந்து கொள்ள வேண்டும் போன்ற பல விட யங்களை தான் சுட்டிக் காட்டியதாக அவர்மேலும் தெரிவித்தார். (செ-6)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலய ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வும் பொதுக்கூட்டமும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லி யடி மத்திய மகா வித்தியாலயத்தில் நெல்லி யடி இருதயக் கல்லூரி அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.நந்த குமார் கலந்து கொள்ளவுள்ளார். (செ-11)

# தி.மு.க. அமைச்சர்கள் ராஜினாமா

(சென்னை)

காங்கிரஸ் கூட்டணியிலிருந்து தி.மு.க. விலகியது அகில இந்திய அரசியலில் பர பரப்பை ஏற்படுத்தியது. இந் நிலையில் நேற்று மத்திய அரசில் பதவி வகிக்கும் தி.மு.க. அமைச் சர்கள் 5 பேரும் தமது ராஜினாமா கடிதங் களை பிரதமர் மன்மோகன் சிங்கிடம் உத்தி யோக பூர்வமாக கையளித்தனர்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்க கொண்டு வந்துள்ள தீர்மானத்தில் இரண்டு முக்கிய திருத்தங்கள் செய்ய இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தி.மு.க. நிபந்தனை விதித்தது.

இந்த நிலையில் மத்திய அரசுக்கு அளித்து வந்த ஆதரவை தி.மு.க. வாபஸ் பெற்றது. அத்துடன் கூட்டணியிலிருந்தும் வெளியேறு வதாக அறிவித்தது.

டில்லியில் நேற்று இரவு 10.30 மணிக்கு ஜனாதி பதி பிரணாப் முகர்ஜியை டி.ஆர்.பாலு தலைமை யில் தி.மு.க. பிரதிநிதிகள் சந்தித்து கடிதத்தை நேரில் வழங்கினார்கள். (செ-11)

# தமிழக மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

(சென்னை)

தமிழ் நாடு, நாகபட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீது நேற்று அதிகாலை இலங்கைக் கடற்படையினர் வாளால் வெட்டி தாக்குல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் நாகபட்டினத்தைச் சேர்ந்த கோடியக்கரை தென் கிழக்கே மீன் பிடித்து கொண்டிருந்தனர்.

அப்போது ரோந்து சென்ற இலங்கைக் கடற் படையினர், மீனவர்களின் படகை வழிமறித்து, அவர்கள் வைத்திருந்த வாளால் சரமாரியாக வெட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் சம்பவத்தில் நான்கு மீனவர் களுக்கு கை, கால் தொடை பகுதியில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

அதன் பிறகும் கடற்படையினர் அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும், வலை களையும் பறித்துக்கொண்டு சென்று விட்ட னர்.

சரமாரியாக அரிவாளால் வெட்டுண்டதில் படகும் சேதம் அடைந்தது. அரிவாள் வெட்டில் காயம் அடைந்த 4மீனவர்கள் ஏனைய மீன வர்களின் துணையுடன் கடற்கரைக்கு அழைத்து வரப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட் டுள்ளனர். (செ-11)

# விலங்கு விசர் தடுப்பூசி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட குருநகர், பொதுச்சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் தடுப்பூசி வழங்கும் நடமாடும் சேவை நேற்று முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி வரை குறிப்பிட்ட தினங்களில் நடைபெறவுள்ளது.

இதன்படி இன்று வியாழக்கிழமை முற்ப கல் 9 மணி முதல் 11 மணிவரையும், குருநகர் தொடர்மாடியிலும், முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரையும் பெஸ்கி சனசமூக நிலையத்திலும் நடைபெறவுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் 11 மணி வரை

சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை முன் பாகவும், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையும், அண்ணாசிலைச் சந்தியிலும் நடைபெறவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங் களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசி யினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி அ.எ.ஞானஜோதி அறிவித்துள்ளார். (செ-5)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை தளம்ப விட்டது அமெரிக்கா - த ஹிந்து

(சென்னை)

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா தளம்ப விட்டுள்ளதாக த ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவினால் தாக்கல் செய்யப்பட்ட இந்தப்பிரேரணை, பல்வேறு திருத்தங்களின் பின்னர் நேற்று முன்தினம் உத்தியோகபூர் மாக சமர்ப்பிக்கப்பட்டது.

இதில் ஆரம்பத் திலிருந்த பல்வேறு சரத் துக்கள் திருத்தப்பட்டுள் என.

இதன்படி, இலங்கை யில் தடையின்றி, வெளி நாட்டுக் கண் காணிப் பாளர்களும், நிபுணர்களும் பிரவேசிப் பதற்கு அனுமதிக்க வேண்டும் என்ற சர்த்தை அமெரிக்கா முழுமையாக நீக்கியுள்ளது.

அத்துடன், இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத் தப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீக்கப் பட்டுள்ளது.

அதற்குப் பதிலாக, இலங்கை அரசாங்கம் தமது மனித உரிமை விடயங்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணை நடத்த வேண்டும் என்ற புதிய சரத்து இணைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான திருத்தங்கள் மூலம் அமெரிக்கா வின் பிரேரணை வலுவற்றதாக மாறிவிட்ட தாக த ஹிந்து தெரிவித்துள்ளது. (செ-11)




பிள்ளையார் இன்
இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன்
தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில்
நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.
25% கழிவு
இன்றைய விசேட உணவு :-
தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
மசாலா தோசை உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829
(வி-2595)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## திருடன் பெற்ற சந்நியாசம்

புத்தர் வாழ்ந்த காலத்தில் கொலைகாரன் ஒருவன் இருந்தான்.

அவன் "கொலை, கொள்ளை" என்று ஏராளமான பாவங்களைச் செய்து வந்தான்.

அவனுக்குத் திடீரென ஒருநாள் ஆசையொன்று பிறந்தது.

"புத்தரைப் பார்க்க வேண்டும்" என்பதே அவனது ஆசை. இதனால் அவரை எப்படிப் பார்ப்பது என்று யோசித்தான்.

இவனது கள்ளத்தனம் ஊரில் இருப்பவர்களுக்குத் தெரியும். ஆதலால் பார்ப்பதற்கு அனுமதிக்கமாட்டார்கள். ஆகவே பலமாக யோசனை செய்தான்.

உடனே அவன் யாருக்கும் தெரியாமல் சுவர்மீது ஏறி குதித்து மடத்திற்குள் செல்லலாம் என்று முடிவு செய்து அதன்படியே செய்தான்.

அவ்வேளையில் புத்தர் வெளியே சென்றிருந்தார். மடத்தினுள் யாரும் இருக்கவில்லை. புத்தரை மடம் பூராகவும் தேடினான்.

அச்சமயத்தில் மடத்தின் சீடர் ஒருவரிடம் அவன் மாட்டிக் கொண்டான்.

அவர் அவனிடம் "நீ இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று விசாரித்தார்.

அதற்கு அவன், "ஐயா, நான் இங்கு திருட வரவில்லை. புத்தரைப் பார்க்க வேண்டும்" என்ற ஆசையினால்தான் வந்தேன்.

"எனக்கு வேறு எதுவும் இங்கு வேண்டாம். புத்தரை மட்டும் நான் பார்த்தால் போதும்" என்று கூறினான்.

உடனே அந்தச் சீடர் அவனை சாரிபுத்ரன் என்பவரிடம் அழைத்துக் கொண்டு போனார்.

அவருக்கு இந்தத் திருடனைப் பார்த்ததும் பெரிய ஆச்சரியம்.

அவர் அவனிடம் விசாரித்தார். திருடனும் தான் வந்த விபரத்தைக் கூறினான்.

உடனே அவர் "நீ எதற்காகப் புத்தரைப் பார்க்க ஆசைப்படுகிறாய்" என்று வினவினார்.

அவன் "எனக்கு இந்த உலகில் எல்லாம் வெறுத்துப் போய்விட்டது. எனது பாவங்களில் இருந்து நான் விடுபட வேண்டும். அதற்குப் பரிகாரமாக சந்நியாசி ஆகி மக்களுக்குத் தொண்டு செய்ய விரும்புகிறேன்" என்றான்.

"இவன் ஒரு கொலைகாரன். நிறைய பாவங்கள் சம்பாதித்துள்ளான். இவன் சந்நியாசி ஆவதற்கு என்ன தகுதி இருக்கிறது?" என்று அங்கிருந்தவர்கள் அமைதியாகப் பேசிக் கொண்டார்கள்.

ஜோதிடம் மூலமாக இவன் முற்பிறவியில் சிறிது புண்ணியம் செய்துள்ளானா என பார்க்கப்பட்டது. அதன்படி இதைவிட கொடிய பாவங்கள் செய்தது வெளி வந்தது. ஒரு சிறிய நல்ல விடயம் கூட செய்யவில்லை. அதனால் எந்தப் பிறவியிலும் விமோசனம் கிடையாது" என்ற முடிவெடுக்கப்பட்டது.

அங்கு கூடியிருந்தவர்கள் "இவனை உடனே வெளியில் துரத்துங்கள்" என்று கூச்சலிட்டனர்.

இதனால் அவன் கோபப்படவில்லை. மாறாக "புத்தரை நெருங்கக் கூட நமக்குத் தகுதியில்லாதபோது, நாம் எதற்கு உயிர் வாழ வேண்டும்?" என்று அவன் மனதில் ஒரு எண்ணம் தோன்றியது.

அவன் உடனே மடத்தை விட்டு வெளியேறி வெளி மதில் சுவரில் தலையை இடித்துக் கொண்டு இறப்பதற்கு முயற்சி செய்தான்.

அச்சமயம் பார்த்து வெளியே சென்ற புத்தர் உள்ளே வந்தார்.

மதில் சுவரில் இரத்தம் சொட்டச் சொட்ட தலையை இடித்துக் கொண்டிருந்த அந்தத் திருடனைப் புத்தர் தடுத்து நிறுத்தினார்.

புத்தரைப் பார்த்ததும் அவனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. புத்தரின் காலில் விழுந்து அழுது புலம்பினான்.

புத்தர் அவனிடம், "என்ன நடந்தது மகனே?" என்று வினவினார்.

அவனும் நடந்தவற்றைக் கூறினான்.

உடனே புத்தர் சீடர்களை அழைத்து, "இவனை ஏன் துரத்தினீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்களும் நடந்தவற்றைத் தெளிவாகக் கூறினார்கள்.

புத்தர் சீடர்களுக்கு "இவனை ஒரு வாரத்தில் சந்நியாசி ஆவதற்குத் தகுதி உடையவனாக மாற்றுங்கள்" என்று கூறினார்.

புத்தர் கூறியதில் சீடர்களுக்கு நம்பிக்கையில்லை.

புத்தர் அந்தத் திருடனைப் பார்த்து, "நீ என்னுடன் இரு" என்று கூறினார்.

புத்தரின் கூட்டுறவால் அந்தத் திருடன், ஒரே வாரத்தில் அடக்கம், அமைதி, சாந்தம் ஆகியவை மேலோங்கி, நல்ல மனிதனாக மாறி, சந்நியாசி ஆக மாறுவதற்குரிய தகுதியைப் பெற்றான்.

சீடர்களுக்கு ஒரே ஆச்சரியம்.

சாரிபுத்ரன் புத்தரிடம் "இவன் எப்படி ஒரே வாரத்தில் சந்நியாசி ஆக முடியும்? இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது?" என்று கேட்டான்.

அதற்கு புத்தர், "சாரி புத்ரா! நீ மிகவும் நல்லவன். ஆனால், பாவங்களின் சுமை, அதன் தவிப்பு ஆகியவை உனக்குத் தெரியாது.

"உனக்கு அதன் அனுபவம் கிடையாது. அத்தோடு ஜோதிடத்தில் நீ கடந்த காலத்தைத்தான் பார்க்கிறாய். நாம் எப்போதும் எதிர்காலத்தைத்தான் பார்க்க வேண்டும்.

தன்னுடைய பாவச் சுமையில் இருந்து விடுபட இவன் பட்டபாடுதான் விடுதலையைக் கொடுத்தது" என்று கூறினார்.

இந்தக் கதை கூறும் கருத்து என்னவெனில், நல்லவர்களை விட கெட்டவர்களுக்குத்தான் மிக விரைவில் பக்குவ நிலையை அடைவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இதை நாம் சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# தமிழக மாணவர்களின் பேரெழுச்சி தமிழர்களை தலைநிமிர செய்கிறது

## சுரேஸ் எம்.பி அறிக்கை

தமிழகமெங்கும் ஈழத்தமிழர்களுக்காக அரசியல் வேறுபாடுகளற்ற மாணவர்கள் நடத்திவரும் உணர்ச்சிபூர்வமான போராட்டங்கள் அழிவின் விளிம்பில் ஏமாற்றங்களுடன் நின்று கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களை தலைநிமிரச் செய்வதாக த.தே. கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழகமெங்கும் ஈழத்தமிழர்களுக்காக நடந்துவரும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் அவர் குறிப்பிடுகையில், மாணவர்களுடைய போராட்ட த்தை நன்றியுணர்வோடு வரவேற் பதாகவும் ஈழத்தமிழர்கள் சார்பில் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழகமெங்கும் கடந்த 8 நாட்களாக மாணவர்களும் மக்களும் சேர்ந்து அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஈழத்தமிழர்களுக்காக எழுச்சி கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய எழுச்சி அழிவின் விளிம்பில்வெறும் ஏமாற்றங்க ளுடன் நின்று கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களை தலைநிமிரச் செய்கிறது.

குறிப்பாக இங்கு நடைபெற்ற போர்க்குற்றங்கள் விசாரணை செய்யப்படவேண்டும். மனிதத்துவத்திகு எதிரான குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும்.மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் கண்காணி கப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளுடன் இங்கு நடைபெற்ற, நடைபெறும் இன அழிப்பிலிருந்து தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இதற்காக ஈழத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் ஒரு, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை அவர்கள் முன்னிறுத்தியிருக்கின்றார்கள்.

இவற்றை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வரவேற்கின்றது. மேலும் இத்தகைய பேரெழுச்சி புதுடில்லியில் உள்ள இந்திய மத்திய அரசாங்கத்தையும் சர்வதேச நாடுகளையும் சிந்திக்கத் தூண்டியிருப்பதாக நாம் கருதுகின்றோம்.

இதேபோல் தமிழக முதல்வர் ஜெயலலிதா அம்மையாரும் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்துள்ளமைக்கு நாம் நன்றி கூறுகின்றோம்.

இராணுவ ஆக்கிரமிப்புக்களும் திட்டமிட்ட சிங்களகுடியேற்றங்களும் பௌத்தமயமாக்கலும் தொடர்ந்து கொண்டிருக்கையில் மறுபுறம் காணாமல் போதல்களும் காணாமல் போனவர்கள், சிறைச்சாலைகளில் உள்ளவர்கள் தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவு காணப்படாத நிலையில் யுத்தத்தின் பின்னராக கடந்த 4 வருடங்களில் ஈழத் தமிழர்கள் அவலங்களுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில்எமதுபிரச்சினைகளை முன்னிறுத்தி எமக்காக தமிழமெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேரெழுச்சியை நாம் நன்றியுணர்வோடு மீண்டும் மீண்டும் வரவேற்கின் றோம்.

இத்தகைய போராட்டங்களுக்கு நாம் ஆதரவினை வழங்குவோம். மேலும் சமகாலத்தில் அமைந்திருக் கும் இந்த வரலாற்று முக்கியத்தவம் வாய்ந்த சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி ஈழத் தமிழர்களுக்கு நியாயபூர்வ மான அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படுவதற்காக சகல அரசியல் வேறுபாடுகளுக்கும் அப்பால் சென்று தமிழகமக்கள் குரல் கொடுக்க வேண்டும் எனவும் நாம் கோரிக்கை விடுக்கின்றோம். என்றார். (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 120 | 100 |
| தக்காளி | 60 | 60 | 80 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 50 | 40 | 60 | 60 |
| கரட் | 100 | 100 | 140 | 120 |
| பூசணி | 80 | 30 | 60 | 60 |
| புடோல் | 80 | 40 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 80 | 50-120 |
| பெரிய வெங்காயம் | 90 | 70 | 100 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 140 | 100 | 90 | 100 |
| லீக்ஸ் | 140 | 80-100 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 60 | 60 | 100 |
| கறிமிளகாய் | 140 | 90 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 | -- |
| போஞ்சி | 130 | 90 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | 90 | 70 | 80 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30-40 | 40 | 30 |
| தேசிக்காய் | 70 | 50 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 30 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 140 | 100 | 110 | 90 |
| வெங்காயப்பூ | 150 | -- | 160 | -- |

# இராசி பலன்

21.03.2013
(பங்குனி 08, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு
நவமி பிற்பகல் 1.29 மணிவரை
புனர்பூசம் பின்னிரவு 6.08 மணிவரை
இராகுகாலம் 1.47-3.17 மணிவரை
சுபநேரம் 7.47-9.17 மணிவரை

**மேடம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், தொழில் நன்மை கருதி புதிய கூட்டாளிகளை இணைக்கும் எண்ணம் உருவாகும், தைரியத்தோடு செயற்பட்டு சாதனைகள் படைக்கும் நாள்.

**இடபம்** வசதி வாய்ப்புக்களைக் பெருக்கி கொள்ள முன்வருவீர்கள், புதிய தொழில் தொடங்கும் எண்ணம் உருவாகும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்** எப்படி நடக்கும் என நினைத்த காரியமொன்று நல்லபடியாக நடைபெறலாம், நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடத்துக்கு செல்லும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த் திப்பீர்கள், காரிய அலைச்சல்களால் மனச் சோர்வு ஏற்படலாம், அடுத்தடுத்த தொழில்களால் திணறுவீர்கள்.

**சிங்கம்** தொலைபேசி வழியில் சந்தோசம் தரும் செய்திகளைக் கேட்கலாம், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும், பயணங்கள் கைகூடும், போசனநன்மை யுண்டு.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை செய்து முடிக்கும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**துலாம்** தடைகளைத் தாண்டி தன்னிறைவு காணும் நாள், எதிர்பாராத சில சம்பவங்கள் நடைபெறலாம், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** வரவும் செலவும் சமமாகும், உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள், அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி காக்க வேண்டிய நாள், வேலைச்சுமை அதிகரித்து சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**தனுசு** கணவன்- மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், அன்பு நண்பர்கள் ஆதரவு பெருகும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** நாவன்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக பேசி சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்** பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, தொழில் நன்மை கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடையும் நாள்.

**மீனம்** மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், கல்வியில் முன்னேற்றம் காணும் நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேடிய உயர்ஸ்தானிகர் யாழிற்கு நேற்று திடீர் விஜயம்

## அரச அதிபர், ஆயரை சந்தித்தார்


(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் ஷெலி விஷல்-நேற்று யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தின்போது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை யாழ்.மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய அவர் பின்பு யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினையும் ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

யாழ்.மாவட்டத்தில் யுத்தத்திற்கு பின்பு மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் கேட்டு அறிந்து கொண்ட கனேடிய உயர்ஸ்தானிகர் யாழ்.ஆயரிடம் குடாநாட்டின் தற்போதைய நிலவரம் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

அத்தோடு மிகவிரைவில் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு தான் விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளதாகவும் இதன்போது பல விடயங்களை ஆராயவுள்ளதாகவும் யாழ்.ஆயரிடம் தெரிவித்துள்ளார். (அ-6)







# முத்துமாரி அம்பாள் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை ஆரம்பித்து எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

திருவிழாவின் 7 ஆம் நாள் 27 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.40 மணிக்கு முத்துமாரி அம்மாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இதற்கு முதல் நாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 3 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# தமிழ் மக்களுக்கு அரசாங்கம் நீதியாக உதவி புரிகின்றதா?

## . கனேடிய செனற்றர் செகால் கேள்வி

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களுக்கு அரசாங்கம் நீதியாக உதவிகளை செய்கிறதா என கனேடிய நாட்டின் செனற்றர் ஹூக் டி செகால் யாழ். ஆயரிடம் கேள்வியெழுப்பியுள்ளார். யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த செனற்றர் மற்றும் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் திருமதி ஷெலி விஷல் உள்ளிட்ட நான்கு பேர் கொண்ட குழுவினர் வருகை தந்திருந்தனர். இவர்கள் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.**

இந்தச் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியிருந்தார் கனேடிய செனற்றர். இதற்கு பதிலளித்த யாழ்.ஆயர், அரசாங்கம் ஓரளவுக்கு உதவிகளைச் செய்கிறது. வீதிப் புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்து வருகிறது. ஏனைய உதவிகளையும் செய்து வருகிறது. ஆனால், தமிழ் மக்களுக்கு இன்னும் பல தேவைகள் பூர்த்தி செய்து கொடுக்கவில்லை.

வீடுகள் கட்டிக் கொடுப்பது போன்ற உதவிகளை அரசாங்கம் மட்டும் செய்யவில்லை. அரச சார்பற்ற அமைப்புகளும் இந்தியா போன்ற நாடுகளும் கட்டிக் கொடுத்து வருகின்றன எனப் பதிலளித்தார்.

இதேவேளை, பொதுநலவாய நாடுகளின் மாநாட்டினை இலங்கையில் நடத்துவது தொடர்பில் கனேடிய செனற்றர் கேள்வியெழுப்பியபோது, பொதுநலவாய நாடுகளின் மாநாட்டினை இலங்கையில் நடத்துவதன் மூலம் பல விடயங்களை இலங்கை அரசாங்கம் மறைக்க முற்படுகிறது.

தமிழ் மக்களுக்கு பலனளிக்கக் கூடிய வகையில் சர்வதேச நாடுகளினால் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் மாநாடு நடத்தப்பட்டால் அதனைத் தமிழ் மக்களும் வரவேற்பார்கள். நானும் வரவேற்பேன்.

மாறாக இலங்கை அரசாங்கம் தன் மீதான குற்றச் சாட்டுக்களிலிருந்து விடுபடும் வகையில் பொதுநலவாய மாநாட்டை நடத்தினால் அதனை வரவேற்க முடியாது எனப் பதிலளித்தேன் எனக் குறிப்பிட்டார் யாழ்.ஆயர். (அ-6)

# தென்மராட்சி கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி தரம் 1ஏபி பாடசாலையினது அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-1 ஐச் சேர்ந்த மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

அதிபர் சேவையில் தகுதியானவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்திலேயே ஆசிரியர் சேவையினைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

மேற்படி பதவிக்கு யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட வலயங்களை சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பார்வையிட்டு அதற்கமைய தங்கள் விண்ணப்பத்தினை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் அதிபர் சேவை தரம் 1, 2-1 ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் தென்மராட்சி வலயத்தினைச் சேர்ந்த அதிபர் சேவை தரம் 2-11 ஐச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)


# கோப்பாய் பிரதேச செயலகத்தில் தொழிற்சந்தை நடவடிக்கை

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலக பிரிவிலுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தில் தொழிற்சந்தை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பல்வேறு துறை சார்ந்த தனியார் தொழில் வழங்கும் நிறுவனங்கள் பங்குபற்றி தங்களுடைய ஆளணி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யவுள்ளன. எனவே, இப்பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகள் தங்கள் சுய விபரக் கோவையுடன் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்திற்கு வருகை தந்து தாங்கள் விரும்பிய துறையில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளுமாறு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.கிருஷ்ணராசன் கேட்டுள்ளார். (அ)





அம்பாறை மாவட்டத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தேசத்தின் மகுடம் எனும் தொனிப் பொருளில் கண்காட்சியொன்று நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு வட மாகாணத்திற்குரிய ஒத்திகை கண்காட்சி நேற்றைய தினம் யாழ்.இந்துக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது...

(படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மாணவர்களின் உண்ணாநோன்பு உலகின் செவிப்பறைகளை கிழிக்கட்டும்!

## சத்தியராஜ், மணிவண்ணன் அறிக்கை

மாணவர்களின் போராட்டம் ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என்ற உண்மையான உன்னதமாக குரலை ஓங்கி ஒலிக்கிறது. ராஜபக்ஷவை கூண்டில் நிறுத்தும் எம் ஈழ உறவுகளுக்கு நீதி பெற்றுத் தரும் என்பது திண்ணம். இவ்வாறு நடிகர் சத்யராஜ், இயக்குநர் மணிவண்ணன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் இருவரும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

குருதிச் சேற்றில் தங்கள் உறவுகளையும் வாழ்வையும் உரிமைகளையும் புதையக் கொடுத்துவிட்டு பரிதவித்து நிற்கும் நமது ஈழத்து உறவுகளின் உரிமைகளையும் உடைமைகளையும் மீட்டுத்தர பசியையே ஆயுதமாக்கிப் போராடும் எங்கள் எதிர்கால நம்பிக்கை வெளிச்சமாய் உதயமாகி இருக்கும் தமிழக மாணவச் செல்வங்களுக்கு எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

சுயநலமும் அரசியலும் கலக்காத சமூகத்துக்கான சமூக மனிதர்களின் தூய்மையான போராட்டமாக மாணவர்களின் போராட்டம் அமைந்திருக்கிறது. ஒன்றிணைந்த மாணவர் சக்தி பெரும் வெற்றிகளை குவித்திருக்கிறது என்பதே இது வரை உலக வரலாறு. அதற்கு தமிழகமும் ஒரு சான்றாக விளங்குகிறது.

இந்த மாணவர்களின் பட்டினிப் போராட்டமும் ஈழத்தில் நடந்தது. இனப்படுகொலை என்ற உண்மையான, உன்னதமாக குரலை ஓங்கி ஒலிக்கிறது. இந்தக்குரல் உலகத்தின் செவிப் பறைகளைக் கிழிக்கும்.

ராஜபக்ஷவை கூண்டில் நிறுத்தும் எம் ஈழ உறவுகளுக்கு நீதி பெற்றுத்தரும் என்பது திண்ணம். உள்நோக்கமற்ற அறம் நிறைந்த எமது மாணவர்களின் இந்த தூய்மையான போராட்டத்துக்கு எமது வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (அ-2)

## புலிகளை அழிக்க இந்தியாவே முழு உதவியையும் வழங்கியது

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தாது அமெரிக்கா தமது பிரேரணையை தாக்கல் செய்யாது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்னவாக இருந்தாலும் அது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவோ அல்லது அவர்களின் மீள் உருவாக்கும் முயற்சிக்கு ஆதரவாகவோ அமையாது.

இந்தியா இலங்கைக்கு எதிராக செயற்படுகிறது என்றுகூற முடியாது. ஏற்கனவே விடுதலைப்புலிகள் இயக்கத்தை அழிப்பதற்கு இந்தியாவே முழு உதவிகளையும் வழங்கியது.

இந்நிலையில் இந்தியா இந்த பிரேரணை தொடர்பான நிலைப்பாட்டை தமக்கு ஏற்படுகின்ற அழுத்தங்களின் அடிப்படையிலேயே எடுக்கும் என்றார். (அ-2)


UNIVERSITY OF JAFFNA

Reference to the paper Advertisement which was appeared in this Newspaper on 13.03.2013 under the caption of "**Out sourcing of Services for preparation of Fixed Assets Register**"

Please note and include the following information in respect of above:

Bids documents can be obtained from 15.03.2013 to 03.04.2013 and the duly perfected documents should be submitted on or before 12.04.2013 at 2:00 pm and the bids will be opened on the same day.

***Registrar***

(C-2748)


## யாழ். மாநகர சபையின் மாதாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் மார்ச் மாதத்திற்கான மாதாந்தக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது என யாழ். மாநகர சபை செயலாளர் தா. தர்மரட்ணம் தெரிவித்துள்ளார்.

மேற்படி கூட்டத்திற்கு சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

(அ-5)


ஜெய் குருதேவ்

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி**

அவர்களின்

**வாழும் கலை பயிற்சி பாகம் II**



இடம்: சைவ பரிபாலனசபை மண்டபம், நீராவியடி.

காலம்: 23, 24, 25, 26, /03/2013 - 04 நாட்கள்

காலை 6 மணியில் இருந்து மாலைவரை

முற்பதிவுகளை 21,22, 03/2013 மாலை 5 மணிக்கு சபை மண்டபத்தில் மேற்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு : 0776655408, 0777607008

(2207)



அறிவுபூர்வமான முதலீட்டுத் தீர்மானத்திற்கு நீங்கள் தயாரா?




வாருங்கள் முதலீடு பற்றிய அறிவை வளர்ப்போம்

CSE முதலீட்டாளர் தினம் 2013

யாழ்ப்பாணம் | 2013 மார்ச் 23 மு.ப 10.00 முதல் பி.ப 3.00 வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(சி/2749)

மேலதிக விபரங்களுக்கு www.cse.lk யைப் பாருங்கள் அல்லது அழையுங்கள் 021-2221455/0777-822014

CSE COLOMBO STOCK EXCHANGE



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc (Network Engineer) Canada-PR<br>தொ.இ: B -077 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'2"<br>கி.பா: 36, 4 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: BSc (S/L) விரிவுரையாளர்<br>எ.பா: சைவ போசனம்.<br>தொ.இ: G -082 |
| பிறப்பு: 1982 றோ.க.<br>நட்சத்திரம்: பரணி 4<br>உயரம்: 5'7"<br>கி.பா: 52, 8 செவ்<br>தகைமை/தொழில்: A/L, (ரெலிகொம்)<br>எ.பா:- மதம் மாறி செய்யலாம்<br>தொ.இ: B -061 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 2<br>உயரம்: 5'4"<br>கி.பா: 33.5, 8 இல் செவ்.<br>தகைமை/ தொழில்:மருந்தாக்கவியலாளர் (Canada not PR)<br>தொ.இ: G-089 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>உயரம்:5'11"<br>கி.பா:12, சூரி., செவ் ஒரே வீட்டில்<br>தகைமை/ தொழில்: A/L, IT (UK Student Visa)<br>தொ.இ: B -063 | பிறப்பு: 1986 இந்து சைவக்குருக்கள்<br>நட்சத்திரம்:ரேவதி 3<br>உயரம்: 5'3"<br>கி.பா:36, 7இல் செவ்.<br>தகைமை/ தொழில்:வெளிவாரி பட்டதாரி (கணக்காளர் தனியார் நிறுவனம்) HNDA<br>தொ.இ: G -095 |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 2<br>உயரம்: 5'8"<br>கி.பா: 65.5, 7 செவ்.<br>தகைமை/தொழில்: MBBS Dr.<br>தொ.இ: B -064 | பிறப்பு: 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்:5'2"<br>கி.பா: 35.75<br>தகைமை/ தொழில்:கலைமாணி BA பொது முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G -098 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக புதிய மாணவர்களே! நீங்கள் எவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்?

கற்கும் பருவத்தில் தம்மை மிகச் சிறந்த மனிதவளமாக மாற்றுவதற்கு பெற்றோராலும் அரசாங்கத்தினாலும் சமூகத்தினாலும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டவர்களே மாணவர்களாவர். ஆரம்ப வகுப்பு நிலைகளில் இதனை அவர்கள் அதிகம் உணரமுடிவதில்லை. கனிஷ்ட இடைநிலைகளில் (6-9 தரம்) பதின்மவயது முந்திய விளையாட்டுப்பருவம். தம்மைப்பற்றி அறிய ஆர்வமில்லாத பருவம். ஆனால் சிரேஷ்ட இடைநிலைப் பருவம் கட்டிளமைப்பருவத்திற்குரியது. இது மிகவும் துடிப்பானது; புதுமையானது; வேகமானது; சுய அங்கீகாரத்தை எதிர்பார்ப்பது; சுய முடிவுகள் தொடர்பாக அதிக உரிமைகளை எடுத்துக்கொள்ள விரும்புவது.

தமக்குரிய நண்பர்களை உருவாக்கி சமூகவாழ்வுக்குரியவர்களாகவும் சுதந்திரமான செயற்பாடுகளின் அடையாளமாகவும் வெளிப்படுகின்ற நிலைமை இதுவாகும். க.பொ.த சாதாரண மற்றும் க.பொ.த உயர்தர வகுப்புக்களில் கற்கும் பருவத்தினராக இருக்கும் நிலையில் இவ்வாறுதான் செயற்படுவார்கள். இதில் வெற்றி பெற்றவர்கள் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் தம் கல்வியைத் தொடர்கின்றனர்.

இது மாணவப் பருவத்தின் நான்காவது நிலையாகும். ஆரம்பக்கல்வி கனிஷ்ட இடைநிலைக்கல்வி, சிரேஷ்ட இடைநிலைக்கல்வி என்ற மூன்றையும் திறமையுடன் கடந்தவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர்.

மாணவப் பருவத்தை நிறைவு செய்து தொழில் செய்யும் மனிதர்களாக நிலைமாற இருப்பவர்கள் இவர்கள். இவர்கள் எவ்வாறு தம்மை ஒழுங்குபடுத்திக்கொள்ள முடியும் என்பது பற்றி கலந்துரையாடுவதில் இன்று கவனம் செலுத்தப்படுகின்றது.

### உயர்கல்வி கற்கும் மாணவர்கள்

திறமை காரணமாக பல்கலைக்கழகங்களில்- அரச பல்கலைக்கழகங்களில் கற்பீர்களானால் அதிர்ஷ்டசாலிகள்தான். க.பொ.த உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றியவர்களில் அதிர்ஷ்டம் பெற்ற 5 சதவீதத்துள்ளும் பரீட்சையின் படி சித்திபெற்று அதிர்ஷ்டவாய்ப்புகள் பெற்ற 17 வீதத்தினருள்ளும் நீங்கள் இருக்கின்றீர்கள்.

அரசாங்கம் உயர்கல்வி கற்போருக்கு செலவிடுவதற்காக ஒதுக்கிய பணத்தில் இலவசமாக உயர்கல்வியைக் கற்கப் போகின்றீர்கள். இது உங்கள் பெற்றோர், உறவினர், அயலவர் உள்ளடங்கிய இந்த நாட்டுமக்களால் செலுத்தப்பட்ட வரிப்பணத்திலிருந்து உங்களுக்காக ஒதுக்கப்படுகிறது. இதனை அனுபவிக்கும் எல்லா உரிமையும் அவர்களுக்குண்டு. இதனைவிட மேலதிகமாகவும் உங்கள் உணவு, கற்பதற்கான பொருட்கள், வதிவிடம், போக்குவரத்து, உடல்நலம் போன்ற பலவற்றுக்கான செலவுகளுக்கும் உங்கள் பெற்றோர் அல்லது சகோதரர் மாதாந்தம் பணம் தருகின்றனர். வரவில்லாமல் செலவுகள்செய்து மகிழ்ச்சியுடன் கற்று பெரிய மனிதர்களாக- உன்னத உழைப்பாளர்களாக-மூளை உழைப்பாளர்களாக-வளருவதற்கான வாய்ப்புக்கள் நிறைந்த வாழ்க்கையுடைய பருவமே இந்த உயர்கல்வி மாணவப் பருவமாகும்.

இதனை எவ்வாறு பயன்படுத்தப்போகிறோம் என திட்டமிடுவதும் அதுபற்றிய முன் சிந்தனையில் நாட்டம் செலுத்துவதும் அவசியம் தானே! கற்கப்போகும் நான்கு வருடங்களை எமக்கு அதீத பயன்மிக்கதாக பயன்படுத்தப் போகிறோமா அல்லது விரயமாக்கப்போகிறோமா என்று தெளிவுபட சிந்திப்பது நல்லது தானே!

### மாற்றங்களும் முன்னுரிமைகளும்

பெற்றோரும், உங்கள் பாடசலையும், நீங்கள் பிறந்து வளர்ந்த சமூகமும் உங்களிடம் பலவற்றை எதிர்பார்க்கிறது. உங்களுக்குப் பணம் செலவிடுகின்ற அரசாங்கமும் உங்களுக்கு கல்வி வழங்கப்போகும் பல்கலைக்கழகமும் உங்களிடம் பல உன்னதங்களை, முழுமையை எதிர்பார்க்கிறது. இதேபோல் உங்கள் வளர்ச்சி பற்றி உங்களிடமும் சில எதிர்பார்க்கைகள் இருக்க வேண்டுமல்லவா?



கல்வித் தரிசனம்

புதிய மனிதராகுங்கள், பொறுப்புமிக்கவராகுங்கள், உங்களுக்கு நீங்களே பொறுப்பு என்பதை உணருங்கள். சுயமாக உங்களுக்கு நீங்களே முகாமையாளராகுங்கள். முகாமையாளரும் நீங்கள்தான். அவரது முடிவுகளுக்குட்படும் அறிவுஜீவியும் நீங்கள்தான் ஒன்றில் இரண்டு.

இதுவரை எங்களை முகாமை செய்யாமலா இந்தளவு வெற்றிகளையும் கைப்பற்றியுள்ளோம் என்று எண்ணுகிறீர்களா? அது போதாது.

இப்போது புதிய நிலைமை, புதிய சூழல், புதிய தேவைகள், புதிய சவால்கள், புதிய போட்டிகள். இதனை எதிர்கொள்ளத்தக்க புதிய சிந்தனைகள் வேண்டும்? என்ன செய்ய வேண்டும்? இதோ சில வழிகாட்டல்கள்.

✷ நான்கு வருட முடிவில் அடைய வேண்டிய இலக்கு குறிக்கோள் தெரிகிறதா? மனதில் அதனை உருவாக்கி அதை நம்புங்கள். நான் எவ்வாறு மாறப்போகிறேன்?

- இளம் விரிவுரையாளராக
- இளம் வங்கி முகாமையாளராக
- திட்டமிடல் அதிகாரியாக
- புதிய தொழில் முனைவோராக
- தூய்மையான சமூக தலைவராக

இப்படி உங்களுக்கே உரித்தான, உங்களுக்கு இசைவுடைய இலக்குப்புள்ளியை கற்பனை செய்யுங்கள். அதுபற்றிக் கனவு காணுங்கள். விஞ்ஞானி அப்துல்கலாம் சொன்னதுபோல இளைஞர்களே பகலில் விழித்துக்கொண்டு கனவு காணுங்கள். அது மெய்ப்பட வேண்டும் என்று தினமும் உண்மையாக பாடுபடுங்கள்.

### இலக்கை அடைவதற்குரிய வழிமுறை

✷ உங்கள் பாதையை திட்டமிடுங்கள். தேவையெனில் சிறந்த வழிகாட்டி (Mentor) ஒருவரது உதவியை நாடுங்கள்.

✷ சாத்தியமான வழியில், நிதானமாக, அதிக உழைப்பை உள்ளீடாக வழங்கத் தயாரான முறையில் வேறு முன்னுதாரணங்களை அவதானித்து கவனமாக திட்டமிடுங்கள்.

✷ உங்கள் முன்னேற்றத்துக்கான திட்டத்துக்கு உதவக்கூடிய ,

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

கிடைக்கக்கூடிய வளங்களை இனங்காணுங்கள். அவை எவை?

- உங்களைச்சுற்றியுள்ள உன்னதமான மனிதர்கள்
- உங்கள் விருப்பத்திற்குரிய ஆசிரியர் அல்லது விரிவுரையாளர், உங்கள் பெற்றோர், உங்களை தீமைகள் நிறைந்த திசைக்கு அழைத்துச் செல்லாத நண்பர்கள் (மிகச்சிலர்).

இப்படி சிலரை தேர்வு செய்யுங்கள். உங்களை முன்னேற்ற உதவுவார்களா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.


### உங்கள் நேரம்

- உங்களிடமிருந்து பிரிக்கமுடியாத ஆற்றல் விதைகள்தான் உங்களது மணித்துளிகள். நான்கு வருடங்கள் வெற்றிகளின் ஓடுபாதை இது. இதனை உற்றுப் பாருங்கள். 1400 நாட்கள் தான் 35040 மணித்தியாலங்கள். இதனை எப்படி பகிர்ந்தளிக்கப்போகிறீர்கள்.
- படிப்பதற்கா, பொழுதுபோக்கிற்கா?
- முன்னேற்றத்திற்கா, பாழ்பட்டுப்போவதற்கா
- நூலகத்திலா, வீதியிலா

இப்படி நீங்களே கேள்விகேட்டு விடைகளையும் காணவேண்டும். இப்போது உங்களால் முடியும். சூழலிலிருந்தும் நண்பர்களிடமிருந்தும் ஒதுங்கிப்போய் விடாதீர்கள். தனிமை நல்லதல்ல. அதனால் நிதானமும் எதிலும் சமநிலையும் பேணவேண்டும். தீமைகள் உங்களை நோக்கிவரும்போது மலிவாகவே வந்து சேரும். வெற்றிகளை நோக்கி நீங்கள்தான் அதிக செலவுடன்- அதாவது சிரமங்களுடன் நகர்ந்து செல்லவேண்டும். வெற்றிகள் என்பவை புதையல்கள். சிரமத்துடன் தோண்டி எடுப்பவர்களுக்காகவே ஏங்கிக் கிடக்கின்றன.

### பொருட்களும் நிலையங்களும்

பல்கலைக்கழகங்கள் புதியன பல குவிந்திருக்கும் இடம் எங்கெங்கு காணினும் வாய்ப்புக்கள் எதை எவ்வாறு தெரிவு செய்யப்போகிறீர்கள்?



பேராசிரியர் மா.சின்னத்தம்பி

பாரிய நூலகம், சிறந்த விளையாட்டு மைதானம், அழகான உள்ளக விளையாட்டரங்கு, கலை நிகழ்வுகளுக்கான அரங்குகள், கணனி அறைகள், மொழிகற்கும் கற்றல் கூடங்கள், அழகிய தாவரவியல் பூங்காக்கள், ஆலோசனை மையங்கள், மருத்துவ நல நிலையம், நட்பைப் பகிர்ந்து கொள்ளும் தேநீர் மையங்கள், இப்படிப்பல வாய்ப்பு மையங்கள் நிறைந்த உலகமே பல்கலைக்கழகம். எப்படி, எவற்றை உங்கள் உயர்ச்சிக்குரியதாக பயன்படுத்தப் போகிறீர்கள்? சிந்தியுங்கள், திட்டமிடுங்கள்.

புதிய சிந்தனைகள் புதிய நாட்டங்கள், புதிய அனுபவங்கள், புதிய திறமைகள் கொண்ட பல விரிவுரையாளர்கள், பல சகபாடிகள், பல சிரேஷ்ட மாணவர்கள் இவர்களின் சங்கமம்தான் பல்கலைக்கழகம். இவர்களில் யாரை எவ்வாறு பயன்படுத்தப்போகிறீர்கள்? யாருடைய நட்பை, யாருடைய ஆற்றலை உங்கள் வாழ்நாள் முழுவதற்குமுரியதாக மாற்றப் போகிறீர்கள்?

வெயிலில் வைக்கப்பட்டிருக்கும் பனிக்கட்டி போன்றனவே இந்த வாய்ப்புக்கள். இல்லாமல் போவதற்குள் எடுத்துக்கொள்ளுங்கள். தாகம் தீர்த்துக்கொள்ளுங்கள்.

### நில், கவனி, மதிப்பிடு, செயற்படு

உங்கள் செயற்படும் ஒழுங்கு பற்றிச் சிந்தியுங்கள். மாதம் ஒரு முறை தனியாக இருந்து உங்கள் செயற்பாடுகளைப் பற்றி ஆழமாகச் சிந்தியுங்கள். நேர்மையோடு உங்கள் செயல்களை மதிப்பீடு செய்யுங்கள். ஒருவரும் பார்க்காதபோது எவ்வாறு சரியாக, உண்மையாக நடந்து கொள்கிறீர்களோ அதுதான் உங்கள் நடத்தை. அதுவே நீங்கள். இதனை மறந்து போகாதீர்கள்.

உங்கள் திட்டத்தின்படி செயற்படுகிறீர்களா? தவறுகள் உள்ளனவா? பரவாயில்லை. திருத்திக்கொள்ளுங்கள். அதிலிருந்து புதிதாய் ஏதோ ஒன்றைக் கற்றுக்கொள்ளுங்கள்.

எது பொருத்தமானதோ அதை சரியான இடத்தில் சரியான நபருக்கு செய்யுங்கள். தோல்விகள் என்று ஒன்றில்லை. கவனமின்மைக்கான விளைவுகள்தான். அவை மறுமுறை மேலும் கவனத்துடன் செயற்படுங்கள்.

நின்று, கவனித்து, சரி, பிழையை மதிப்பிட்டு முன்பினும் திருத்தமாக செயற்படுங்கள். முழுமையான மனிதராக நீங்கள் மாறுவதை, நீங்கள் வளர்ந்து வருவதை உணர்வீர்கள். இதுவே முன்னேற்றம்.

### உங்களுக்கான ஒழுங்கு, ஒழுக்கம், நியமம்

நீங்கள் உங்களுக்குரிய தனித்துவமான சட்டகங்களை வடிவமைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு வடிவமைத்தவற்றை நீங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பின்பு அதற்குக்கட்டுப்படுவதென சத்தியம் செய்து கொள்ளுங்கள்.

அத்தகைய சட்டகங்கள் எவை? எதிலும்ஒழுங்கு, எதிலும்சுயநேர்மை, எதிலும் ஒழுக்கம், எதற்கும் எல்லைகள்- நியமங்கள். இதற்குள் சிந்தியுங்கள். இதற்குள் செயற்படுங்கள். இதற்குள் முன்னேறுங்கள்.

### விளைதிறன் மிக்க சுய முகாமை

மாணவர்களே சிலர் எப்போதும் அவசர அவசரமாகவே செயற்படுவதுபோல் தென்படுவார்கள். ஆனால், பெரிதும் பிழையான அலுவல்களையே செய்திருப்பார்கள். பெரிதாக எதனையும் சாதித்திருக்க மாட்டார்கள். நீங்கள் அவர்களையும் போன்றவர்கள் அல்ல. அவ்வாறிருக்கவும் கூடாது.

உங்களது நேரம், உங்கள் திறன்கள், உங்கள் மனப்பான்மைகள், உங்கள் தன்னம்பிக்கை என்பன உங்களது சொத்துக்கள். உங்களிடமிருந்து பிரிக்க முடியாதன. உங்கள் முயற்சியையும் உங்களிடம் பிணைந்துள்ள திறமைகளையும் கவனமாக ஒன்றிணைக்க வேண்டும். மன அழுத்தம், பரபரப்பு, பயம், கோபம், தாழ்வுணர்ச்சி என்பன உங்கள் மீது ஆதிக்கம் செலுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

உங்களுக்குரிய சுய கட்டுப்பாடுகள், எல்லைகள் வேண்டும்.

சின்னச்சின்ன முரண்பாடுகள் மற்றும் தோல்விகள் ஏற்படும். அவற்றைத் திறமையாக கடந்து செல்ல வேண்டும். உற்சாகத்துடன் செயற்பட முயற்சித்தல் வேண்டும். சிறந்த முடிவுகள் எடுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இவற்றுக்காகவே நீங்கள் உங்களை எப்போதும் வினைதிறன் மிக்க சுயமுகாமையாளராக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதுபற்றி முதலில் நிதானமாக சிந்தித்தல் வேண்டும். உங்களைப்பற்றி நிதானமாக மிகவும் ஆழமாக, உண்மை அக்கறையுடன் சிந்திக்க வேண்டும். அப்படி எப் போதாவது சிந்தித்திருக்கிறீர்களா? (15 ஆம் பக்கம் பார்க்க..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்களை குறைக்கக்கூடிய வகையில் பிரதி பொலிஸ்மா அதிபர் செயற்படவேண்டும்

## பிரதம நீதியரசர் அறிவுரை

நாம் அனைவரும் ஒன்றாகவும் ஒற்றுமையாகவும் வாழவேண்டும் . வெளிநாடு சென்று வாழ்வது என்பது சாத்தியமற்றது. எனவே நாட்டின் அபிவிருத்திக்கும் பொருளாதார விருத்திக்கும் எல்லோரும் பங்களிப்புச் செய்ய முன்வரவேண்டும். இதன் மூலமே நாடு முழுமையான முன்னேற்றத்தைக் காணும் என பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

.சிறைக்கைதி ஒருவரைத் தடுத்து வைப்பதற்கு அரசாங்கம் நாளொன்றுக்கு 720 ரூபாவைச் செலவிடுவதுடன் இக்கைதிகளின் குடும்பப் பொருளாதாரம் முடக்கப்படுவதுடன் நாட்டின் பொருளாதாரத்திற்கான பங்களிப்பும் தடுக்கப்படுகின்றது.

தடுப்புக்காவல் என்ற சொல்லுக்கு நீதித்துறையில் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.எனவே முடிந் தளவு பொலிஸாருக்கும் நீதிவான் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் உள்ள பெரும் பொறுப்பினை உணர்ந்து பொலிஸ் நிலைய மட்டத்திலேயே பிணக்குகளையும் குற்றங்க ளையும் இலகுவாகக் குறைப்பதற்கு மாவட்டத்தில் குற்றங்களைத் தடுக்கும் கூடுதல் ஆளுமை கொண்டுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் செயற்பட வேண்டும்.

இதற்கமைய குற்றங்களை விசாரித்த பொலிஸ் நிலையங்களிலேயே பிணை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண் டும்.

சட்டத்தரணிகளைப் பொறுத்த வரையில் மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்ற சேவையை உணர்ந்து செயற்பட வேண்டும். சட்டத்தைப் பாதுகாக்கக் கூடியவர்கள் சட்டத்தரணிகள் என்ற முழு நம்பிக்கையிலேயே பொதுமக்கள் தமது வழக்குகளைச் சட்டத்தரணிகளிடம் ஆற்றுப்படுத்துகின்றனர்.

பிரதம நீதியரசர் என்ற பதவி பொதுமக்களாலேயே எனக்குக் கிடைத்தது. இதனால் ஒரு சாதாரண குடிமகனானவே என்னைக் கருதி நீதியைக் காப்பாற்றுவதற்கு மக்களுடன் நல்லுறவை நீதித்துறையில் வளர்த்து செயற்பட விரும்புகின்றேன் என்றார். (அ-2)

# காணாமல் போனவர்களை தேட விசேட குழு அமைக்கப்பட வேண்டும்

## ஆனந்தன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் காணாமல் போனவர்கள் குறித்து கண்டறிய விசேட குழுவொன்றை அமைக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

போர் நடைபெற்ற காலத்தில் வடக்கில் போல் தெற்கிலும் பல்வேறு நபர்கள் காணாமல் போயுள்ளனர். அவர்கள் குறித்து கண்டறிய தென்பகுதி மக்களின் உதவியும் அவசியம். வடக்கில் காணாமல் போனவர்கள் குறித்து கண்டறிய விசேட குழுவொன்றை நியமிக்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் கோரிக்கை விடுப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் போனவர்கள் தேடுபவர்களின் குடும்பங்கள் அடங்கிய சங்கத்தினர் கடந்த 5 ஆம் திகதி வவுனியாவில் இருந்து கொழும்புக்கு செல்வதற்கு திட்டமிட்டிருந்த வேலைத்திட்டத்தை குழப்பியமை தொடர்பில் கடும் கவலையை வெளியிடுவதுடன் கடும் எதிர்ப்புக்களையும் தெரிவித்து கொள்கிறோம்.

எனினும் இந்த சம்பவத்தை உலகிற்கு கொண்டு செல்ல உதவிய ஊடகவியலாளர்களுக்கு நாம் நன்றி தெரிவித்து கொள்கிறோம். நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தவர்களில் பலர் காணாமல் போன தமது பிள்ளைகள், உறவினர்கள் குறித்து தகவல்களை வெளியிட்டிருந்தனர்.

எனினும் அப்படியான எவரும் முகாம்களில் இல்லை என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்திருந்தார்.

இதன்படி இது பயனை தரும் வேலையில்லை என்பதால் இது தொடர்பாக செயற்பாடுகளை முன்னெடுக்க தென்பகுதி மக்களின் உதவியையும் தாம் கோருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)



கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள்விழா அண்மையில் நடைபெற்றபோது....

# இந்தியாவுடனான பாதுகாப்பு பேச்சுவார்த்தை இரத்தாகவில்லை

(சென்னை)

டில்லியில் 25 ஆம் திகதி நடைபெறவிருந்த இலங்கையுடனான வருடாந்த பாதுகாப்பு பேச்சுவார்த்தை இரத்து செய்யப்பட்டுள்ளதாக இந்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால் இதனை இலங்கை மறுத்துள்ளது. இந்தியாவில் தமிழ் அமைப்புகள் இலங்கைக்கு எதி ராக போராட்டம் நடத்தி வருவதால் கொழும்பில் நாளை மறுதினம் தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை குறித்த பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்யப்பட்டது.

பாராளுமன்றத்தில் பதிலளிக்க வேண்டி இருப்பதால் இராணுவ மந்திரி இப்போது வர முடியாது எதிர்வரும் ஏப்ரல் மாத மத்தியில் வருவதாக இந்திய அரசு தெரிவித்தது. ஆனால் அந்த சமயம் சிங்கள, தமிழ் புத்தாண்டு தின விழாக்கள் வருவதால் இலங்கை அதிகாரிகளால் வர முடியாது. எனவே ஏப்ரல் இறுதியில் அல்லது மே தொடக்கத்தில் இந்த பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்று பெயர் குறிப்பிடவிரும்பாத இலங்கை அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக இந்திய இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# சுயவிபரக் கோவை பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சியினை 2010/2012 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்த அனைத்து ஆசிரிய மாணவரையும் எதிர்வரும் 25 ஆம் திக்தி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிக்கு சமுகமளித்து தங்களது சுயவிபரக் கோவையை பெற்றுக் கொள்ளுமாறு கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கேட்டுக்கொள்கின்றார். (அ-2)

# அவசர கால கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் நீண்ட காலமாக சேவையாற்றி வரும் சகல தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசரகூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி எடிசன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் சகல தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கிளி. தொண்டராசிரியர் சங்க தலைவர் அறிவித்துள்ளார். (அ)

# பாதுகாவலர்களுக்கு பிணை

(கொழும்பு)

பாரத லக்ஸ்மனின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் மூன்று பாதுகாவலர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்நிலையில் அவர்கள் தலா 50 இலட்சம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் 5 இலட்சம் பெறுமதியான சரீர பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்டவர்களுள் அமைச்சர்களுக்கான பாதுகாப்பு பிரிவின் பொலிஸ் அதிகாரி ஒருவரும் உள்ளடங்குகிறார்.

பாரத லக்ஸ்மன் கொலையுண்ட போது காயமடைந்ததாக கூறப்படும் துமிந்த சில்வா தற்போது இலங்கை திரும்பியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# யார் இந்த இயேசு என்னும் கேள்விக்கு பதில் காண்போம்



நீ யாரென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் என்று யூதர்கள், பரி சேயர்கள் இயேசுவிடம் கேட்கும் வேதாகமப் பகுதி இன்று எமக்கு தரப்படுகிறது.

இயேசுவின் காலம் முதல் இன்று வரை யார் இந்த இயேசு என்ற கேள்வி பலராலும் பலவிதங்களில் எழுப்பப்பட்டு வருகிறது. இந்த கேள்வியும் அதன் பதிலும் மனிதர்களையும் மனித வரலாற்றையும் மாற்றியுள்ளது. நீங்கள், நான் யார் என்று சொல்கிறீர்கள்? என்று இயேசு கேட்ட கேள்வியும் அதற்கு சரியாக பதில் சொன்ன சீமானைப் பேதுருவாக மாற்றி திருச்சபையின் அடித்தளமாக மாற்றியது. விண்ணின் ஆற்றல், அதிகாரம் மண்ணுக்கு வழங்கப்பட்டது.

ஆண்டவரே நீ யார்? என்று சவுலின் கேள்வியும் அதற்கு அவர் கண்டு கொண்ட பதிலும் அவரை பவுலாக மாற்றியுள்ளது. இதே கேள்வியை தன்னிலும் எழுப்பி அதற்கு சரியான பதில் காணும் இன்றைய மனிதர்களும் இத்தகைய பெரும் மாற்றத்தை தன்னிலும் தான் வாழும் சமுதாயத்திலும் ஏற்படுத்துகிறார்களா?

இயேசு தான் யார் என்பதை தன் போதனையாலும் அரும் செயல்களாலும் பல முறை மறைமுகமாகவும் சில சமயங்களில் நேரடியாகவும் காட்டியுள்ளார். கேட்டவர்கள் வாழ்வு பெற்றவர்கள் கேளாதோர் வாழும் வாய்ப்பை இழந்தார்கள். இயேசுவின் கடைசி நாட்களிலும் இந்த கேள்வி எழுகிறது. இயேசுவும் வழக்கம் போல் பதில் கொடுக்கிறார். நான் வந்த இடமும் போகுமிடமும் உங்களுக்கு தெரியாது. நான் மேலிருந்து வந்தவன். இருக்கிறவர் நானே என்னை அனுப்பிய தந்தை என்னோடு இருக்கிறார். இயேசு தாம் இறைமகன் என்பதையும் உலகின் தொடக்கம் முதல் தந்தையின் நெஞ்சில் வாழ்ந்தவர் என்னும் உண்மையை அவர்களிடம் எடுத்துரைத்தார்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

இந்த விபரங்கள் இந்த கேள்விக்கு போதுமான பதில் ஆகின்றன. ஆயினும் அப் பரிசேயர்கள் அதற்கு செவி சாய்க்கவில்லை. எனவே அவர்களில் எந்த மாற்றமும் இல்லை. நாம் இன்று உலக மயமாக்கலின் சூழ்ச்சிக்குள் விழுந்திருக்கின்றோம். இவை எப்போதும் மனச்சான்றை வலுவிழக்கச் செய்கின்றன. நன்மையானதைக்கூட ஏமாற்றுகின்றன. இதனால் தவக்காலம் ஆன்மீகப் போராட்டத்தில் போராடுகின்றோம். இவற்றுள் இயேசு குறித்து எழும் மனிதரின் போலி உருவங்களை புறக்கணிக்க யார் இந்த இயேசு என்னும் கேள்விக்கு பதில் காண்போம். மகிழ்ந்து வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

404

## மனமே! இரங்கு!!



குண்டலூர் என்ற சிறு கிராமத்தில் குப்பண்ணன் என்பவன் குதிரை வண்டி ஓட்டிப் பிழைத்து வந்தான். அந்த ஊரில் அவனது வண்டி ஒன்று மட்டுமே வாடகை சவாரிக்கு என்று இருந்ததால் அவன் கேட்கும் அநியாய வாடகையைத் தான் எல்லோரும் கொடுக்கவேண்டியதாயிற்று. அதனால் அவனுக்கு கர்வம் அதிகம்.


ஆனால் இப்படியே வெகு நாட்களுக்கு அவனால் இருக்க முடியவில்லை. அக்கிராமத்தருகே ஓர் ஆலை ஏற்பட்டதால் வேறு இடங்களிலிருந்து பலர் அந்த ஊருக்கு வந்து குடி புகுந்தார்கள். அவர்களில் நாலைந்து பேர்கள் குதிரை வண்டிகளை ஓட்டிப் பிழைப்பவர்கள். அவர்களது வண்டிகள் வாடகைக்கு கிடைத்ததால் குப்பண்ணனுக்கு வருமானம் குறைந்து போயிற்று. சரியான வருமானம் கிடைக்காமல் சில நாட்களில் அவன் பட்டினியாகக்கூட இருக்கவேண்டியதாயிற்று.

ஒருநாள் அவன் மனநிம்மதியைப் பெற அந்த ஊரின் ஆலயத்திற்குச் சென்றான். அப்போது கோயில் அர்ச்சகர் அங்கு வந்த பக்தர்களிடம் எல்லோரும் நல்ல நடத்தையையும் பிறருக்கு இரக்கம் காட்டும் இயல்பையும் கொண்டிருக்க வேண்டும். தான் செய்யும் தொழிலே தெய்வம் என்று மதிக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் மனநிம்மதியையும் வெற்றியையும் பெறமுடியும் என்று கூறினார்.

குப்பண்ணன் அதைக் கேட்டு அவர் மேலும் என்ன சொல்லப் போகிறார் என்பதை அறிந்து கொள்ள பக்தர்களின் கூட்டத்தில் சேர்ந்து நின்றான். அர்ச்சகரும் இப்போது உங்களுக்குக் கரும்புச் சர்க்கரையைப் பிரசாதமாகக் கொடுத்திருக்கிறேன். இதில் கொஞ்சம் எடுத்துத் தரையில் நீங்கள் தூவினால் அது பல சிற்றெறும்புகளுக்கு உணவாகும்.

இதைப்போல நீங்கள் நேர்மையாகத் தொழில்புரிந்து சம்பாதித்ததில் ஒரு சிறு பகுதியை யாவது பசித்திருப்பவர்களுக்கு தானம் செய்தால் அவர்களது பசியும் போகும். உங்களுக்கும் ஒரு நற்செயலைச் செய்தோம் என்ற மனநிம்மதி ஏற்படும் என்று அறிவுரை கூறினார்.

அந்த அறிவுரை குப்பண்ணனின் மனதில் நன்கு பதிந்தது. உடனே ஆலயத்திலிருந்து அவன் வெளியே வந்து அருகிலிருந்த மளிகைக் கடைக்குப்போய் கால்ரூபாய்க்குக் கரும்புச் சர்க்கரை வாங்கினான். அதை எடுத்துக்கொண்டு கோயில் மண்டபத்திற்குப்போய் ஓர் ஓரத்தில் இறைத்துவிட்டு வெளியே வந்தான். அப்போது குப்பண்ணா



என்று யாரோ கூப்பிடவே அவன் திரும்பிப் பார்த்தான். அவரைக் கூப்பிட்டவர் அவ்வூர் இலட்சாதிபதியான லட்சுமணப் பிள்ளைதான். அவரும் குப்பண்ணா என் பன்னிரெண்டு வயது மகளை அடுத்த ஊரிலிருக்கும் உயர்நிலைப் பள்ளியில் சேர்த்திருக்கிறேன். நீ தினமும் காலையில் உன் வண்டியில் அவளை ஏற்றிக் கொண்டு போய் அந்தப் பள்ளியில் விட்டு விட்டு மாலையில் அங்கிருந்து அவளை நம் ஊருக்குக் கொண்டு வந்து என் வீட்டில் விட வேண்டும். இதற்கு உனக்கு மாதம் முந்நூறு ரூபாய் கொடுக்கிறேன். நீ நம் ஊர்க்காரன். நம்பகமானவன். அதனால்தான் வேறு யாருக்கும் இந்த வேலையைக் கொடுக்காமல் உன்னைத் தேர்ந்தெடுத்தேன் என்றார்.

அதைக்கேட்டு குப்பண்ணன் ஆச்சரியத்தால் எதுவும் பேச முடியாமல் சில விநாடிகள் நின்றுவிட்டான். பின்பு அவன் பணிவுடன் ஐயா சொல்கிறபடியே நடக்கிறேன் என்று கூறி வணங்கினான்.

எறும்புகளுக்குச் சர்க்கரை தானம் செய்த சில நிமிடங்களிலேயே அதற்கான நற்பலன் கிடைத்தது கண்டு மகிழ்ந்த குப்பண்ணன் இனி நான் யாவருக்கும் இரக்கம் காட்டி என்னால் முடிந்ததைக் கொடுப்பேன் என எண்ணினான். குப்பண்ணனின் இந்த மாற்றத்தைக் கண்டு ஊரார் மகிழ்ந்தனர்.

## கடவுள் செய்த தவறு

## அம்புலிமாமா கதைகள்

எப்போதும் எதைப்பற்றியாவது குறை சொல்லிக் கொண்டேயிருப்பது ராஜாவின் வழக்கம். எவ்வளவு நல்ல விடயமானாலும் அதில் ராஜா ஏதாவது குற்றம் கண்டுபிடித்து விமர்சனம் செய்வான்.

ஒருநாள் பக்கத்துக் கிராமத்தில் கால்நடையாகப் புறப்பட்ட ராஜா வழியில் ஒரு பெரிய மரத்தடியில் படுத்துக் கொண்டு ஓய்வெடுத்தான். கண்களைச் சொக்கிக் கொண்டுவர அப்படியே சற்று உறங்க முயன்றான். அப்போது அவன் கண் முன்னால் அந்த மரத்திலிருந்த பழங்கள் தோன்றின. உடனே தன் வழக்கப்படி அடடா! எத்தனை பெரிய ராட்சஸ மரம்? இத்தனை பெரிய மரத்திற்குச் சற்றும் பொருத்தமில்லாமல் எத்தனை சிறிய பழங்கள். கடவுளே நீயே இப்படி தவறு செய்யலாமா? என்று நினைத்தான். திடீரென மரத்தின் பழங்கள் பெரிதாக மாறின. கடவுளே இப்போது தான் நீ ஒழுங்காக ஒரு காரியம் செய்திருக்கிறாய் என்று ராஜா கடவுளைப் பாராட்ட திடீரென மரத்திலிருந்து பழங்கள் அவன் மீது ஒன்றன்பின் ஒன்றாக விழுந்து பாறையைப் போல் அவனைத் தாக்க வாரிச் சுருட்டி எழுந்த ராஜா ஐயோ! கடவுளே என்னை மன்னித்து விடு! நீ தவறு செய்யவில்லை. இதுவரை தவறு செய்தவன் நான்தான்! இனி யாரையும் எதற்கும் குறை சொல்லமாட்டேன் என்று கூச்சலிட பழங்கள் பழைய படி சிறியதாயின. ராஜாவின் கனவும் முற்றுப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

78

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



ஊரே கூடியிருக்கு அரசமரத்தடி அம்பலக்கல்லுல. வெளியூருக்கு எழவுக்குப் போன ஆளுகளத் தவிர வராத ஆளுக இல்ல. ஓரஞ்சாரமெல்லாம் கூடிநிக்கிறாக பஞ்சாயத்துல உக்கார முடியாத பொம்பளையாளுக.

சின்னஞ் சிறுசுக நெனப்புல ஒரு கண்காட்சி நடக்குது அங்க. காணாமப் போயிருச்சுக மரத்துல இருந்த காக்கா குருகளெல்லாம். இறுக்கமா இருக்கு பஞ்சாயத்து; ஒருத்தரும் ஒரு வார்த்தையும் பேசல. "பெத்த தகப்பனப் பஞ்சாயத்துல நிக்க வச்சிருக்கிற மகனப் பாரு"ன்னு சலசலன்னு பேசிக்கிட்டிருக்குக அரசமரத்து இலைக மட்டும்.

தோள்ல கிடந்த துண்டைச் சுருட்டித் தரையில முறிவச்சாரு கருத்தமாயி. வருசநாட்டு யானை மாதிரி நிமிந்து நிக்கிற மனுசன் வாழைத்தாரு மாதிரி தரை பாத்து நிக்கிறாரு பாவம்.

ஒரு ஒப்புக்குக் கையக் கட்டிக்கிட்டு, என் கெண்டைக் கால் ரோமத்தக்கூட ஒரு பய அசைக்க முடியாதுங்கற மாதிரி வெடச்சு வெறப்பா நிக்கிறான் முத்துமணி.

வெத்தல எச்சிய உக்காந்துக்கிட்டே ஓரமாத் துப்பிட்டுத் தொண்டையச் செருமுறாரு நாட்டாமை.

"ஏப்பா முத்துமணி... பஞ்சாயத்துக் கூட்டுனது நீயி. உன் பிராது என்னா? சபையில சொல்லு"

"பெரியவுகளாக் கூடியிருக்கீக. எனக்கு நல்ல தீர்ப்புச் சொல்லுங்க. என் நிலைமைய நெனச்சுப் பாருங்க. புடி கொப்புமில்லாம மிதிகொப்புமில்லாமப் பொழப்பத்துப்போய் நிக்கிறேன். உத்தியோகம் போச்சு; உள்ள காசும் போச்சு. மாமனாரு சாமியராகிச் சொத்தைக் கோயிலுக்கு எழுதிவச்சுட்டாரு. கேசு நடத்தவும் காசு இல்ல. தெருத் தெருவாப் பிச்சையெடுக்கிறேன். அதனால என் பிராது கேட்டுப் பஞ்சாயத்து என் மேல எரக்கம் காட்டணும்"

முத்துமணி சொன்னதைக் கேட்டுக் கெக்கெக்கேன்னு சிரிச்சுக்கிட்டே எந்திருச்சுட்டாரு பரமனாண்டி.


"எங்கேயோ கேட்ட கதையா இருக்கு தம்பி உன் கதை. ஒரே அருவாள்ல அப்பன் ஆத்தாள வெட்டிக் கொன்டவனக் கோர்ட்டுல கொண்டு போயி நிறுத்துனாங்களாம். ரெண்டு கையும் தலைக்கு மேல தூக்கி நீதிபதிக்கு ஒரு கும்புடு போட்டுட்டு அய்யா... ஜட் ஜய்யா... அப்பன் ஆத்தா இல்லாத அனாதைப் பய நானு... எனக்குக் கருணை காட்டுங்கய்யான்னு பொய்க் கண்ணீரு விட்டானாம் அந்தக் கொலைக்காரப் பாவி. அந்தக் கதையாவில்ல இருக்கு உன் கதை. நீ உத்தியோகம் கெட்டதுக்கும் ஊரு மாறி அலையறதுக்கும் பஞ்சாயத்தா பொறுப்பு? உன் வழக்கை நீ சொல்லப்பா. நல்லது கெட்டதை நாட்டாமை சொல்லட்டும். சுத்திவளைக்காம விசயத்துக்கு வா"

பரமனாண்டிய வெறிச்சு ஒரு பார்வை பாத்துட்டு முத்துமணி சொல்றான்:

"சுத்தி வளைச்சு ஏறதுக்கு இது என்ன பழனியா? திருப்பதியா? சொல்றேன் கேட்டுக்குங்க. எங்க தாத்தன் சீனிச்சாமி தேடிவச்ச சொத்து மூணரை ஏக்கரு. சீனிச்சாமி மக்க ரெண்டு பேரும் அத ரெண்டாப் பிரிச்சுக்கிட்டாக. என் பெரியப்பன் சுழியன் பங்கை எம்பேருல எழுதிக் கொடுத்துட்டாரு. பாதிப் பங்கு எங்கப்பன் அனுபோக பாத்தியதையில இருக்கு. கடனுக்கு அடமானம் கெடந்த பத்திரத்த அசலும் வட்டியும் கட்டி நான் மீட்டிருக்கேன். தாத்தன் அடமானம் வச்ச நிலத்தப் பேரன் மீட்டிருக்கேன். அப்படின்னா தாத்தன் சொத்து இந்தப் பேரனுக்குத்தான சொந்தம்? விட்டு விலகச் சொல்லுங்க இந்தப் பெரிய மனுசன. இந்தாங்க நான் மீட்டுக்கிட்டு வந்த தாய்ப்பத்திரம்"

பணிஞ்சு கொடுக்கிறவன் மாதிரி எறிஞ்சான் பத்திரத்தப் பஞ்சாயத்துமேல.

அதை எடுத்துப் படிக்கத் தெரிஞ்சவக படிச்சு "சரிதான்"னு தலையாட்டிக்கிட்டாங்க.



"யப்பா முத்துமணி...! பத்திரத்த நீ மீட்டுட்டு வந்துட்ட சரி; ஆனா நிலம் உங்கப்பன் பேருலயுமில்ல; உம்பேருலயுமில்ல; உங்க தாத்தன் சீனிச்சாமி பேருலயில்ல இருக்கு. அப்பன் தாத்தன் சொத்துல உன் தம்பிக்கும் பங்கிருக்கா இல்லையா? சொத்தை உனக்கெழுதிக் கொடுக்க உங்கப்பனுக்கே அதிகாரமில்லப்பா"

"கோர்ட்டுக்குப் போனா இப்படிச் சட்டம் பேசுவாங்கன்னுதான நான் பஞ்சாயத்துக்கு வந்தேன். சட்டத்தை விட்டுருங்க. நடைமுறையப் பாருங்க. அப்பறம் நடக்கக் கூடாதது நடந்து போயிரும்"– தணிஞ்ச குரல்ல மிரட்டுனான் முத்துமணி.

"உன் மகன் சொல்றதச் சொல்லிட்டான். நீ என்ன சொல்ற கருத்தமாயி?"

பூமிபாத்து நிதானமாப் பேசுறார கருத்தமாயி:

"அய்யா... நான் நிலத்த விக்கப் போறதுமில்ல; ஊரை விட்டு ஓடப் போறதுமில்ல. என் காலத்துக்குப் பெறகு என் பிள்ளைக ரெண்டு பேரையும் பாதி பாதி எடுத்துக்கிறச் சொல்லுங்க. இப்ப நான் நிலத்த விட்டுட்டா சுடுகாட்டுல கூட எடமிருக்காது எனக்கு. உசுரு கொடுத்த மண்ணுலயே என் உசுரு போக ஆசை பட்டேன். என் மகன் சொத்தை நான் இல்லேன்னு சொல்ல மாட்டேன். ஆனா உசுருள்ள வரைக்கும் விட்டுக் கொடுக்க மாட்டேன்"

"அப்படிச் சொன்னா எப்படி கருத்தமாயி? உன் மகன் உங்க அண்ணன் நிலத்தக் கிரயத்துக்கு வாங்கியிருக்கான். மொத்த நிலத்துக்கும் கடனைக் கட்டியிருக்கான்"

"அவன் செலவழிச்ச காசுக்கு என்ன வழி சொல்ற?"

"நிலத்தைப் பங்கு பிரிச்சா, கடனையும் பிரிச்சுத்தான ஆகணும்? சின்னப் பாண்டி சம்பாதிச்சு வந்து கடனைக் கட்டி நிலத்தைப் பிரி;ப்பான். அது வரைக்கும் எப்பவும் போல எங்கிட்டேயே இருக்கட்டுமப்பா நிலம்"

பஞ்சாயத்துக்காரங்க கசபுச கசபுசன்னு காதுக்குள்ள என்னமோ பேசிக்கிட்டாங்க.

துண்டை எடுத்து மறைவு கட்டி ஒருத்தருக்கொருத்தர் கலந்துக்கிட்டாக.

அப்பறம் எல்லாரையும் கையமத்தி நாட்டாமை பேச ஆரம்பிச்சாரு:

"யப்பா முத்துமணி.... நீ விவசாயம் பண்ணப்போறியா- விக்கப்போறியா நிலத்த?"

மூக்குமேல கோவம் வந்திருச்சு முத்துமணிக்கு.

"ஏய்யா விலைக்கு வாங்குன கோழியக் கூட்டுல அடைச்சா என்ன? கொழம்பு வச்சா என்ன? தீர்ப்புச் சொல்லுங்கய்யா"

"இந்தா பாரப்பா... என்னைக்கிருந்தாலும் நிலம் உனக்குத்தான். இப்ப எங்க தீர்ப்பக் கேட்டுக்க. நிலம் உங்கப்பன்கிட்ட இருந்தாக் குடும்பமே கஞ்சி குடிக்கும். உனக்குச் சொந்தமாயிட்டா என்னாகும்னு ஊருக்கே தெரியும். அதனால உங்கப்பன் காலம் வரைக்கும் அவரே உழுது கஞ்சி குடிக்கட்டும். அவரு காலத்துக்குப் பெறகு உன் தம்பி உன் கடனைக் கட்டுனா நிலத்தைப் பிரி; இல்ல நீயே அனுபவி"

"நூத்துல ஒரு தீர்ப்புய்யா. கடவுளே மனுசனுக்குச் சொன்ன மாதிரி இருக்கு"

ஊரே கூடித் தீர்ப்பை 'ஒகோ'ன்னு சொல்லிருச்சு.

மூஞ்சி செத்துப்போயி முத்துமணி சொல்றான்:

"எங்கப்பன் பஞ்சாயத்த நான் வீட்டுல பாத்துக்கிர்றேன். இன்னொரு பஞ்சாயத்து இருக்கு. பரமனாண்டி, கெடாவீரன், ஒத்தவீட்டு மூளி மூணு பேரும் அவுக நிலத்த எம்பேருல எழுதிக் கொடுத்திருக்காக. நிலத்த என் கிட்ட ஒப்படைக்கச் சொல்லுங்க. இந்தாங்க பத்திரம்"

"இது என்னா புதுக்குண்டைத் தூக்கிப் போடறான்? நாங்க எப்ப எழுதிக் கொடுத்தோம்?"

வாங்கிப் பாத்தா பத்திரமும் சரியாயிருக்கு; கையெழுத்தும் சரியாயிருக்கு.

"ஏப்பா பரமனாண்டி! இது உன் கையெழுத்துதான?"

"ஆ... மா எங் கையெழுத்துத்தான்"

"யக்கா மூளி! இது ஒங் கையெழுத்தா... பாரு"

"கையெழுத்து என்னதுதான். நான் எழுதிக் குடுக்கலையே"

"கெடாவீரனும் கையெழுத்த ஒத்துக்கிட்டாரு; பத்திரத்த ஒத்துக்கல. 'இது என்னடா இது குறளி வேலையா இருக்கு'ன்னு ஊரே மண்டை காஞ்சு நிக்குது.

அவுக முன்பணம் வாங்குன ரசீதுக இருந்த கையெழுத்த எடுத்துப் போலிப் பத்திரம் தயார்பண்ணுன சங்கதி முத்துமணிக்கு மட்டும்தான தெரியும்.

கசுமுச கசமுசன்னு கலவரமாகிப் போச்சு கூட்டத்துக்குள்ள.

"இதுல என்னமோ ஒரு ஏடா கூடம் இருக்கப்பா!" சலசலப்பாகுது பஞ்சாயத்து.

நெஞ்சு வெந்து போயிக் கும்பி கருகிப்பேசுறாரு கருத்தமாயி:

"ஏலே முத்துமணி... என்னிய ஏச்சாக்கூடப் பரவாயில்லடா. ஊரை ஏச்சுப் பொழைக்கிறதெல்லாம் ஒரு பொழப்பா? இந்தப் பொழப்புக்கு நீ நாண்டுக்கிட்டுச் சாகலாம்டா"

"நான் நாண்டுகிட்டுச் சாகணுமா? ஒன்னிய வெட்டி எறிஞ்சுட்டு நாண்டுகிட்டுச் சாகிறேன்"

அதுவரைக்கும் கூட்டத்துக்குள்ள கையக் கட்டி உக்காந்திருந்த சின்னப் பாண்டி, புலி மாதிரி தவ்வி எந்திரிச்சு ஆவேசமாப் பாஞ்சு அண்ணன் சட்டையப் புடிச்சுட்டான்.

"அப்பனை வெட்டறேன்னு சொல்றியே... நீ ஒரு மகனா? எனக்கு அண்ணனா?"

"எடுறா கைய... எடுறா. என் நெஞ்சுல நீயா கையி வச்சிருக்க? எல்லாம் வெள்ளைக்காரி கொடுத்த விசை வேலை செய்யுது. அமெரிக்காவுக்கு நீ போயிருவியா? அதையும் பாக்கிறேன்"

தள்ளுமுள்ளாகிப் போச்சு பஞ்சாயத்து. அண்ணன்கிட்டயிருந்து தம்பிய வெலக்கித் தாய்க்கோழி குஞ்சுக் கோழியச் சிறகுக்குள்ள அணைச்சுக் கூட்டிட்டுப் போற மாதிரி சின்னப் பாண்டியக் கூட்டிக்கிட்டு நடந்து போறாரு கருத்தமாயி.

முத்துமணி கத்துன கத்து கலவரக் கூச்சலத் தாண்டி வந்து காதுல விழுகுது.

"ஏலே அட்டணம்பட்டியில பெறந்தவனே... ஒன்னிய அமெரிக்கா போக விடமாட்டண்டா" (தொடரும்)

## "நூத்துல ஒரு தீர்ப்புய்யா; கடவுளே மனுசனுக்குச் சொன்ன மாதிரி இருக்கு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக முதல்வர் தலைமையில் போராட்டம்

## தா.பாண்டியன் தெரிவிப்பு

(சென்னை)

**ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக முதல்வர் ஜெயலலிதா தலைமையில் போராட்டம் நடைபெற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது குறித்து செய்தியாளர்களுக்கு நேற்று முன்தினம் பேட்டியளித்த அவர் மேலும் கூறியதாவது,

ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இனப் படுகொலைகள் குறித்து சர்வதேச சட்டபடி விசாரணை நடத்த வேண்டும். இலங்கையில் உள்ள அகதி முகாம்களை மூடிவிட்டு அங்குள்ள தமிழர்களை சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும்., அவர்களின் மறு வாழ்வுக்கான நலத்திட்டங்களை விரைவாக முடிக்க வேண்டும். இந்த கோரிக்கைகளை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட தேசியக்கட்சிகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே ஈழத் தமிழர்களுக்காக அதிகாரபூர்வமாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தீர்மானம் நிறைவேற்றியதோடு மட்டுமல்லாது போராட்டங்களையும் நடத்தி வருகிறோம். ஈழத் தமிழர்களுக்காக தமிழகம் முழு வதும் மாணவர்கள் போராடி வருவது வரவேற்கத்தக்கது. சமுதாய அக்கறையுடன் போராடும் உணர்வு மாணவர்களிடம் இன்னமும் இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படாமல் மாணவர்கள் அமைதியாகப் போராட வேண்டும். இல்லையெனில் போராட்டத்தின் நோக்கம் சிதைந்து விடும்.

தி.மு.கவின் முடிவு ஆறுதல் அளிக்கிறது. மத்திய அரசுக்கு அளித்து வந்த ஆதரவை வாபஸ் பெறுவது என்று தி.மு.க. எடுத்துள்ள முடிவு ஆறுதல் அளிக்கிறது.

காலம் கடந்து எடுக்கப்பட்ட முடிவு என்றாலும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான போராட்டத்துக்கு இது வலுச்சேர்க்கும் என்பதால் இதனை வரவேற்கிறோம். ஒரு வேளை கருணாநிதியின் இந்த முடிவு நாடகமாக இருந்தால் அது விரைவில் அம்பலமாகிவிடும். தமிழகத்துக்கு சுற்றுலா வரும் இலங்கை நாட்டவர்கள் மீது தாக்குதல் நடத்துவது கண்டிக்கத்தக்கது. இதுபோன்ற நட வடிக்கைகளில் யாரும் ஈடுபட வேண்டாம்.

ஐ.நா. மனிதவுரிமை பேரவையில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தில் இந்திய அரசு வலுவான திருத்தங்களை கொண்டு வந்தால் அதனை ஆதரிக்க பெரும்பான்மையான நாடுகள் தயாராக இருக்கின்றன.

இலங்கைக்கு அருகில் இருக்கும் மிகப் பெரிய நாடான இந்தியா இலங்கைக்கு ஆதரவாக இருப்பதால்தான் பல நாடுகள் அந்நாட்டுக்கு ஆதரவளிக்கின்றன. எனவே மத்திய அரசு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் வலுவான திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்றார். (அ-2)

# உயிர் ஒளி வி.கழக நிர்வாகிகள் தெரிவு

(பூந்தோட்டம்)

வலது குறைந்தோருக்கான உயிர் ஒளி விளையாட்டுக்கழகத்திற்கு நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் ஹன்டிகேப் இன்டர்நஷனல் நிறுவனம் அனைவருக்கும் விளையாட்டு எனும் திட்டத்தினூடாக வடமாகாணத்தில் முதன் முறையாக உருவாக்கிய வலது குறைந்தோருக்கான விளையாட்டுக்கழகத்திற்கு ஞாயிற்றுக் கிழமை நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய தலைவராக சு.இருதயராஜா, உப தலைவர்களாக உ.உகந்தசன், பி. மலர்விழி, செயலாளாராக ச.அரவிந்தன், உப செயலாளராக வி. ஜெயகாந்தன், பொருளாராக ப.பார்த்தீபன், விளையாட்டு அமைப்பாளராக எஸ்.திலீபன், பண்டகப் பொறுப்பாளராக யோ.சியாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை இவர்களுக்கான விளையாட்டு உபகரணத் தொகுதியும் கன்டிக்கப் இன்டநஷனல் நிறுவனத்தால் வழங்கப்படடுள்ளது. (அ-2-266)

# இந்தியாவின் கைகளிலேயே பந்து; ஜெனீவாவில் செந்தமிழன் சீமான்

ஐ.நா. மனிதவுரிமையில் வாக்கெடுப்பின் இறுதி நிமிடம் வரை தீர்மானத்தின் வரையில் மாற்றங்களை கொண்டு வரலாம் என்ற நிலையில் சுதந்திரமான அனைத்துலக விசாரணையினை அமெரிக்காவின் தீர்மானத்தின் வரைவுக்குள் உட்கொண்டு வருவது இந்தியாவின் கைகளிலேயேயுள்ளது.

இவ்வாறு ஜெனீவாவில் உள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் தமிழகத்தில் ஜெனீவா சென்றுள்ள நாம் தமிழர் கட்சி செந்தமிழன் சீமான் ஆகியோர் கூட்டாக கருத்து தெரிவித்துள்ளனர்.

இலங்கை தொடர்பிலான அமெரிக்க தீர்மானத்தின் நான்காவது வரைவு நீர்த்துப்போயுள்ளதான கருத்து உலகத் தமிழர்களை கொதிப்படைய வைத்துள்ள நிலையில் இக்கருத்தினை அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விவகாரத்தில் தீர்மானத்தினை வலுப்படுத்த இலங்கை தொடர்பில் சுதந்திரமான அனைத்துலக விசாரணையினை நோக்கியதாக இந்திய அரசின் இராஜதந்திர நகர்வுகள் அமைவதற்கு இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பது தமிழக உறவுகளின் கைகளிலேயே தங்கியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளதோடு தொலைக்காட்சிகள் வாயிலான நேரடியாக தமிழகம் நோக்கி இந்த அறைகூவலை விடுத்து வருகின்றனர். (அ-2)

# அரசாங்கத்தை தோற்கடிக்க மக்கள் காத்திருக்கின்றனர்

## சஜித் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பாரிய ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் காத்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

முழு சமூகத்தையும் அழிவடையச் செய்து வரும் இந்த அரசாங்கத்தை தோற்கடிக்க மக்கள் காத்திருக்கின்றனர்.

1977 ஆம் ஆண்டைப் போன்று பாரிய ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் முயற்சிக்கின்றனர். நாடும் மக்களும் அரசாங்கம் மிகப் பாரிய கடன் நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டை அபிவிருத்தி செய்ய போதியளவு நிதியில்லாவிட்டால் கடன் பெற்றுக் கொள்ள நேரிடும் .வறியவர்களுக்கு உதவிகளை வழங்கக் கூடிய ஓர் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்றார். (அ-2)

# தமிழகத்திற்கான விஜயத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள்

*பாதுகாப்பு செயலாளர் கோரிக்கை*

தமிழகத்திற்கான விஜயங்களை இலங்கையர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகத்தில் இலங்கையர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருவதனால் அங்கு செல்வதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்திய பாதுகாப்புத் தரப்பினர் இலங்கையர்களுக்கு போதியளவு பாதுகாப்பை வழங்கத் தவறியுள்ளனர். மத வழிபாடு மற்றும் யாத்திரைகளில் ஈடுபடும் பக்தர்கள் தமிழக விமான நிலையங்களை தவிர்த்து பயணத்தைத் தொடர முடியும்.

இலங்கையர்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பாட்டால் அரசாங்கம் என்ற ரீதியில் அதற்கு பொறுப்பு சொல்ல நேரிடும்.

இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வது தொடர்பில் இந்தியா எவ்வித உறுதி மொழிகளையும் அளிக்கவில்லை என்றார். (அ-2)

# இலங்கை சட்டத்தை யார் மீறினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## *அமைச்சர் திஸ்ஸ விதாரண*

(கொழும்பு)

இலங்கையில் சட்டத்தையும் ஒழுங்கினையும் யார் தனது சொல்லாலும் செயலாலும் மீறுகின்றனரோ அவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்று சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி தலைவர்கள் அடங்கிய மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் இதனை தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எட்டியாந்தோட்டை பொலிஸ் நிலையத்திற்கான புதிய கட்டடத்தை திறந்து வைத்ததன் பின்னர் நடந்த கூட்டத்தில் உரையாற்றும் போதே சிரேஷ்ட அமைச்சர் இந்த கருத்தை வெளியிட்டார்.

3 தசாப்தகால யுத்தம் முடிந்து விட்டது என்றாலும் இந்த நாடு இன்று புதியதொரு சவாலுக்கு முகம் கொடுத்துள்ளது. இந்த சவால் நாட்டில் இன்னுமொரு சிங்கள, முஸ்லிம் இனமுறுகலை கொண்டு வராத வகையில் பொறுப்பு வாய்ந்தவர்கள் செயற்பட வேண்டும் என்றார். (அ-2)





புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் நிகழ்வுகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிய பின் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பாடசாலை அதிபர்கள் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக கட்சிகளின் உணர்வுகளையே காங்கிரஸ் கட்சியும் கொண்டுள்ளது

(கொழும்பு)

**இலங்கைத் தமிழர் நல்வாழ்வில் தமிழக அரசியல் கட்சிகள் கொண்டிருக்கிற உணர்வைத்தான் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியும் கொண்டுள்ளது என அக்கட்சியின் தலைவர் பி.எஸ்.ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.**

மத்திய அரசில் இருந்தும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இருந்தும் தி.மு.க. விலகியமை குறித்து கருத்து வெளியிடும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தி.மு.க. விலகுவதாக கருணாநிதி அறிவித்து இருப்பது எதிர்பாராததாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை பிரச்சினையில் காங்கிரஸ் கட்சியும் அதன் தலைவர்களும் மத்திய அரசும் எப்போதுமே அக்கறை செலுத்தி வந்திருக்கின்றன.

இலங்கைத் தமிழர்களுடைய உரிமைகள் மீளக்குடியமர்த்தல், பயமற்ற வாழ்க்கை முறை இவைகளுக்கு மத்திய அரசு இலங்கை அரசுடன் பேசி தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா கொண்டு வருகிற தீர்மானத்தை கடந்த முறை இந்தியா ஆதரித்தது போல் இந்த முறையும் ஆதரிக்கும் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை.

இதற்கிடையே அந்த தீர்மானத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங், சோனியா காந்தி ஆகியோருக்கு கடந்த சனிக்கிழமை தி.மு.க. தலைவர் கருணாநிதி கடிதம் அனுப்பினார்.

கருணாநிதியின் கருத்துக்கு மதிப்பளித்து கடந்த திங்கட்கிழமையே மத்திய மந்திரிகள் 3 பேர் சென்னைக்கு வந்து கருணாநிதியுடன் பேசி அவர் தெரிவித்த கருத்துக்களை டில்லிக்குப் போய் பிரதமர் சோனியா காந்தி ஆகியோருக்கு கூறுவதாக தெரிவித்திருந்தனர்.

எல்லா அரசியல் கட்சிகளிடமும் கலந்து ஆலோசித்து முடிபு எடுக்க வேண்டிய நிலைப்பாட்டில் மத்திய அரசு இருக்கிறது.

இதற்கிடையில் மத்திய அரசில் இருந்தும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இருந்தும் விலகுவதாக கருணாநிதி நேற்று முன்தினம் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்.

இது எங்களுக்கு எதிர்பாராத அறிவிப்பாக இருக்கிறது. மாநிலங்களவையில் நான் பேசும் போது கூட இந்தியா இந்தப் பிரச்சினையை முன்னெடுத்து செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டேன்.

சல்மான் குர்ஷித் அறிக்கையில் திருத்தம் சொன்னேன். மத்திய அரசு அனைத்து அரசியல் கட்சிகளோடும் கலந்து பேசி, திருத்தங்களை பொறுத்தமட்டில் ஏனைய நாடுகளையும் கலந்து ஆலோசித்து ஒரு முடிபு எடுக்கும் என்று நம்புகிறேன் என்று தெரிவித்துள்ளார். (அ-2)

## யோகர் சுவாமிகளின் 49 ஆவது குருபூசை

(யாழ்ப்பாணம்)

யோகர் சுவாமிகளின் 49 ஆவது குருபூசை நாளை முன்னிட்டு எதிர் வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிவதொண்டன் நிலைய புராண மண்டபத்தில் சுவாமிகளின் அபிடேக ஆராதனையும் தொடர்ந்து கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் திருவடிக்கு அபிடேக ஆராதனையும் இடம்பெறவுள்ளது.

இக் குருபூசையை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை பூசை, நாள் வாய்ப்பாராயணம், நற்சிந்தனை முற்றோதல், தியானம் என்பன இடம்பெறவுள்ளதாக சிவதொண்டன் சபை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (அ-5-24)

## கரப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

(கரவெட்டி)

வடமராட்சி இமையாணன் இளைஞர் விளையாட்டு கழகத்தினால் நடத்தப்படும் யாழ். மாவட்ட ரீதியான அணிக்கு 5 பேர் கொண்ட மின் ஒளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பங்கு பற்ற விரும்பும் விளையாட்டு கழகங்கள் போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன் தமது கழகங்களை பதிவு செய்து போட்டியில் கலந்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5-24)

## காவிய நாயகன் தவக்கால ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக்கலா மன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகையான காவிய நாயகன் என்னும் யேசுவின் திருப்பாடுகளின் நாடகத் தொகுப்பு இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வரை தொடர்ந்து நான்கு நாட்கள் திருமறைகலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

இத்திருப்பாடுகளின் காட்சி வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் 6.45 மணிக்கும் வெள்ளிக் கிழமை மட்டும் 7.30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளது.

அரங்கிலும் அரங்கப் பின்னணியிலும் 200 இற்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றும் இத் தவக்கால ஆற்றுகை 50 வருடங்களாக மேடையேற்றப்பட்டு வருவதுடன் இவ் ஆற்றுகையை அருட்பணிநீ மரிய சேவியர் அடிகள் நெறிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(அ-5)

## சிறுமி மீது சிறுவன் பலாத்காரம்

வவுனியா கள்ளிக்குளத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு 4 வயதுடைய சிறுமி 14 வயதுடைய சிறுவனால் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். உறவுமுறையான இச் சிறுவனே இச் செயலில் ஈடுபட்டுள்ளதுடன் பொலிஸார் நேற்று முன்தினம் காலை சிறுவனை கைது செய்துள்ளனர்.

இதேவேளை, சிறுமி வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-266)

## தமிழர்கள் தனிஈழம் அமைக்க வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்

### வாழ்வுரிமை கட்சி மாநில தலைவர் கோரிக்கை

ராஜபக்ஷவையும் அவரது சகோதரரையும் கைது செய்ய வேண்டும். சர்வதேச விசாரணை நடத்தி தண்டிக்க வேண்டும் என தமிழ்நாடு வாழ்வுரிமை கட்சியின் மாநில தலைவர் பண்ருட்டி வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாநகரில் உள்ள வருமான வரித்துறை அலுவலகத்தை தமிழ்நாடு வாழ்வுரிமை கட்சியின் மாநில த்லைவர் வேல்முருகன் தலைமையில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான தொண்டர்கள் தமிழ் உணர்வாளர்கள் முற்றுகையிட்டனர்.

போராட்டத்தின் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டாறு தெரிவித்துள்ளார்.

பொது வாக்கெடுப்பு நடத்தி தனி தமிழ் ஈழம் அமைக்க வேண்டும். அப்போதுதான் ஈழத்தில் தமிழ் இனம் நிம்மதியாக வாழ முடியும். இதனை இந்திய அரசு செய்ய நாம் அனைவரும் ஒன்று திரண்டு போராட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## கொழும்பு- சென்னை விமான சேவை குறைக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

புத்த பிக்குகள் மீதான தாக்குதலையடுத்து கொழும்பு- சென்னை விமான சேவையை இலங்கை அரசு பாதியாகக் குறைத்துள்ளது.

தஞ்சாவூர் மற்றும் சென்னையில் சமீபத்தில் புத்த பிக்குகள் தாக்கப்பட்டனர். இதனையடுத்து கொழும்பு- சென்னைக்கு இடையேயான விமான சேவையை இலங்கை அரசு பாதியாக குறைத்துள்ளது.

ஏற்கனவே வாரத்திற்கு 28 விமானங்கள் சென்று வந்த நிலையில் தற்போது இந்த எண்ணிக்கை 14 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தமிழ்நாட்டில் புத்த பிக்குகள் மீது தாக்குதல் நடத்தப்படுவது குறித்து இந்திய அரசிடம் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது. (அ-2)

## நகை அடகு ஏலவிற்பனை

மக்கள் வங்கியினால் கடந்த பங்குனி மாதம் 16,17 ஆம் திகதிகளில் நடைபெற இருந்த நகை அடகு ஏலவிற்பனை இன்று வியாழக்கிழமை மற்றும் நாளை வெள்ளிக் கிழமை ஆகிய இரு தினங்களில் மக்கள் வங்கி, யாழ். பிராந்திய தலைமையகம், கன்னாதிட்டி மேல்மாடியில் நடைபெறவுள்ளது என மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (அ)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(புங்குடுதீவு)



அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்தவரும் புங்குடுதீவு சித்திவிநாயகர் மகா வித்தியாலய கணித பாட ஆசிரியருமான சண்முகராசா முகுந்தன் யாழ். மாவட்ட நீதவான் எ.எ. ஆனந்தராசா முன்னிலையில் யாழ்ப்பாணம் நீதி நிர்வாக வலயத்துக்கான ஒரு சமாதான நீதவானாக கடந்த 12 ஆம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

விஞ்ஞான பட்டதாரியான இவர் அச்சுவேலி மத்திய கல்லூரியின் பழைய் மாணவர் என்பதுடன் அப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கச் செயலாளராகவுமுள்ளார்.(ஏ)

## துடுப்பாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

(கரவெட்டி)

வதிரிடயமன்ட் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்படும் 6 பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட மகளிருக்கான துடுப்பாட்டப்போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வதிரிடயமன்ட் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் மகளிர் துடுப்பாட்ட அணிகள் துடுப்பாட்டம் ஆரம்பிக்கும் முன் உரிய நேரத்திற்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியின் முன்னரே அணிகளுக்கான அட்டவணை தயாரிக்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*****

(கரவெட்டி)

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் வடமராட்சி பிரதேசத்திலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான 6 பேர் பங்கு கொள்ளும் 5 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் 23, ஆம் 24 ஆம் திகதிகளில் முற்பகல் 8 மணிமுதல் பிற்பகல் 6 மணிவரை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் பங்கு பற்ற விரும்பும் அணிகள் போட்டி ஆரம்பிப்பதற்கு முன் உரிய நேரத்தில் அணிகளை பதிவு செய்து போட்டியில் பங்குபற்றுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (அ-5-24)






ஹண்டிகப் இன்ரநசனல் நிறுவனம் கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்றுவலுவுள்ளோரைச் சமூக மட்டத்தில் வைத்துப் புனர்வாழ்வளிக்கும் தொண்டர்களுக்கு கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 5 நாட்கள் பயிற்சி நெறி ஒன்றினை சோலைவனம் [illegible] ஆரம்பித்துள்ள போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத் தமிழருக்கு நீதி கிடைக்கும் வரை தொடரும் போராட்டம்

இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்தில் தேவையான திருத்தங்களை இந்திய அரசு செய்ய வேண்டும் என்ற தி.மு.க. வின் கோரிக்கையை மத்திய அரசு பரிசீலிக்காததை தொடர்ந்து ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலிருந்து தி.மு.க. விலகுவதாவும், மன்மோகன் சிங் தலைமையிலான அமைச்சரவையில் இருந்து தமது அமைச்சர்களும் விலகுவதாகவும் நேற்று முன்தினம் கருணாநிதி அறிவித்திருந்தார்.

தி.மு.க. வின் கோரிக்கையை மத்திய அரசு பரிசீலிக்காத நிலையில் தொடர்ந்து இனியும் அரசில் நீடிப்பது தமிழகத்திற்கு இழைக்கும் துரோகமாக அமையும் என்றும் வெளியில் இருந்தும் மத்திய அரசை ஆதரிக்க மாட்டோம் என்றும் தெரிவித்திருந்த அவர், இந்திய மத்திய அரசு, கூட இருந்து குழிபறிக்கிறது எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

கருணாநிதியின் இவ் அறிவிப்பு குறித்து, சோனியாகாந்தி தனது செய்தியில் மேற்படி விடயம் குறித்து பேசுவதற்கு எதுவுமில்லை என்று ஒரே போடாப் போட்டுள்ளார்.

19.03.2013 அன்று பல்வேறு திருத்தங்களுடன் வெளியான இலங்கைக்கு எதிரான அமெரிக்கப் பிரேரணை ஆரம்பத்தில் இருந்த முக்கியமான- இலங்கையை நெருக்கும் வகையில் அமைந்த பகுதிகளை, நீக்கப்பட்டு வெளியானது. இலங்கைத் தமிழர்களும் புலம்பெயர் தமிழர்களும்தமிழகத்தமிழர்களும் எதிர் பார்த்ததைவிட மிக மிக நீர்த்துப் போய் இருந்தது அமெரிக்காவின் பிரேரணை.

இதன்எதிரொலியாகவே தி.மு.க தலைவர், ஆளுங் கூட்டணியில்இருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.

இலங்கைத்தமிழர்களுக்கு ஆதர






## பலரின் உடல்நிலை கவலைக்கிடம்....!

வாக எழுச்சி கொண்டுள்ள தமிழகமும் ஏனைய அனைத்துத் தமிழ்த் தரப்புகளும் அமெரிக்காவின் தீர்மானம் குறித்து மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இந்த ஏமாற்றத்தின் வெளிப்பாடாகவே தமிழகத்தில் மீண்டும் ஓர் இளைஞன் தீக்குளித்து உயிர்த்தியாகம் செய்துள்ளார்.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான தமது போராட்டம், தமது கோரிக்கைகளை இந்தியா செவிசாய்க்கும் வரை காலவரையறையின்றி தொடரும் என்று மாணவர் அமைப்புகளும் ஏனைய போராடும் எல்லாத் தரப்பினரும் அறிவித்துள்ளனர்.

இந்திய அரசாங்கமானது, இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை யில் முன்வைக்கப்படும் தீர்மானத்தை பலவீனப் படுத்தக்கூடாது,

தமிழ் மக்கள் அவர்களது சொந்த இடங்களிலிருந்து விரட்டியடிக்கப்படக்கூடாது, இலங்கை அரசாங்கம் இதனைச் செய்வதற்கான கால் அவகாசத்தை பெறுவதற்கு முன்னர் இதன் மீதான அனைத்துலக சுயாதீன விசாரணை மேற்கொள்ளப் பட்டு, உண்மைகள் வெளிக் கொண்டவரப் பட வேண்டும், போன்ற கருத்துக்கள் ஊடகங்களில் மலிந்துள்ள இவ்வேளையில்,

மேலும் இந்த விடயத்தில் இந்தியா மிகப் பெரிய பொறுப்பைக் கொண்டள்ளது என்பதை அது விளங்கிக்கொள்ள வேண்டும், இது 70 மில்லியனுக்கும் மேற்பட்ட இந்தியத் தமிழ் மக்களின் நெஞ்சத்தைத் தொட்ட விடயம் என பல அரசியல் அறிஞர்களும் போராடும் அமைப்புகளும் உறுதிப்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில்தான் அமெரிக்காவின் பிரேரணை எந்தப் பிரயோசனமும் அற்றது என்று கருதப்படும் அளவுக்கு ஒன்றுமில்லாததாக வெளிவந்திருக்கிறது.

அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களாவன,

♦ இலங்கையின் தமிழர்கள் வாழும் பகுதியில் இராணுவத்தினரை உடனே அகற்ற வேண்டும். போரின்போது தமிழர்கள் பலர் காணாமல் போனது கவலை அளிக்கிறது.

♦ போர்க்குற்றம் தொடர்பாக இலங்கை அரசே விசாரணை நடத்த வேண்டும். எல்.எல். ஆர்.சி பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்றும் எண்ணம் இலங்கைக்கு இல்லை.

♦ இலங்கை தமிழர்களுக்கு வாழ்வாதாரம், நீதி, நல்லிணக்கம் முழுமையாக செயற்படுத்தப்படவில்லை.

♦ மக்கள் நலன் சார்ந்த அமைப்புகளை இலங்கை அரசு வலுப்படுத்த வலியுறுத்தப் படும்.

போன்றவையே பிரேரணையில் இருந்த குறிப்பிடும்படியான விடயங்களாகும்.

பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் சார்பாக மனிதாபிமானம் உள்ள அனைத்துலக அமைப்புகளும், அரசுகளும் அனைத்து தமிழர்களும், தமிழகமும் மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்தி வந்த- **போர்க்குற்றம் தொடர்பாக இலங்கை அரசை சர்வதேசம் விசாரிக்க வேண்டும்** என்ற கோரிக்கை அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணையிலிருந்து நீக்கப் பட்டுவிட்டது.

அமெரிக்கத் தீர்மானத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக, இலங்கை அரசின் எல்.எல். ஆர்.சி. யின் திட்டத்தை செயல்படுத்தும் எண்ணம் இலங்கைக்கு இல்லை என கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவே அதிலுள்ள காட்டமான விடயமே தவிர வேறெதுவும் சொல்லக்கூடிய மாதிரி அமைந்திருக்கவில்லை.

இலங்கையில் தமிழர் வாழும் பகுதியிலிருந்து இராணுவம் அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கறதே தவிர, இலங்கை இராணுவம் முற்றுமுழுதாக அகற்றப்படவேண்டும் என்ற பதம் கூட பாவிக்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறு அமெரிக்கத் தீர்மானம் உள்ளே வெறும் கோதாகக் காணப்படுவதற்கு இந்தியா திரைமறைவில் செயற்பட்டதே காரணம் என நம்பப்படுகிறது.

இந்திய மத்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு தான் வழங்குகின்ற அரசியல் ஆதரவை நியாயப்படுத்துவதற்கு ராஜீவ் காந்தியின் படுகொலையை ஒரு தனியான காரணமாக பயன்படுத்தக் கூடாது; இந்திய அரசாங்கம் இதனை நியாயப்படுத்துவது பொருத்தமற்றது. இதற்கும் மேலாக இந்திய அமைதி காக்கும் படை அப்பாவி ஈழத்தமிழர்களை பல்லாயிரக்கணக்கில் கொன்று குவித்த வரலாறும் உள்ளது என பல தரப்பாலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆனாலும் இந்தியா பொறுப்பற்றே நடந்து கொள்கிறது.

ஈழத்தில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா தனது ஆதரவை வழங்கியதானது ஒரு அவமானகரமான செயலாகும் என மனிதாபிமானத்தோடு செயற்படும் அரசியல்வாதிகளும் அறிஞர்களும் தெரிவிக்கின்றனர்.

ஈழத்தமிழர்கள் பல்லாயிரக்கணக்கில் கொலை செய்யப்பட்டதும், மத்தியில் ஆளும் காங்கிரஸ் வாளாவிருந்ததும், இந்தியாவை களங்கப்படுத்தியுள்ளதாக பலரும் கவலை தெரிவித்துள்ள நிலையிலும், தமிழக மாணவர்கள் மட்டுமல்ல இந்தியாவின் டெல்லி உட்பட ஏனைய பல மாவட்டங்களிலும் ஈழத் தமிழருக்கு ஆதரவான போராட்டங்கள் வெடித்துள்ள நிலையிலும் இந்திய அரசு இலங்கை அரசுடன் தனது உறவைப் பேணுவதற்கான திரைமறைவு தந்திரோபாய நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்பதையே ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தில் முக்கிய விடயமான இலங்கை மீதான சர்வதேச விசாரணை மேற்கொள்வதற்கான கோரிக்கை நீக்கப் பட்டிருப்பதானது காண்பிக்கிறது.

இருப்பினும் தமிழகம் இறுதிவரை பேராடும் நிலைதொடர்கிறது.

இலங்கை விவகாரம் தொடர்பில் டெல்லியில் (நாடாளுமன்றத்தில்) விவாதிக்க தி.மு.க. வினதும் அ.தி.மு.க. வினதும் சார்பில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. இரு அவைகளிலும் கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு விவாதிக்க வேண்டும் என்று தி.மு.க, அ.தி.மு.க. வினர் கோரிக்கை வைத்துள்ளனர்.

விவாதத்தைஅனுமதிக்காவிட்டால்அவையை நடத்த விடமாட்டோம் என்றும் 'எச்சரிக்கை விடப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது.

தமிழக மாணவர் அமைப்புக்கள் ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் வரை போராட்டத்தை நிறுத்தப்போவதில்லை என்ற உறுதிப் பாடான நிலைப்பாட்டில் உள்ளனர்.

தீக்குளிப்பு உண்ணாவிரதம், முற்றுகைப் போராட்டம், மறியல்போராட்டம், கதவடைப்பு என பல கோணங்களில் மாணவர் மட்டுமல்ல வழக்கறிஞர்கள் உட்பட பல வேறுபட்ட தொழிற்சங்கங்கள், சினிமாத்துறை சார்ந்த அமைப்புகள் பல கிராமங்களின் மக்கள் என ஈழ ஆதரவுப் போராட்ட எழுச்சித் தீ தமிழகம் மட்டுமல்ல அண்டை மாநிலங்களுக்கும் பரவி வருகிறது.

இலங்கை ஜனாதிபதி மகிந்தராஜ பக்சவை போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும்.

மகிந்த ராஜக்சவையும் அவரோடு சேர்ந்த குற்றவாளிகளையும்சர்வதேசநீதிவிசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.

தமிழர்களது சுயநிர்ணய உரிமையை சர்வதேசம் அங்கீகரிக்கவேண்டும். என்ற கோரிக்கைகளின் அடிப்படையில் இப்போராட்டங்கள் நீடிக்கப்படுகிறது. பல மாணவர்களது உடல் நிலை மோசமாகிவருகின்ற நிலையிலும் போராட்டங்கள் தொடர்கின்ற நிலையானது ஈழத்தமிழரை மிகவும் நெகிழ்சிக்குள்ளாக்கும் விடயமாகவும் அமைந்திருக்கிறது.

கடந்த 62 வருடங்களாக இலங்கையில் ஈழத்தமிழர் அனுபவித்துவரும் இன்னல்களுக்கு முடிவுகட்டப்படவேண்டும் என்பது போராடும் சக்திகளின் உறுதியான நிலைப் பாடாக இருக்கின்றது.

ஈழத்தில் மூண்ட விடுதலை நெருப்பு பெருந்தீயாகி முள்ளிவாய்க்காலில் சாம்பராய் அடங்கி, மீண்டும் கடல்கடந்து தாவி இந்தியத் துணைக் கண்டத்தில் மூண்டிருக்கிறது; எழுச்சித் தீப் பிளம்பாய் தமிழகம் சுவாலைவிட்டுக் கொண்டிருக்கையில் இனியும் இந்தியா கண்ணை மூடிக்கொண்டிருத்தல் சாத்தியமா? அல்லது ஈழத்தமிழர் தலையெழுத்து திருத்தியெழுதப் படும் வாய்ப்பு இனியும் உள்ளதா? காலம் பதில் சொல்லட்டும்.

**தொகுப்பு: சாருகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்குகள் மீதான தாக்குதலுக்கு அசாத் சாலி கடும் கண்டனம்

தமிழகத்தில் இலங்கையைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் மீது தொடர்ந்தும் தாக்குதல் நடத்தப்படுவதை தாம் வன்மையாக கண்டிப்பதாக தேசிய ஐக்கிய முன்னணியின் பொது செயலாளர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக அவர் கூறியுள்ள விடயங்கள் வருமாறு,

இது மிக அநாகரிகமான செயல் எனவும் தமிழ்நாட்டின் சில அரசியல்வாதிகள் வழிநடத்தும் குழுக்களே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் கலாசார மற்றும் சமய ரீதியான பிரச்சினைகள் உள்ளன என்பதை மறுக்க முடியாது.

இந்த பிரச்சினைகளின் பின்னணியில் ஆளும் தரப்பின் முக்கிய சில அதிகாரிகளின் தயவுடன் கூடிய ஒரு சில மதகுருமாரும் செயற்படுகின்றனர்.

சிறு பிரிவினர் முறைகேடாக செயற்படுகின்ற நிலையில் பெரும்பாலானவர்கள் குறிப்பாக பிரதான மதப் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட மதகுருமார் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஆதரவாக இருக்கின்றனர்.

ஏனைய இனத்தவர்களையும் அவர்கள் ஆதரித்து அரசியல் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க வேண்டும். சமய மற்றும் கலாசார சுதந்திரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

இவ்வாறான சூழ்நிலையில் அறியாமை காரணமாகவும் ஏனையவர்களால் தூண்டி விடப்பட்டதன் விளைவாகவும் பௌத்த பிக்குகள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும் என்றார். (அ-2)

# அநியாயங்களுக்கு எதிராக அமைதி வழியில் போராட்டம்

## முஸ்லிம்களை அழைக்கிறது மு.உ.அமைப்பு

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு எதிராக நாட்டில் மேற்கொள்ளப்படும் அநியாயங்களுக்கு எதிராக அமைதியான சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பே இந்த அழைப்பினை விடுத்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் மார்ச் 25 ஆம் திகதி திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் முழுநாள் கர்த்தாலை அனுஷ்டித்து எமது எதிர்ப்பினை அமைதியான முறையில் வெளியிடுவோம் என முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பு கேட்டுள்ளது.

தொடரும் இனவாதத்தை தாங்கிக் கொண்டு இன்னும் தூங்குவதா? அமைதியான ஜனநாயக முறையில் எமது எதிர்ப்பை காட்டுவோம் எனும் தொனிப்பொருளிலேயே கர்த்தால் முன்னெடுக்கப் படவுள்ளது.

இது தொடர்பிலான துண்டுப்பிரசுரம் நாடளாவிய ரீதியில் நேற்றைய தினம் முதல் விநியோகிக்கப் படுகிறது.

இதனால் நாடளாவிய ரீதியில் எமது வர்த்தக நிலையங்கள் மற்றும் அலுவலகங்கள் ஆகியவற்றை மூடி சகல விதமான செயற்பாடுகளிலிருந்தும் விலகி கர்த்தாலை அனுஷ்டிப்போம் என குறித்த துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் இலங்கை முஸ்லிம்கள் மீதான இனவாத கெடுபிடிகளை உடன் நிறுத்து, முஸ்லிம்களின் வாழ்வியல் கலாசார உரிமைகளுக்கு அச்சுறுத்தல் விடுக்காதே, சிங்கள- முஸ்லிம் சமாதானத்தை, சக வாழ்வை சீர்குலைப் போரை சட்டத்தின் முன் நிறுத்து மற்றும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்த வேண்டிய அரசாங்கமே கண்ணை மூடிக்கொண்டிருக்காதே ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பிக்குகள் மீதான தாக்குதல் எமக்கு கவலை தருகின்றது

## பொதுபலசேனா தெரிவிப்பு

இலங்கையைச் சேர்ந்த இரண்டு பௌத்த பிக்குகள் மீது இந்தியாவின் தமிழகத்தில் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவங்களின் பின்னணியில் அடிப்படைவாத முஸ்லிம் அமைப்புகள் சம்பந்தப்பட்டுள்ளனரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தமிழகத்தின் அரசியல் ஆசீர்வாதத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பு இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பு பட்டுள்ளது. தாக்குதலுக்கு உள்ளான பிக்குகள் உட்பட அனைவருக்கும் தமது கவலைகளை தெரிவித்து கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

சாதாரண மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சகல அடிப்படைவாத மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

சட்டரீதியாகவும் கொள்ளை ரீதியாகவும் போராட்டங்களை நடத்த வேண்டும். எனினும் இப்படியான சம்பவங்கள் காரணமாக சகல பௌத்த சக்திகளும் கவலையடைந்துள்ளன.

பௌத்த மக்கள் மிகவும் பொறுமையுடன் செயற்பட்டு வருகின்றன்றனர் என்பதை இந்திய அரசாங்கத்திற்கு அறிவித்து கொள்கிறோம் என்றார். (அ-2)




★ *1413*-ஐந்தாம் ஹென்றி லண்டனின் மன்னனாக முடி சூடினான்.

★ *1556*-கண்டர்பரி பேராயர் தோமஸ் கிரான்மர் ஒக்ஸ்போர்ட் நகரில் எரியூட்டிக் கொல்லப்பட்டார்.

★ *1800*-உரோம் நகரில் இடம்பெற்ற கலகங்களை அடுத்து கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர்கள் நகரை விட்டு அகற்றப்பட்டதை அடுத்து வெனிஸ் நகரில் ஏழாம் பயஸ் பாப்பரசராகப் பதவியேற்றார்.

★ *1801*-பிரித்தானியா மற்றும் பிரெஞ்சுப் படைகளுக்கிடையில் எகிப்தின் அலெக்சாந்திரியா நகரில் போர் இடம்பெற்றது.

★ *1844*-பஹாய் நாட்காட்டி அறிமுகப்படுத்தப் பட்டது. இதன்படி இந்நாள் முதலாம் ஆண்டு முதலாம் நாள் ஆகும்.

★ *1857*-டோக்கியோவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

★ *1905*-ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் தனது புகழ்பெற்ற சிறப்புச் சார்புக் கோட்பாடு கொள்கையை வெளியிட்டார்.

★ *1917*- டானிஷ் மேற்கிந்தியத் தீவுகள் கன்னித் தீவு எனப் பெயர் மாற்றம் பெற்றது.

★ *1933*-டச்சு வதை முகாம் நாசிகளின் முதலாவது வதை முகாம் ஜேர்மனியில் அமைக்கப்பட்டது.

★ *1935*-பேர்சியா நாட்டை ஈரான் (ஆரியரின் நாடு) என அழைக்கும்படி ரெசா ஷா வெளிநாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.

★ *1945*- இரண்டாம் உலகப் போர்: பர்மாவின் மண்டலாய் நகரை பிரித்தானியப் படைகள் விடுவித்தன.

★ *1948*-முகமது அலி ஜின்னா உருது மட்டுமே பாகிஸ்தானின் அரசு மொழியாக இருக்கும் என டாக்காவில் வைத்து அறிவித்தார்.

★ *1970*-முதலாவது பூமி நாளுக்கான அழைப்பை சான் பிரான்சிஸ்கோ மேயர் ஜோசப் அலியோட்டோ விடுத்தார்.

★ *1984*-மணலாறு பிரதேசத்தைத் தடைவலயமாக்கி இலங்கை அரசினால் அங்கிருந்த தமிழர்கள் வெளியேற்றப்பட்டனர்.

★ *1990*- 75 ஆண்டுகால தென்னாபிரிக்க ஆட்சியிலிருந்து நமீபியா விடுதலை பெற்றது.

★ *1994*-ஸ்டீவன் ஸ்பில்பேர்க் இயக்கிய Schindler's List ஏழு ஒஸ்கார் விருதுகளை வென்றது.

★ *1998*-புனித வெள்ளி உடன்பாடு வடக்கு அயர்லாந்தில் எட்டப்பட்டது.

**பிறப்புக்கள்**

★ *1768*- ஜோசப் ஃபூரியே, பிரெஞ்சுக் கணிதவியலாளர் (இ.1830)

★ *1807*-சைமன் காசிச்செட்டி, 202 தமிழ்ப் புலவர்களின் வரலாறு கூறும் தமிழ் புளூட்டாக் நூலை எழுதிய ஈழத்தவர்

★ *1922*-முஜிபுர் ரகுமான், வங்காளதேசப் பிரதமர் (இ.1975)

★ *1923*-என். மகாலிங்கம், தமிழகத் தொழிலதிபர்


★ *1932*-வால்டர் கில்பேர்ட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர்

**சிறப்பு நாட்கள்**

★ உலக வன தினம்

★ உலக செய்யுள் தினம்- யுனெஸ்கோ

## சைமன் காசிச்செட்டி



தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட கொழும்பு செட்டிமார் குடும்பமொன்றில் 1807 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி இலங்கையின் மேற்குக் கரையில் உள்ள புத்தளம் என்னும் நகருக்கு அண்மையில் கற்பிட்டியில் கவிரியேல் காசிச் செட்டியின் புதல்வராகப் பிறந்தார்.

இன்று சிங்களப் பிரதேசமாக மாறிவிட்ட இப்பகுதி அக்காலத்தில் பெருமளவு தமிழர் வாழ்ந்த பகுதியாக இருந்தது. இளம் வயதிலேயே தனது தாய்மொழியான தமிழ், சகோதரமொழியான சிங்களம், அக்காலத்து ஆட்சி மொழியான ஆங்கிலம் என்பவற்றைக் கற்றுப் புலமை எய்தினார்.

1838 இல் கோல்புறூக் சீர்திருத்தத்தின் அடிப்படையில் நிறுவப்பட்ட சட்டசபையில் தமிழ் பேசும் மக்களுக்கான உறுப்புரிமை வெற்றிடமானபோது சைமன் காசிச்செட்டி இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றார். 1845 ஆம் ஆண்டு வரை அங்கத்தினராகத் திகழ்ந்தார். பின்பு 1848 ஆம் ஆண்டு முதலாக தற்காலிக நீதிபதியாகவும் 1852 ஆம் ஆண்டு முதல் நிரந்தர நீதிபதியாகவும் விளங்கினார்.

தனது அரசுப் பணிகளுக்கு மத்தியிலும் இவர் தமிழ் மொழி வளர்ச்சிக்கு மிகுந்த தொண் டாற்றினார். தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்கள் பற்றி எழுதியதோடு தமிழ்–வடமொழி அகராதி, ஆங்கில –தமிழ் அகராதி, தமிழ்த் தாவரவியல் அகராதி என்னும் நூல்களைத் தயாரித்தார். யாழ்ப்பாணத்தின் வரலாறு, பரதவர்குல வரலாறு, தமிழ் நூல்களின் பட்டியல், தமிழர் சாதிப் பகுப்புமுறை, தமிழர் சடங்கு முறைகள் ஆகிய நூல்களையும் எழுதினார்.

இவர் எழுதிய நூல்களுள் இன்னொரு முக்கியமான நூல் தமிழ் புளூட்டாக் (Tamil Plutarch) என்னும் பெயரில் இவர் எழுதிய 202 தமிழ்ப் புலவர்களின் வரலாறு கூறும் நூலாகும். தமிழ்ப் புலவர் வரலாறு கூற எழுந்த முதல் நூல் இதுவே என்று கூறப்படுகின்றது. இவருடைய ஏனைய நூல்களைப் போலவே இதையும் அவர் ஆங்கிலத்திலேயே எழுதியுள்ளார். தமிழிற்கு பெரும் பணியாற்றிய இவர் 1860 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி இன்னுயிர்நீர்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குங்கள்; அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு கடிதம்

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிப்படைந்தவர்களுக்கு நிவாரணம் வழங்க ஆவன செய்யுமாறு கோரி வர்த்தக கைத்தொழில் அமைச்சரின் இணைப்பு செயலாளர் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை எழுதி அனுப்பி வைத்துள்ளார் என மாவட்ட கமக்காரர் அமைப்பின் செயலாளர் வேலாயுதம் இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில் ,

வவுனியா மாவட்ட கமக்காரர் அமைப்பு வன்னி அபிவிருத்தி குழு தலைவரும் வர்த்தக கைத்தொழில் அமைச்சருமான ரிசாட் பதியுதீனிடம் வெள்ளத்தால் பாதிப்படைந்த விவசாயிகளின் நிலை குறித்தும் அதற்கான நிவாரணத்தை பெற்றுதருமாறும் விடுத்த கோரிக்கைக்கு இணங்கவே இக்கடிதம் அமைச்சரின் உத்தரவின் பேரில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளம் காரணமாகவும் இவ்வாண்டு பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இது வரை நிவாரணங்கள் வழங்கப்படாமையினால் வவுனியா மாவட்ட விவசாயிகள் பெரும் கடன் சுமையை எதிர்கொண்டிருப்பதாகவும் மாவட்ட கமக்காரர் அமைப்பின் செயலாளர் தெரிவித்தார். (அ-2-266)

# இலங்கையர்கள் பாதுகாப்பு குறித்து தூதுவர்களுக்கு ஆலோசனை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் நாட்டில் இலங்கையர்கள் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பில் இந்திய அரசுக்கு கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளோமென அமைச்சர் ஜீ.எல்.பிரீஸ் தெரிவித்தார்.

இந்தியாவில் இரு பிக்குமார் மீது தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ரவி கருணாநாயக்க எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் கூறியதாவது,

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் உரிய சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேலும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் உயர்ஸ்தானிகருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளுக்கு செல்லும் இலங்கையரின் பாதுகாப்பு மற்றும் விடயங்கள் தொடர்பில் வெளிநாட்டு தூதுவர்களுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கி வருகிறோம்.

கடந்த ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி குவைத்தில் வைத்து பாடகி நந்தா மாலனிக்கு ஏற்பட்ட அசௌகரியம் குறித்து தயாசிறி ஜயசேகர எம்.பி. கேள்வி எழுப்பினார். மேற்படி சம்பவம் குறித்து தூதரகத்தினூடாக விசாரணை நடத்தப்பட்டதாகவும் நந்தா மாலனி எம்.பிக்கு ஏற்பட்ட அசௌகரியம் தொடர்பில் கவலை தெரிவிக்கப்பட்ட தாகவும் அமைச்சர் கூறினார்.

அவருடன் சென்ற இசைக்குழுவின் உபகரணங்கள் சேதமாக்கப்பட்டதை அனுமதிக்க முடியாது எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் ஏற்படாது தடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# மல்லாகம் நீதிமன்றில் பகிரங்க ஏலவிற்பனை

(மல்லாகம்)

மல்லாகம் மாவட்ட நீதவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிள்களும் துவிச்சக்கரவண்டிகளும் வேறு சில பொருட்களும் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படவுள்ளன.

மேற்படி பொருட்களை அன்றைய தினம் அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும் எனவும் ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களுக்கு உடன் பணம் செலுத்தி நீதிமன்றவளவிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும்.

பொருட்களை ஏலத்தில் கோருபவர்களை தேசிய அடையான அட்டையினை கொண்டு வருமாறு பதிவாளர் அறிவித்துள்ளார். (அ-2)

# முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் குறித்து முஸ்லிம் அமைப்பு கவலை

சவுதி அரேபியாவின் ஜெத்தா நகரை தளமாகக் கொண்டு இயங்கும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு கவலை வெளியிட்டுள்ளது.

இந்த அமைப்பு 57 நாடுகளில் தமது உறுப்பினர்களை கொண்டு இயங்குகிறது.

இலங்கையில் இனங்கள் இடையே முறுகல் ஏற்பட்டுள்ளதாகவும் அதனால் இஸ்லாமியர்களுக்கும் அவர்களது வர்த்தகத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதென இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு இலங்கை அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் மத்திய மலைநாட்டில் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் புவெலிக்கட பகுதியில் இனமுறுகல் பதற்றம் நிலவுவதாக அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கண்டியில் இருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள முஸ்லிம் நகரமான புவெலிக்கடவுக்கு பேருந்தில் சென்ற இளைஞர் குழு அங்குள்ள முஸ்லிம்களை அச்சுறுத்தி அவர்களது வர்த்தக நிலையத்திற்கு சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அனுப்பப்பட்டு நிலைமை அமைதிக்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தி.மு.கழகம் நல்ல மேடை; கருணாநிதி நல்ல நடிகன்

## சுப்பிரமணிய சுவாமி கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை மேற்கொள்ளாததால் மத்திய அரசுக்கான ஆதரவை தி.மு.க விலக்கிக் கொள்வதாக அறிவித்திருப்பதை நாடகம் என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான அமெரிக்க தீர்மானத்தில் இந்தியா வலுவான திருத்தங்களை மேற்கொள்ள தி.மு.க வலியுறுத்தியது. ஆனால் தி.மு.கவின் கோரிக்கைகளை மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை. இதனால் அதிருப்தி அடைந்த தி.மு.க ஏற்கனவே அறிவித்தபடி மத்திய அரசில் இருந்தும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலிருந்தும் விலகியுள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த சுப்பிரமணிய சுவாமி, தி.மு.கவின் முடிவு ஆச்சரியப்படக்கூடியது அல்ல. இது நல்ல நாடகம் அவர்கள் ஜெயலலிதாவைக் கண்டு பயப்படுகின்றவர்கள்.

அடுத்த ஒரு வாரத்திலோ அல்லது ஒரு மாதத்திலோ மீண்டும் மத்திய அரசில் தி.மு.க இடம்பெறக்கூடும். மதவாதக் கட்சி ஆட்சிக்கு வரக்கூடாது ஏன்று கூறிக்கொண்டு மீண்டும் மத்திய அரசில் தி.மு.க சேரும். இதுதான் நடைபெறப் போகிறது என்றார். (அ-2)

# ஏழு கிராம சேவகர் பிரிவுகளில் நிரந்தர கிராமசேவகர்கள் இல்லை

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 19கிராமசேவகர் பிரிவில் ஏழு கிராம சேவகர் பிரிவில் நிரந்தர கிராமசேவகர் இல்லாத நிலையில் வெற்றிடமாக இருப்பதால் அப்பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருவதாக அப்பகுதி பொது அமைப்புக்கள் கவலை தெரிவிக்கின்றன.

இப்பகுதிகளில் பதில் கடமையாற்றுவதற்கு வேறு பகுதிகளைச் சேர்ந்த அலுவலர்கள் பணிக்கப்பட்டிருப்பதால் தமது பகுதி கடமையோடு மேலதிகமாக அடுத்த பிரிவுக் கடமையை செய்வதில் பல்வேறு சிரமங்களை அடைவதோடு மக்களும் தமது சேவைகளை பெறமுடியாமல் அல்லல்படுவதாக மேலிடங்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

முற்றுமுழுதாக இடம்பெயர்ந்து மீளக் குடியேறிய இப்பகுதிகளில் நிரந்தமான கிராம சேவக அலுவலர்களை நியமிக்க வேண்டுமென கோரிக்கை விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2-84)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

யா/புத்தூர் மடிஹே பஞ்சசீஹ வித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் வித்தியாலய அதிபர் கு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் அச்சுவேலி கிளை முகாமையாளர் திருமதி றொ.தவநாயகம், புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் வீ.கோபாலதாஸ், புத்தூர் கிழக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கோ.அனுதர்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இப்பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த 6 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நிலையில் காலநிலை சீரின்மையால் இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# தி.மு.கவின் பதவி விலகலால் குதூகலித்த தொண்டர்கள்

(சென்னை)

மத்திய அமைச்சரவையிலிருந்தும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலிருந்தும் தி.மு.க விலகும் என்று கருணாநிதி அறிவித்துள்ளார்.

இந்தத் தகவல் அறிந்ததும் அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. தொண்டர்கள் பெருமளவில் திரண்டனர். பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கினார்கள்.மேளதாளம் முழங்க நடனமாடினார்கள்.

மேலும் தி.மு.க தலைவர் கருணாநிதி, பொருளாளர் மு.க.ஸ்டாலின் ஆகியோருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாளவன், மனிதவுரிமை ஆணைய நிர்வாகி அனந்த பத்மநாபன் உள்ளிட்டோர் கருணாநிதிக்கு தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தனர். தமிழகம் முழுவதும் தி.மு.க.வினர் இனிப்பு வழங்கியும் பட்டாசு வெடித்தும் கொண்டாடியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



இலங்கை அரசாங்கத்திற்கெதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைக்கூட்டத் தொடரில் அமெரிக்காவினால் கொண்டு வரப்படவுள்ள பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றைய தினம் யாழ். நகரில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற்றபோது....

(படங்கள்: எஸ்.ஆர் கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் தொடர் குண்டு வெடிப்பு! 56 பேர் உயிரிழப்பு; 240 பேர் காயம்



(பக்தாத்)

ஈராக் நாட்டு தலைநகர் பக்தாத்தில் நேற்று பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட கார்க் குண்டு தாக்குதலில் இராணுவ வீரர்கள் உட்பட 56 பேர் பலியானதுடன் 240 பேர் வரை படுகாயம் அடைந்துள்ளனர்.

ஈராக் நாட்டில் இருந்து அமெரிக்க இராணுவம் வாபஸ் பெற்ற பின்னர் அங்கு தீவிரவாதிகளின் தாக்குதல் நீடிக்கிறது. குறிப்பாக ஷியா பிரிவினர் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களில் வெடிகுண்டுத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதால் இதில் நாள்தோறும் பலர் உயிரிழந்து வருகின்றனர்.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்து நேற்றுடன் 10 ஆண்டுகள் நிறைவடைகிறன. இந்நிலையில் தலைநகர் பக்தாத்தில் நேற்று பல்வேறு இடங்களில் கார்க் குண்டு வெடிப்பும் தற்கொலைப்படைத் தாக்குதலும் நிகழ்த்தப்பட்டுள்ளன.

பக்தாத் நகரில் மக்கள் நடமாட்டம் மிகுந்த சந்தைப் பகுதி அருகே கார்க் குண்டு வெடித்தது. இதனையடுத்து உணவக விடுதியொன்றில் குண்டு வெடித்தது. குறித்த பகுதியில் முக்கிய அரசு அலுவலகங்களும் அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட பல்வேறு நாடுகளின் தூதரகங்கள் அமைந்துள்ளன.

அங்கு நடத்தப்பட்ட குண்டுவெடிப்பில் 2 இராணுவ வீரர்கள் உட்பட 6பேர் உயிரிழந்துள்ளனர்.15 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

தொடர்ந்து சட்ரி என்ற இடத்தில் பாரவூர்தியில் வந்த தற்கொலை குண்டுதாரியால் பொலிஸ் மையம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இவ்வாறு நேற்று ஒரே நாளில் 8 இடங்களில் குண்டுகள் வெடித்தன.

இந்த குண்டு வெடிப்புக்களில் மொத்தம் 56 பேர் பலியானதோடு 240 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இந்த தாக்குதலுக்கு எந்தப் போராளி அமைப்பும் பொறுப்பு ஏற்காவிட்டாலும் அல்கொய்தா இயக்கமே இத்தாக்குதலை நடத்தியிருக்கும் என கருதப்படுகிறது. (அ-5)

# புத்திசாலி குழந்தைகளை உருவாக்கும் முயற்சியில் சீனா

உலகில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக சக்திமிக்க நாடாக உருவாக சீனா தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

இதற்காக அறிவியல் வளர்ச்சியில் முக்கிய மைல் கல்லாக அமையும் ஒரு ஆராய்ச்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.


சீன விஞ்ஞானிகள் உலக அளவில் புத்திசாலியான 2 ஆயிரம் நபர்களின் டி.என். ஏக்களை சேகரித்துள்ளனர்.

இதைக் கொண்டு மரபியல் கூறுகளை தீர்மானிக்கும் ஜீன்களை கண்டறியும் ஆராய்ச்சியில் பீஜிங் மரபியல் கழக விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆராய்ச்சியில் வெற்றி பெற்றால் பெற்றோர்கள் சிறப்பான கரு முட்டையை தேர்ந்தெடுத்து அறிவுக்கூர்மை மிக்க குழந்தைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

சீனாவில் ஒரு தம்பதி ஒரு குழந்தை மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே, அக்குழந்தைகளை புத்திசாலிகளாக பெற்றெடுக்க சீனா இது போன்ற ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (அ-2)



போப் முதலாம் பிரான்சிஸ் இன் பதவியேற்பு விழா சென். பீட்டஸ் தேவாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. 10 இலட்சம் பேர் பங்கு கொண்டனர். இதில் கருத்து வெளியிட்ட போப் ஏழைகளையும் இளைஞர்களையும் பாதுகாப்பதே எனது முதற்பணி என குறிப்பிட்டார்.

# அசாத்தின் மாளிகையை நோக்கி சரமாரியான பீரங்கி குண்டுவீச்சு

(பெய்ரூட்)

சிரியாவில் அந்நாட்டு ஜனாதிபதி அசாத்திற்கு எதிராக கிளர்ச்சி நடைபெற்று வரும் நிலையில் சிரிய ஜனாதிபதி மாளிகையை நோக்கி சரமாரியாக பீரங்கி குண்டு வீச்சு நடத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்கு எதிரான கிளர்ச்சியின் 2 ஆண்டு நிறைவையொட்டி கிளர்ச்சிப்படையினர் தலை நகர் டமாஸ்கஸ் பகுதியில் கடும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த தாக்குதலின் ஒரு பகுதியாகவே ஜனாதிபதி மாளிகை நோக்கி பீரங்கிகள் மூலம் பலமுறை சக்தி வாய்ந்த குண்டுகளை வீசியதாக கிளர்ச்சிப் படையினர் தங்கள் இணையத்தளம் மூலம் தெரிவித்துள்ளனர். எனினும் அதில் சேதம் ஏற்பட்டதா? என்ற விபரம் எதுவும் அதில் குறிப்பி டப்படவில்லை

மனித உரிமை ஆர்வலர்கள் ஜனாதிபதி மாளிகை அருகே பல முறை குண்டுகள் விழுந்தன என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். எனினும் அதில் பெரும் சேதம் அல்லது உயிர்ச்சேதம் ஏற்பட்டதா? என்பது குறித்து தெரியாது என கூறியுள்ளனர்.

இந்நிலையில் ஜனாதிபதி அசாத்தை எதிர்க்கும் சிரிய தேசிய ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் இஸ்தான்புல் நகரில் நடைபெற்றது. அதில் தங்களது பிரதமராக ஹாசன் ஹிட் டோவை தேர்தெடுத்தனர். மொத்தமுள்ள 50 பிரதிநிதிகளில் அவரை 35 பேர் ஆதரித்து வாக்களித்தனர்.

இதேவேளை, இக்கிளர்ச்சியில் இதுவரையிலும் 7 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (அ-5)

# நிலநடுக்கம் காரணமாக தங்கமாக மாறும் தண்ணீர்

நில நடுக்கத்தால் பூமிக்கு அடியில் இருக்கும் நீர் தங்கமாக மாறுவதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் சார்பில் பூமியில் நிலந டுக்கத்தால் ஏற்படும் மாற்றங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்ட போதே மேற்படி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு முறை நிலநடுக்கம் ஏற்படும் போதும் நீர் மூலக்கூறுகள் தங்கமாக மாற்றம் அடைவதாக இந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது மேலும் நிலநடுக்கத்தால் பூமியின் அடிப்பகுதியில் உள்ள நீர் அதிக அழுத்தத்துக்கு உட்படுகிறது. இதனால் நீர்மூலக்கூறுகள் வேதியியல் மாற்றத்துக்கு உள்ளாகின்றன.

இந்த மாற்றம் பூமியின் மத்திய பகுதியில் நிலவும் அதிக வெப்பத்தின் காரணமாக மேலும் சில தனிமங்களுடன் வேதி செயற்கையில் ஈடுபடுகின்றன. இதனால் பல மாற்றங்களுக்கு பின் நீரானது தங்கமாக மாறுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சாதாரணமாக இந் நிகழ்வு சில ஆயிரம் ஆண்டுகளுக்கு பின் நடைபெறுகிறது. ஆனால், நியூசிலாந்தில் நிலவும் சாதகமான தட்ப வெட்ப நிலையின் காரணமாக வெகு விரைவிலேயே இந்த மாற்றம் நிகழ்கிறது.

சில நூறு ஆண்டுகளுக்கு பின் நியூசிலாந்தில் ஏராளமான தங்க சுரங்கங்கள் உருவாவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று மேலும் இவ் ஆய்வில் கூறப்பட்டுள்ளது. (அ-5)

# பல்கலைக்கழக புதிய...

(6 ஆம் பக்கத்தொடர்ச்சி)

✷ உங்கள் பலம் (உங்களை வலுப்படுத்துவண) யாது?

✷ உங்கள் பலவீனம் (உங்களை பின்வாங்கச் செய்வண) யாது?

✷ உங்களது நாட்டம் (Interest) எது?

✷ உங்களது முன்னுரிமை (prioritest) யாவை?

✷ உங்கள் கற்கும் நேர ஒழுங்கு உத்தகையது?

✷ எப்படிப்பட்டவர்களை உங்களுக்குப் பிடிக்கும்?

✷ உங்களுக்கு "முன்மாதிரி" (Role model) யாரும் உள்ளனரா?

✷ நான்கு வருடத்தின் பின் நீங்கள் எப்படி இருப்பீர்கள்?

இப்படிப்பட்ட கேள்விகளை உங்களிடமே கேட்டதுண்டா? அப்படிக் கேட்டிருந்தால் அவற்றுக்கான பதில்கள் கிடைத்தனவா? அத்தகைய பதில்களில் நீங்கள் திருப்தி அடைந்ததுண்டா?

உங்களது செயற்பாடுகளை நீங்களே மெச்சும்படியும் மற்றவர்கள் உங்களை முன்மாதிரியாக கொள்ளும்படியும் எவ்வாறு நடந்து கொள்வது? சில விடயங்களில் அக்கறை காட்டுவோம்.

(1) முன்னுரிமைகளை தீர்மானித்தல்

எங்கள் நேரத்தையும் செயல்களையும் கவனமாக தொடர்புபடுத்த வேண்டும். எவை முதலில், ஏன் முதலில் செய்யப்பட வேண்டும் என்பதில் தெளிவாக இருத்தல் வேண்டும். எல்லாச் செயல்களும் ஒரே மாதிரியானவையல்ல. இதில் தெளிவு தேவை.

⅄ எவை மிகவும் அவசியமானவை?

⅄ எவை மிகவும் அவசரமானவை?

அவசியமானவற்றுக்கு பின்னும் அவசரமானவற்றுக்கு முன்னும் மதிப்பு கொடுத்தல் வேண்டும்.

மற்றவர்களின் எல்லாக் கோரிக்கைகளையும் நாம் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமா? "ஆம்" (yes) என்று சொல்வதன் முன் பல தடவை சிந்திக்க கற்றுக்கொள்ளுங்கள்.

சிலவேலைகளை வேறொருவரிடம் கையளித்தல் சாத்தியமா? அதற்குரியதாக ஒரு நண்பரை அல்லது சகோதரரை தயார் செய்து கொண்டிருக்கிறீர்களா?

குறுங்காலத்திலும் நீண்ட காலத்திலும் முக்கியமானவை எவை என்பதையும் தெளிவாக தீர்மானிக்க கற்றுக்கொள்ளுங்கள்.

(II) சரியாக செய்வதை உறுதிப்படுத்துதல்

எந்த தேவைக்காக சில செயற்பாடுகளை மேற்கொள்கிறீர்களோ அதன் விளைவுகளைப் பரிசோதி[illegible] பரிசோ திப்பதற்குரிய [illegible] கவனமாக தீர்மானித்துக் கொள்ளுங்கள்

(III) நேரத்தை கவனமாக கையாளுங்கள்

உங்கள் செயல்களின் முன்னுரிமைகளுடன் நேரத்தை கவனமாக ஒதுக்கீடு செய்யுங்கள். விரயங்களை விலக்கிக்கொள்ள வேண்டும். இதற்கு இரண்டு நுட்பங்களுக்கு உங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

⅄ உங்கள் நேரத்தை எவ்வாறு செலவிட திட்டமிடுகிறீர்கள். ஒவ்வொரு நிமிடமும் கவனமாகவே ஒதுக்கீடு செய்யப்படுவதை திட்டமிடுங்கள். நேரச்சிட்டை ஒன்றை தினமும் தயாரித்து அதன்படி செயற்படுங்கள்.

⅄ நாளாந்தம் அல்லது வாராந்தம் நீங்கள் செலவு செய்த நேரம் பற்றிய பகுப்பாய்வைச் செய்து தவறுகளை விலக்கிக் கொள்ளுங்கள்.

(IV) மன அழுத்தத்தை தவிர்த்தல்

முன்னுரிமையும் நேரமும் தவறாகும் போது மன அழுத்தம், பரபரப்பு, நிதானமின்மை ஏற்படுகின்றது.

உங்களுக்கு மன நெருடல்களைத் தரும் ஆட்களையும் நிலைமைகளையும் தொடர்புகளையும் உங்கள் பழக்கங்களையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

(V) உங்களது ஆளுமையை நிலைநிறுத்துங்கள்

நியாயமற்றவற்றை கண்ணியமாக நிராகரித்து விடுங்கள். தவறு களிலிருந்து விலகியிருங்கள். உங்கள் கருத்துக்கள் மற்றும் கொள்கைகளில் உறுதியாயிருப்பதை மற்றவர்கள் உணரும்படி நடந்து கொள்ளுங்கள். கவனமாக மற்றவர்களுடன் கதையுங்கள். தவறானவர்களுக்கு உதவி செய்யாதீர்கள். வெளிப்படையாகவும் நேர்மையாகவும் நிதான உணர்வுடனும் எப்போதும் செயற்படுங்கள்.

முயன்று பாருங்கள். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் போது வெற்றிகளும் மகிழ்ச்சிகளும் உங்களிடம் நிறைந்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான பிரேரணையை பலவீனப்படுத்தியது இந்தியா தான்

## விஜயகாந்த் கடும் விசனம்

**ஐ.நா. சபையில் மனிதவுரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள கடுமையான தீர்மானத்தை இந்தியாவும் இலங்கையும் சேர்ந்து பலவீனப்படுத்தி விட்டன. பலவீனப் படுத்தப்பட்ட இந்த அமெரிக்க தீர்மானத்தை இந்தியா ஆதரித்தால் அதில் ஒன்றும் வியப்பில்லை. அதனால் பலனும் இல்லை. ஆனால், இத்தகைய தீர்மானத்தின் மூலம் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்குமா? என்பதே கேள்வியென தே.மு.தி. கட்சி தலைவர் விஜயகாந்த் கேள்வியெழுப்பியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசு தமிழ் இனத்திற்கு எதிராக மூன்று வகையான குற்றங்களை இழைத்து இருக்கிறது. ஒன்று மனிதவுரிமை மீறல், இரண்டாவது போர்க்குற்றம், மூன்றாவது இனப்படுகொலை.

தற்பொழுது ஐ.நா. மன்றத்தின் சார்பில் ஜெனீவாவில் மனிதவுரிமைக் குழுவின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் மனிதவுரிமை மீறல் பற்றி மட்டுமே பேசப்படுகிறது.

அமெரிக்கா இக்கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக முதலாவதாக ஒரு தீர்மானத்தை முன் மொழிந்தது. அதில் சுதந்திரமான நம்பத்தகுந்த சர்வதேச விசாரணையும் ஐ.நா. மன்ற அதிகாரிகள் இலங்கை அரசின் சம்மதம் இல்லாமலேயே சென்று விசாரிக்கவும் வகை செய்தது.

இன்று வாக்கெடுப்பு நடைபெறவுள்ள நிலையில் அமெரிக்காவின் இறுதித் தீர்மானத்தில் இந்த இரண்டு அம்சங்களும் நீர்த்துப் போக செய்துள்ளனர்.


இலங்கை அரசின் அனுமதி பெற்று தான் அங்கு விசாரணை நடத்த வேண்டும் என்றும் ஐ.நா. அதிகாரிகள் செல்ல வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. முதலில் கொண்டு வந்த தீர்மானத்தை பலவீனப்படுத்தியதின் பின்னணியில் இந்தியாவும் இலங்கையும் உண்டு.

ஒரு நாட்டின் இறையாண்மையில் தலையிடக் கூடாது என்பதை பலமாக இந்தியா ஆரம்பம் முதல் வற்புறுத்தி வருவதனால் இந்தியாவின் கருத்தை ஏற்றுஅமெரிக்கா இந்தத் திருத்தத்தை செய்துள்ளது.

ஆகவே திருத்தம் செய்யப்பட்ட அமெரிக்க தீர்மானத்தை இந்தியா ஆதரித்தால் அதில் ஒன்றும் வியப்பில்லை. அதனால் பலனும் இல்லை. ஆனால் இத்தகைய தீர்மானத்தின் மூலம் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்குமா என்பது தான் கேள்வி.

எவ்வகையிலும் சிங்கள இனவெறி அரசிற்கு பாதகம் இல்லாமல் பார்த்துக் கொள்வதிலேயே இந்திய அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

இதை நன்கு உணர்ந்த தமிழ்நாட்டு மாணவர்கள் இன்று இத்தகைய வஞ்சகப்போக்கை எதிர்த்து நாடு முழுவதும் அறப் போராட்டத்தில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர்.



மாணவர்களின் தூய்மையான நோக்கம் நிறைவேறும் என்பதை கடந்த 1965 ஆம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்பு போராட்டத்திலே நாம் கண்டோம். அதேபோன்று இன்றும் பாதிக்கப்பட்ட தமிழீழ இனமக்களுக்கு உண்மையான பரிகாரம் தேடும் வரையில் மாணவர் போராட்டம் ஓயாது என்பதை நாம் நன்கு உணர முடிகிறது.

ஒரு குடும்பத்திற்கு பாதுகாப்பு சொந்த வீடு, ஒரு இனத்திற்கு பாதுகாப்பு சொந்த நாடு. ஆகவே தங்களுக்கென ஒரு தாய் நாடு வேண்டுமென்று போராடும் தமிழர்கள் பக்கம் மாணவர்கள் சக்தி திரண்டு எழுந்துள்ளதை தே.மு.தி.க சார்பில் நான் முழு மனதோடு வரவேற்று ஆதரிக்கிறேன்.

எனவே இப்பொழுது கிடைத்திருக்கிற இந்த வாய்ப்பை பயன்படுத்தி ஈழத் தமிழர்களின் இலட்சியம் நிறைவேற அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்று கூறியுள்ளார். (அ-2)

## மத்தியரசிலிருந்து விலகுவது குறித்து ஜனாதிபதிக்கு ஏன் அறிவிக்கவில்லை?

### தி.மு.கவை கேட்கிறது சமாஜ்வாடி கட்சி

(புதுடில்லி)

ஈழத்தமிழர்களிற்காக மத்திய அரசிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ள போதும் இதுவரையில் விலகல் குறித்து ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளதா என சமாஜ்வாடி கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

தி.மு.க.வின் மத்திய அரசிலிருந்தான விலகல் குறித்து கருத்து வெளியிடும்போதே சமாஜ்வாடி கட்சியின் மூத்த தலைவர் ராம்கோபால் யாதவ் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

இலங்கை தமிழர் பிரச்சினையில் மத்திய அரசின் மெத்தன போக்கை கண்டித்து அரசில் இருந்தும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இருந்தும் உடனடியாக விலகுவதாக தி.மு.க நேற்று முன்தினம் காலை அறிவித்திருந்தது.

இந்நிலையில் அந்த கட்சிக்கு பாராளுமன்ற மக்களவையில் 18 எம்.பிக்கள் உள்ளனர். இதேவேளை '22 எம்.பிக்களை கொண்ட முலாயம்சிங் யாதவ் தலைமையிலான சமாஜ்வாடி கட்சி மத்திய அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்கி வருகிறது.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், அரசுக்கு அளித்து வந்த ஆதரவை யாரும் விலக்கிக் கொள்ளவில்லை. மத்திய அரசை மிரட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சி இது. மத்திய அரசு ஸ்திரமாக இருக்கிறது.

தி.மு.க மத்திய அரசுக்கு ஆதரவை வாபஸ் பெறவும் இல்லை. வாபஸ் பெற விரும்பவும் இல்லை என்று குறிப்பிட்டதோடு விலகல் குறித்து ஜனாதிபதிக்குஎழுத்து மூலமாக தி.மு.க எதுவும் கொடுத்திருக்கிறதா என்றும் ராம்கோபால் யாதவ் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிராக பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டால் சமாஜ்வாடி கட்சி ஆதரிக்குமா என்ற கேள்விக்கு முதலில் தீர்மானம் வரட்டும். பின்னர் அதுபற்றி பார்க்கலாம் என்று அவர் பதிலளித்துள்ளார். (அ-5)



டில்லி வந்துள்ள எகிப்து ஜனாதிபதி முகமது மோர்சியை பிரதமர் மன்மோகன்சிங், ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஆகியோர் வரவேற்பதை படத்தில் காணலாம்.

## இந்தியா-எகிப்து இடையே 7 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(புதுடில்லி)

இந்தியாவிற்கும் எகிப்திற்கும் இடையில் 7 புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இந்தியா வந்துள்ள எகிப்து ஜனாதிபதி முஹம்மது மோர்சி பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோர் இந்தியா-எகிப்து நட்புறவை பலப்படுத்தும் வகையில் நேற்று முன்தினம் 7 புதிய ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளனர்.

பிரதமர் மன்மோகன்சிங்கை கண்ணியத்திற்குரிய சகோதரர் என வர்ணித்த மோர்சி இந்தியாவுடன் அனைத்து துறைகளிலும் எகிப்து ஒன்றிணைந்து செயலாற்றும் என கூறியுள்ளார்.

நதிக்கரைகளை உலக பொருளாதார மண்டலமாக தரம் உயர்த்தும் எகிப்து அரசின் புதிய திட்டத்தின் படி அந்நாட்டில் உள்ள 200 கிலோ மீற்றர் நீள சுயஸ் கால்வாய் புனரமைப்பு திட்டத்தில் பங்கேற்க வரும்படி இந்திய நிறுவனங்களுக்கு மோர்சி அழைப்பு விடுத்தார். (அ-5)

## தனித்தெலுங்கானா கோரி போராட்டம்

(நகரி)

ஐதராபாத் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் தெலுங்கானா தனி மாநில கோரிக்கையை வலியுறுத்தி தொடர் போராட்டம் நடந்து வரும் நிலையில் தெலுங்கானா தனி மாநில கோரிக்கையை சட்டமன்றத்தில் தீர்மானமாக கொண்டு வர தெலுங்கானா தனி மாநில கூட்டு நடவடிக்கை குழு வலியுறுத்தியபோதும் அது பற்றிய தீர்மானம் கொண்டு வரப்படாததால் இன்று தெலுங்கானா பகுதிக்குட்பட்ட 10 மாவட்டங்களில் சடக் பந்த் எனப்படும் சாலை மறியல் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. குறித்த நடவடிக்கை குழு அழைப்பு விடுத்துள்ளது.

தெலுங்கானா தனி மாநில கோரிக்கையை வலியுறுத்தி நாளை 10 மாவட்டங்களில் சாலை மறியலில் போராட்டம் நடைபெறும். ஐதராபாத்தில் இருந்து பெங்களூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் இந்த மறியல் போராட்டம் நடைபெறும் என போராட்டக் கூட்டு நடவடிக்கைக் குழு தலைவர் கோதண்டம் தெரிவித்துள்ளார். (அ-5)

## சிங்கத்தை எதிர்த்து சிறுத்தைகளும் களத்தில்

(செங்கல்பட்டு)

இலங்கை ஜனாதிபதி மஹிந்தவை போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும். தனி ஈழம் அமைய பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கோரி விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் செங்கல்பட்டு அரச வைத்தியசாலைக்கு எதிரில் நேற்று ஒருநாள் அடையாள உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றுள்ளது.

உண்ணாவிரதத்துக்கு காஞ்சிபுரம் மாவட்ட இளஞ்சிறுத்தைகள் செயலாளர் தமிழரசன் தலைமை தாங்கியதோடு விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநில செய்தி தொடர்பாளர் வன்னியரசு, செங்கல்பட்டு நகர செயலாளர் அன்பு செல்வன் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி, காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகிகள், தொண்டர்கள் ஆகியோர் உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர்.

இவ் உண்ணாவிரத போராட்டம் நேற்று மாலை நடைபெற்றுள்ளது.

இலங்கை தமிழர்களுக்காக போராடி வரும் மாணவர்களுக்கு இவ் உண்ணாவிரத பந்தலில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## பேருந்து விழுந்ததில் 22 பேர் பலி

கோவாவிலிருந்து நேற்று முன்தினம் மும்பைக்கு 37 பேர் தனியார் பேருந்து ஒன்றின் மூலம் பயணித்துக் கொண்டிருந்தனர். அந்த பேருந்து மேற்கு மகாராஷ்டிராவில் உள்ள ரத்னகிரி மாவட்டத்தின் கேட் பகுதியில் பாலத்தின் மீது வந்து கொண்டிருந்தது.

திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து ஆற்றில் தலைகுப்புற கவிழ்ந்தது. இந்த கோர விபத்தில் அந்த பேருந்தில் பயணம் செய்த 22 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பலருக்கு தலையில் காயமேற்பட்டது. காயமடைந்த 15 பேர் கேட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ)

பாரதச் செய்தி

## மாவோயிஸ்ட் தாக்குதலில் 5 ஆண்டுகளில் 2,500 பேர் பலி

(புதுடில்லி)

மாவோயிஸ்ட்களின் வன்முறை தாக்குதல்களில் கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 2 ஆயிரத்து 500 பேர் பலியாகியுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேற்படி பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் பழங்குடியின மக்கள் எனவும் பொலிஸாருக்கு உளவு சொல்பவர்கள் என்ற சந்தேகத்தில் மாவோயிஸ்ட்கள் அவர்களை சித்ரவதை செய்து கொன்றதாகவும் அந்த அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

மேலும் ஏழைகளும் ஒடுக்கப்பட்டவர்களும் இந்த வன்முறையின் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் சமூக, பொருளாதார முன்னேற்றம் தடைபடுகிறது. இந்த தடைகளை தகர்த்தெறிய சமுதாயமும் ஊடகங்களும் முன்வர வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மாடுமோ செத்தல் மாடு வண்டியுமோ ஓட்டை வண்டி
மாடிழுக்க மாட்டாமல் மாய்கிறான்டி உன் புருஷன்
~ நாட்டார் பாடல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk


# சர்வதேச விசாரணைக்கு அரசு அஞ்சக் கூடாது!

## நம்பிக்கை ஊட்டுகிறார் சரத்



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற சிவில் யுத்தத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா.சுமத்தியுள்ள குற்றச்சாட்டு குறித்த விசாரணைக்கு இலங்கை அஞ்சக்கூடாது என முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சர்வதேச விசாரணைக்கான அழுத்தங்கள் தற்போது அதிகரித்து வருகின்றன. அடிப்படையில் பொறுப்புக்கூறலை அரசு புறக்கணிக்க முடியாது.

என்னிடம் யாராவது கேள்வி கேட்டால் அதற்குப் பதிலளிக்க நான் தயார். சர்வதேச விதிகள் மற்றும் மரபுகளுக்கு அமையவே யுத்தம் மேற்கொள்ளப்பட்டதாயினும் இன்னும் கேள்வி நிலவுகின்றன.

யுத்தம் குறித்து சிப்பாய்கள் குறித்து யாராவது கேள்வி எழுப்பினால் அதற்குப் பதிலளிக்கக் கூடிய வகையில் அரசாங்கமும் இராணுவத் தலைவர்களும் இருக்க வேண்டும்.

மாறாக சில விடயங்களை புறக்கணிக்க முயற்சிக்கக் கூடாது. நாங்கள் வெட்கப்பட வேண்டியதில்லை. எம்மால் பதிலளிக்க முடியும்.

ஆனால் அரசாங்கம் அதனைச் செய்வதில்லை. எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எனக்கு நம்பிக்கை உள்ளது.

யுத்தம் எப்படிச் செய்யப்பட்டது என்று எனக்குத் தெரியும் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (செ–11)

# இடதுசாரி கட்சிகள் ஆட்சி புரிவதை காலனித்துவ நாடுகள் விரும்புவதில்லை

## அமைச்சர் டி.யூ. தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமை விவகாரங்களின் அடிப்படையில் தீர்மானம் சமர்ப்பிக்கப்படவில்லை என பதில் வெளிவிவகார அமைச்சர் டி.யூ. குணசேகர தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஐக்கியநாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் அமெரிக்க உள்ளிட்ட நாடுகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான மானது மெய்யான மனித உரிமைக் காரணிகளை முன்னிலைப்படுத்தியதல்ல.

முற்போக்கான இடதுசாரி கருத்துக்களை கொண்ட கட்சிகள் ஆட்சி நடத்துவதனை அமெரிக்கா போன்ற காலனித்துவ நாடுகள் விரும்புவதில்லை.

மேற்குலக நாடுகள் மெய்யாகவே தமிழர்கள் தொடர்பிலும் மனித உரிமைகள் தொடர்பிலும், கரிசனை கொண்டுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

1983ஆம் ஆண்டு ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற உரிமை மீறல்கள் தொடர்பில் உலக நாடுகள் குரல் கொடுக்கவில்லை எனவும் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட காரணத்தினால் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் வலுப்பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆப்கானிஸ்தான், லிபியா. ஈராக் ஆகிய நாடுகளில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை கேள்வி எழுப்பத் தவறியுள்ளது.

தமிழகத்தின் திராவிட முன்னேற்ற கழகமும் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஒரே மாதிரியானவை. ஏனெனில் சுயலாப அரசியலை முன்னிலைப் படுத்தியே இந்த கட்சிகள் அரசியலில் ஈடுபட்டு வருகின்றன.

முஸ்லிம்கள் மீதான அச்சுறுத்தல்கள் அடக்குமுறைகள் மிகவும் துரதிர்ஷ்டவசமானது. கிழக்கில் ஈழமொன்றை கோருமாறு முஸ்லிம்களை உந்தக் கூடிய வகையில் செயற்படக் கூடாது என்றார். (அ–2)

# தகனத்தின் போது மௌனமாய் இருந்தவர் ஆண்டுத் திதியில் அழுது புரளுகிறார்

இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைக்கு இந்திய மத்திய அரசு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி,

கோரிக்கையின் நிலைமை கவலைக்கிடமாகிறது என அறிந்தோ! என்னவோ! மத்திய அரசுக்கான தி.மு.கவின் ஆதரவை விலக்கிக் கொண்டார்.

மத்திய அரசுக்கான ஆதரவை கலைஞர் விலக்கிக் கொண்டமை கவனத்திற்குரிய விடயமாயினும் அது செய்யப்பட்ட கால சூழ்நிலை அந்த முக்கியத்துவத்தை தரம் இறக்கிவிட்டது.

யார் எதைச் செய்வதாக இருந்தாலும் அதனை உரிய காலத்தில் தகுந்த நேரத்தில் செய்ய வேண்டும்.

காலமும் நேரமும் சந்தர்ப்பமும் தவறி செய்யப்படும் காரியங்கள் பயனற்றவை மட்டுமல்ல; அவற்றால் மன உளச்சல்களுமே மிஞ்சும்.

ஒருவருக்கு காலில் காயம். மருந்து கட்டுவதற்காக அவர் ஒரு ஓடலியிடம் செல்கிறார். நல்ல மருந்தாக கட்ட வேண்டும் என்ற நோக்கில் ஓடலிக்கு காசு கொடுக்கும் எண்ணமும் அவருக்கு உண்டு.

அப்படியானால் அவர் கொடுக்க நினைத்த காசை எந்த நேரத்திலும் கொடுக்கலாமா என்ன?

மருந்து கட்டியபின்பு ஓடலிக்கு காசு கொடுத்தால், நல்ல மருந்தும் கட்டுப்பட மாட்டாது. அதே நேரம், அட பாவி மனுசன் காசை முன்கூட்டியே தந்திருந்தால் தரமான மருந்தை வைத்துக் கட்டியிருக்கலாம் அல்லவா?

இவ்வாறாக ஓடலி கவலையும் கொள்வார். மருந்து கட்டியவரும் என் காசைக் கொடுத்தும் பயன் இல்லை என்று வெதும்புவார்.

மருந்து கட்டுவதற்கு முன்னதாக ஓடலியின் கையில் காசை வைத்திருந்தால் மருந்தும் கவனிப்பும் பிரமாதமாக இருக்கும். இதுதான் யதார்த்தம்.

இப்படியானதொரு நிலையில் தான் கலைஞர் கருணாநிதியும் இருக்கிறார்.

ஈழத்தமிழ்மக்கள் வன்னிப் போரில் சுருண்டு விழுந்தபோது, ஐயகோ! எங்களைக் காப்பாற்ற யாருமிலரோ என்று அவலக்குரல் எழுப்பிய போது,

தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி மத்திய அரசுக்கான ஆதரவை அந்த நேரத்தில் விலக்கியிருந்தால், அது தியாகமாக இருந்திருக்கும். வன்னி மண்ணில் ஒரு புறத்தே தமிழ் மக்களை வெந்தணல் தின்று தீர்த்துக்கொண்டிருக்க, மறுபுறத்தில் முட்கம்பிக் கூண்டுக்குள் தமிழர் அடைக்கப்பட்டிருக்க, ஆட்சி மீது கொண்ட அளப்பெரும் ஆசையால் அமைதியாய் இருந்த கலைஞர் கருணாநிதி இப்போது மட்டும் அழுது புலம்புவது ஏன்?

அடுத்துவரும் தேர்தலுக்கான விதையை எடுப்பதற்கு இதுதான் நல்ல தருணம் என்று உணர்ந்தாரா?

கலைஞரே! தகனம் நடக்கும் போது அமைதியாய் இருந்து விட்டு ஆண்டுத்திதியில் அழுது புரள்வது அர்த்தமற்றது மட்டுமல்ல; மற்றவர்கள் சந்தர்ப்பவாதமாகவும் அதனைப் பார்ப்பார்கள் என்பதை முதுமையிலும் மறந்து விடாதீர்கள்.

# புத்தாண்டு போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(குருமன்காடு)

வவுனியா கலைமகள் விளையாட்டுக் கழகமானது இவ்வாண்டு நடத்தும் சித்திரைப்புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் கிளிதட்டு மற்றும் அணிக்கு நான்கு பேர் கொண்ட 30 நிமிட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி க்கான விண்ணப்பங்களே கோரப்பட் டுள்ளன.

விண்ணப்பங்களைசமர்ப்பிக்கவிரும்புவோர் எதிர்வரும் 30 திகதிக்கு முன்னர் தலைவர் கலைமகள் விளையாட்டுக் கழகம் மன்னார் வீதி வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் கலைமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6, 7 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாகவும் அக் கழகத்தின் உப தலைவர் தெரிவித்தார்.

அத்துடன் வவுனியா கலைமகள் விளையாட்டுக்கழக மைதானம் மற்றும் நகரசபை மைதானத்தில் இடம் பெறவுள்ள பல்வேறான போட்டிகளின் போது சிறுவர் சிறுமியர் வனிதையர் முதியோருக்கான போட்டிகள் இடம்பெறவுள்ளது.

அவர்களுக்கான சிறப்பு பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. போட்டிகள் மற்றும் விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0770363405, 0774258317, 0776704679 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் அறிந்து கொள்ள முடியும். (அ–2,250)

# அரச நாடகத்திற்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கலை கழகத்தின் அரச நாடக குழுவுடன் இணைந்து கலாசார திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ் வருடத்திற்கான அரச நாடகத்திற்கான போட்டிகளில் பங்கு பற்றுபற்றுவர்களிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி போட்டியில் பங்கு பெற்ற விரும்பும் நாடகக்குழுக்கள் விண்ணப்பப் படிவங்களை பருத்தித்துறை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும், விண்ணப்பங்கள் எதிர்வரும் 25-ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் மீண்டும் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ–5,19)

## சத்திய தரிசனம்



நான் என் அத்தாட்சிகளை உங்களுக்குத் தெரிவித்த பின்பே உங்களைத் திருத்த விரும்புகின்றேன். இதன் பொருட்டே தான் அவ்வப்போது மனித சக்திக்கும் மனித அறிவுக்கும் அப்பாற்பட்ட அற்புதங்களை செய்து காட்டுகின்றேன். இதனால் நான் என் சக்திகளை பறைசாற்றிக்கொள்ள விரும்புகின்றேன் என்று அர்த்தமல்ல. என் குறிக்கோள் உங்களை என்னிடம் இன்னும் அருகே இழுத்துக்கொள்வதுதான். உங்கள் இதயங்களை என்னோடு இணைத்துக்கொள்வதுதான்.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்




# விஷ்ணு பூஜைக்குள்ள பூக்கள் எவை?

விஷ்ணு பூஜைக்குள்ள பூக்களைப்பற்றி கோயில் ஆசார இரகசியங்களில் கூறப்பட்டிருக்கின்றது. விஷ்ணுபூஜைக்கு ஏதாவது பூக்கள் போதாதா என்று கேட்கலாம். அது போதாது என்றே கூறவேண்டும். கிருஷ்ணதுளசி, ராமதுளசி, வெள்ளைத் தாமரை, செந்தாமரை, பிச்சகம், சாமந்தி, முல்லை, காக்கத்தி முல்லை, நாகம், காட்டு செண்பகம், நந்தியார் வட்டம், மூக்குத்தி, செம்பருத்தி, நொச்சிமல்லிகை, செண்பகம், குவளை, நீலத்தாமரை, கைதை, புதுமுல்லை, சிவப்பு முல்லை என்ற பூக்கள் விஷ்ணு பூஜைக்கு உத்தமமான பூக்கள். வெறும் தேவபூஜைக்கு எடுக்கும் பூக்களாக இவற்றை காணவேண்டியதில்லை. இவற்றின் மருத்துவ குணங்களைப் பற்றியும் இவை சுவாசித்தால் பெறும் பயன்களைப் பற்றியும் மருத்துவநூல் வெளிப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுவரால் நாங்கள் தோல்வியடைந்தோம்

## பங்களாதேஷ் அணியின் தலைவர் ரஹீம்



பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்ட வீரர் மொமினுல் ஹக்குக்கு தவறான முறையில் ஆட்டமிழப்பு வழங்கப்பட்டதாக பங்களாதேஷ் அணியின் தலைவர் முஷ்பிக்கூர் ரஹீம் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் அணியின் இளம் துடுப்பாட்ட வீரரான மொமினுல் ஹக் பிடியெடுத்து ஆட்டமிழந்ததாக ஆட்டமிழப்பு வழங்கப்பட்டது. ரங்கன ஹேரத்தின் பந்துவீச்சில் அவர் ஆட்டமிழந்திருந்தார். மொமினுல் ஹக் ஆட்டமிழந்த பின்னர் பங்களாதேஷ் அணியின் அனைத்து விக்கெட்டுக்களும் விரைவாக வீழ்ந்திருந்ததுடன், பங்களாதேஷ் அணியால் 160 ஓட்டங்களை மாத்திரமே இலங்கைக்கு இலக்காக வழங்க முடிந்திருந்தது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்த முஷ்பிக்கூர் ரஹீம், தன்னைப் பொறுத்தவரை மொமினுல் ஹக்கின் ஆட்டமிழப்புத் தவறானது எனவும், இது சிறிய விடயமென்ற போதிலும், அணியைப் பாதித்திருந்ததாகக் குறிப்பிட்டார்.

இத்தொடரில் பல முடிவுகள் தங்களுக்கெதிராக வழங்கப்பட்டதாகவும், சிறிய நாடாக இருப்பதால் இவ்வாறான நிலை ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# இங்கிலாந்து காற்பந்து வீரர் ஓவன் ஓய்வு

இங்கிலாந்தை சேர்ந்த பிரபல காற்பந்து வீரர் மைக்கேல் ஓவன் ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார்.

33 வயதாகும் ஓவன் தற்போது இங்கிலீஷ் பிரீமியர் லீக் காற்பந்து தொடரில், ஸ்டோக் சிட்டி அணிக்காக விளையாடி வருகிறார். இதற்கு முன் ரியல் மேட்ரிட், லிவர்பூல் ,மேன்செஸ்டர் யுனைடெட், நியுகேஸ்டல் ஆகிய பிரபல காற்பந்து அணிகளுக்காக மைக்கேல் ஓவன் விளையாடியுள்ளார்.

தமது 18 ஆவது வயதில் இங்கிலாந்து தேசிய அணிக்காக களம் இறங்கிய அவர் 1998ஆம் ஆண்டு உலக கிண்ணப் போட்டியில் ஆர்ஜென்டினா அணிக்கு எதிரான முதல் ஆட்டத்தில் களம் இறங்கினார். கடந்த 2008ஆம் ஆண்டு சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வுபெற்றார். இங்கிலாந்து அணிக்காக 89 சர்வதேச போட்டிகளில் விளையாடி 40 கோல்களை அடித்த ஓவன், சிறந்த வீரருக்காக வழங் கப்படும் பல்லான் டி ஆர் விருதை கடந்த 2001 ஆம் ஆண்டு பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# காற்பந்து வீரருக்கு வாழ்நாள் தடை

கோல் அடித்த மகிழ்ச்சியை கிட்லரின் நாஜி பாணியில் வணக்கம் செலுத்தி கொண்டாடிய க்ரீஸ் நாட்டு காற்பந்து வீரருக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

க்ரீக் சுப்பர் லீக் காற்பந்து தொடரில், ஏஇகே ஏதென்ஸ் அணியுடன் வெரோயா அணி மோதியது. இந்த போட்டியின்போது, ஏதென்ஸ் அணி வீரர் கியார்கியாஸ் கோல் அடித்த மகிழ்ச்சியில் வலது கையை தலைக்கு மேல் உயர்த்தி நாஜி பாணியிலான வணக்கம் செலுத் தினார். அவரின் நாஜி பாணியிலான வணக்கம் ரசிகர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. சமூக வலைதளங்கள் மூலம் அவருக்கு கண்டனங்கள் குவிந்தன. இதனை தொடர்ந்து உடனடியாக அவசர கூட்டத்தை கூட்டிய கிரீஸ் காற்பந்து சங்கம் கியார்கியாஸ்க்கு கிரீஸ் நாட்டில் காற்பந்து விளையாட வாழ்நாள் தடை விதித்தது.

தற்போது கிரீஸ் நாட்டின் 20 வயதுக்குட்பட்ட அணியின் தலைவராக இருந்து வரும் அவர், அந்த அணியில் இருந்து



உடனடியாக நீக்கப்பட்டுள்ளார். தமது செய்கைக்காக மன்னிப்பு கோரியுள்ள கியார்கியாஸ், நாஜி பாணியிலான வணக்கத்திற்கான அர்த்தம் தமக்கு தெரியாது என்றும் டுவிட்டர் வலைதளத்தில் தெரிவித்துள்ளார்

# 2013 ஐ.பி.எல்.போட்டி

## பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வேண்டுகோள்

ஐபிஎல் போட்டியின்போது இலங்கை வீரர்களின் பாதுகாப்பு குறித்து இலங்கை கிரிக்கெட் வீரர்கள் சங்கம் (எஸ்எல்சிபிஏ) கவலை தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த 2009ஆம் ஆண்டு நடைபெற்ற போரின்போது மனித உரிமை மீறல் நடைபெற்றது தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தக் கோரி தமிழகத்தில் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், தமிழகத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இலங்கையைச் சேர்ந்த புத்தத் துறவிகள் இருவர் தாக்கப்பட்டனர். இதையடுத்து சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் சம்மேளனத்துக்கு கடிதம் எழுதியுள்ள எஸ்எல்சிபிஏ, 'ஐபிஎல் போட்டியின்போது தங்கள் நாட்டு வீரர்கள் எவ் வித பாதிப்புக்கும் உள்ளாகாதவாறு அவர்களின் பாது காப்பை உறுதி செய்ய வேண்டும்' என்று கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக எஸ்எல்சிபிஏ தலைவர் கென் டி ஆல்விஸ் கூறுகையில், 'எங்கள் வீரர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு சர்வதேச சம்மேளனத்துக்கு கடிதம் எழுதியுள்ளோம். அவர்களின் பதிலுக்காக காத்திருக்கி றோம்' என்றார்.

6ஆவது ஐபிஎல் போட்டி எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி முதல் மே 27ஆம் திகதி வரை நடை பெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது

## இலங்கை வீரர்களுக்கு ஆபத்தில்லை -ஐ.பி.எல். தலைவர் சுக்லா

இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கு இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றுவதால் எந்த ஆபத்தும் இல்லையென இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பின் தலைவர் ராஜிவ் சுக்லா தெரிவித்துள்ளார். இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் இலங்கை வீரர்கள் சென்னையில் போட்டிகளில் பங்குபற்றுவதைத் தவிர்க்குமாறு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கோருமென முன்னர் வெளியாகியிருந்த ஊடகச் செய்திகளுக்கிடையே அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

தற்போதைய நிலையில் இலங்கை வீரர்களுக்கு ஆபத்தில்லை எனக்குறிப்பிட்ட அவர், தொடரின் நடுவே அவ்வாறான ஆபத்துக்கள் ஏற்பட்டால் அது அந்த நேரத்தில் அதற்கேற்றவாறு சமாளிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை வீரர்கள் சார்பாக டில்லி டேர்டெவில்ஸ் அணியின் தலைவராக மகேல ஜெயவர்தனேவும், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியின் தலைவராக குமார் சங்கக்கராவும் உள்ளனர். புனே வாரியர்ஸ் அணியில் அஜந்தா மெண்டிஸ், ஏஞ்சலோ மெத்யூம் இடம்பெற் றுள்ளனர். றோயல் சலஞ்சேர்ஸ் பெங்களூர் அணிக்காக முத்தையா முரளிதரன், தில்ஷன் களமிறங்கும் நிலை யில் மும்பை இந்தியன்ஸ் அணியின் நட்சத்திர வேகப் பந்துவீச்சாளராக லசித் மலிங்க உள்ளமை குறிப்பிடத் தக்கது.

# 4 ஆவது போட்டியில் ரெய்னா

டில்லியில் நடைபெறவுள்ள நான்காவது டெஸ்டில் காயம் காரணமாக ஷிகர் தவான் நீக்கப்பட்டுள்ளார். இவருக்கு பதிலாக சுரேஷ் ரெய்னா, அணியில் இடம்பிடித்தார்.

இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) வெளியிட் டுள்ள செய்திக் குறிப்பில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான நான்காவது டெஸ்டில் இருந்து இடது கையில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக ஷிகர் தவான் நீக்கப்பட்டுள்ளார். கம்பீருக்கு இரத்த பரிசோதனையில் மஞ்சள் காமாலை இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனால் தவானுக்கு பதில் சுரேஷ் ரெய்னா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார், என அதில் தெரிவிக்கப்பட்டது.

**கடின உழைப்புக்கு பரிசு**

அணியில் இடம் பிடித்தது குறித்து ரெய்னா கூறுகையில், இந்திய அணியில் மீண்டும் இடம் கிடைத்தது. மகிழ்ச்சி அளிக் கிறது. இதற்



காக கடவுளுக்கு நன்றி தெரிவித்துக்கொள் கிறேன். இரானி கோப்பை தொடரில் கடுமையாக பாடுபட்டேன். தற்போது அந்த கடின உழைப் புக்கு நல்ல பரிசு கிடைத்துள்ளது. நான்காவது டெஸ்டில் விளையாடுவேன் என்பதை உறுதி யாக சொல்லமுடியாது. ஆனால் டெஸ்ட் அணி யில் மீண்டும் இடம் கிடைத்தது நினைத்து பெருமைப்படுகிறேன், என்றார்.

# "என் வாழ்க்கையில் வந்த சோதனை"



இந்திய நட்சத்திர கிரிக்கெட் வீரர் யுவராஜ்சிங் பற்றிய 'என் வாழ்க்கையில் வந்த சோதனை' என்ற நூல் வெளியீட்டு விழா டில்லியில் நடைபெற்றது. அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட காலத்தில் இருந்து, அந்த கடினமான காலக்கட்டத்தில் இருந்து மீண்டு வந்தது வரை சந்தித்த பல்வேறு விடயங்கள் அந்த புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் வெளியீட்டு விழாவில் இந்திய அணியின் தலைவர் டோனி, சச்சின் டெண்டுல்கர், விராட் கோலி உள்ளிட்ட பல இந்திய வீரர்கள் பங்கேற் றனர். விழாவில் கலந்துகொண்ட டெண்டுல்கர் உருக்கமாக உரை யாற்றினார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

புற்றுநோய் சிகிச்சைக்கு (அமெரிக்காவில்) பிறகு யுவராஜ்சிங், லண் டன் வந்தபோது அவரை சந்தித்தேன். அப்போது நான் என் மனைவியிடம் (அஞ்சலி), யுவராஜ்சிங்கை பார்க்கும்போது உணர்ச்சி வசப்பட்டு அழக் கூடாது என்று விரும்புகிறேன் என்று கூறினேன். அவரை கண்டதும் கட் டித்தழுவிக் கொண்டேன். அதன் பிறகு இருவரும் மிகுந்த உற்சாகமாக உணவு சாப்பிட்டோம். அவர் சாப்பிட்டதை பார்த்தபோது, அவர் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பி விட்டதாக எனக்குள் ஆறுதல் அடைந்து கொண்டேன்.

பிறகு என் மனைவி அவரிடம் சிகிச்சை முறைகள், எடுத்துக்கொள்ளும் மருந்துகள் பற்றி விவாதித்து கொண்டிருந்தார். அப்போது நான் யுவராஜ் சிங்கை பார்த்துக் கொண்டே, அவர் என்ன நிலைமையில் சென்று கொண்டி ருக்கிறார் என்பதை உணர்ந்தேன். அவர் எனது இளைய சகோதரர் மாதிரி. அவருக்கு ஏன் இப்படியொரு நோயை கொடுத்தாய்? என்று கடவுளிடம் கேட்கிறேன் இவ்வாறு தெரிவித்தார டெண்டுல்கர்.


# டுவிட்டரிலிருந்து வெளியேறினார் ஆஸி.பயிற்சியாளர்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் சமூக வலைதளமான டுவிட்டரில் இருந்து வெளியேறி யுள்ளார்.

சென்னை, ஐதராபாத், மொகாலி என தொடர்ந்து 3 போட்டிகளில் தோல்வி கண்ட நிலையில் ஏராளமான ரசிகர்கள் டுவிட்டர் தளத்தில் அவரை கிண்டல் செய்ததைத் தொடர்ந்தே அதிலிருந்து வெளியேறியுள்ளார் ஆர்தர்.

டுவிட்டரில் ஆர்தரை கிண்டல் செய்துள்ள ரசிகர்கள், 'ஹேய் மிக்கி ஆர்தர், 3ஆவது டெஸ்ட் போட்டிக்கு உங்களுக்கு வேகப்பந்து வீச்சாளர்கள் போதுமா? அடுத்த போட்டி நடைபெறவுள்ள டில்லி மைதானம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமானது. அங்கு 4 சுழற்பந்து வீச்சாளர்களுடன் கள மிறங்குங்கள். கடைசி நாள் காலையில் அவுஸ் திரேலிய அணியின் உத்வேகம் எப்படி இருந் தது? எல்லோரும் சரியான சீருடை அணிந்திருந் தார்களா? என பல்வேறு கருத்துகளைத் தெரி வித்து கிண்டலடித்திருந்தனர்.

இதனால் எரிச்சலடைந்த அவுஸ்திரேலிய பயிற்றுவிப்பாளர் மிக்கி ஆர்தர், ரசிகர்களின் தொல்லை தாங்காமல், டுவிட்டருக்கே 'குட்பை' சொல்லிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலைப்பந்தாட்டப் போட்டி இந்து மகளிர் கல்லூரி வெற்றி

யாழ்.கல்வி வலய பாடசாலை அணிகளுக்கு இடையே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, 15 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் வலயச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.அன்ரனீஸ் வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி 8:4 புள்ளிகள் கணக்கில் முன்னிலையில் இருந்தவேளை ஆட்டம் முடிபடைந்தது.

2-ம் பாதியாட்டத்திலும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி உற்சாகத்துடன் விளையாடிய நிலையில் 6:2 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிபடைந்தது.

ஆட்ட நிறைவில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி 14:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென்.அன்ரனீஸ் வித்தியாலயத்தை தோற்கடித்து வலயச் சம்பியனாகத் தெரிவாகியது. 3-ம் இடத்தை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை பெற்றுக் கொண்டது.

## சங்கானை பிரதேச கரப்பந்தாட்டம் விக்ரோரியன்ஸ் வி.கழகம் சம்பியன்

சங்கானை பிரதேச செயலயகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி ஒன்று அண்மையில் வட்டு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இவ் இறுதிப்போட்டியில் சங்கானை ஞான வைரவர் விளையாட்டுக் கழகமும் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன. விறுவிறுப்பாக நடந்த போட்டியில் சுழிபுரம் விக்டோறியன்ஸ் விளையாட்டுக்கழகம் 25:11, 25:16 என்ற செட் அடிப்படையில் வெற்றி பெற்று சங்கானை பிரதேச செயலக சம்பியனானது.




தெல்லிப்பழை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் சுற்றுப்போட்டி அண்மையில் மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் 15 வயது ஆண்களுக்கான போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் வசாவிளான் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இதில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி 25:11, 22:16 என்ற செட் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது.

3-ம் இடத்துக்கான போட்டியில் மல்லாகம் மகா வித்தியாலயமும் மெய்கண்டான் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இதில் மெய்கண்டான் மகா வித்தியாலய அணி 25:19, 25:21 என்ற செட் அடிப்படையில் வெற்றிபெற்று 3-ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.




தெல்லிப்பழை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் சுற்றுப்போட்டி அண்மையில் மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் 17 வயது பெண்களுக்கான போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் அளவெட்டி அருணாசல மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி 25:16, 29:27 என்ற செட் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது. 3-ம் இடத்துக்கான போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இதில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி 25:19, 25:23 என்ற செட் அடிப்படையில் வெற்றிபெற்று 3-ம் இடத்தைப் கைப்பற்றிக் கொண்டது.

# மரண அறிவித்தல்

## சீனிவாசகம் சண்முகம்

### (ஓய்வுபெற்ற ஆசிரியர் - வெஸ்லிக் கல்லூரி)



ஆதியாமலை உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் சண்முகம் (வெஸ்லி கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர்) 20.03.2013 கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூபதியின் அன்புக் கணவரும், தயாளினி(C.P.M சகோதரி), ரஞ்சித்ஜெயக்குமார்(ராஜன்), கோகிலவினோதினி(வினோ), சாந்தினிகோகிலா (பேபி), நாளினிகீதாஞ்சலி(சூட்டி), சுபாஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திஸ்மஸ் புகழேந்திமாக், றொட்னி சுரேந்திரன், விக்கிரமசிங்கம் (விக்ரர்), யாசோ நோறா ஆகியோரின் அன்பு மாமனும், ஐசாக்கின் பேரனும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை பி.ப 2 மணியளவில் அவரது வீட்டில் நடைபெற்று பருத்தித்துறை சுப்பர்மடம் இலங்கை பெந்தகோஸ்தே சபை சேமக்காலையில் நடைபெறும்.

(2209) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கத் தீர்மானத்தை ஒருபோதும் ஏற்க மாட்டோம்

## இலங்கை அரசு அறிவிப்பு

ஐக்கியநாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட உள்ள தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் தீர்மானம் இன்றைய தினம் ஜெனீவா மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா 3 தடவைகள் திருத்தம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. முதன் முதலில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் கடுமையானது எனவும், தற்போது செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் மூலம், தீர்மானத்தின் கடுமைத் தன்மை குறைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறாயினும், தீர்மானத்தை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளாது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மாறாக வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென இலங்கை இன்றைய தினம் கோரிக்கை விடுக்க உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் மூலம் நாட்டுக்கு நன்மைகள் ஏற்படாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் தீர்மானத்தின் மூலம் பாதக விளைவுகளே ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசாங்கம் நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சர்வதேச விசாரணை...

பதில் ஆணையாளர் குயாங் வாங் காங் நேற்று அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

அவ்வறிக்கையில், உண்மையைக்கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வில்லை.

உண்மையை கண்டறியும் ஆணைக் குழுவின் தெரிவு செய்யப்பட்ட சில விடயங்களை மட்டுமே இலங்கை அரசாங்கம் அமுல்படுத்தி வருகின்றது.

குற்றச்செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லிணக்கம் ஏற்படுத்தும் விடயங்களில் இன்னமும் பல்வேறுகட்டங்கள் தாண்ட வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் மீதான தாக்குல்கள் அதிகரித்துள்ளதால், இதன் மூலம் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு தொடர்பிலான கேள்வி எழுந்துள்ளது.

உண்மையைக் கண்டறிந்து அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டியது மிகவும் முக்கியமானது.

சாட்சிகள் மற்றும் சம்பவங்களில் பாதிக்கப்பட்டோரை பாதுகாப்பதற்கு சரியான சட்டங்கள் இலங்கையில் இயற்றப்பட வேண்டும்.

கடத்தல்கள், காணாமல்போதல்கள் தொடர்பில் சர்வதேச சட்டங்கள் அமுல்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானது.

தேசிய நிறுவனங்களின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் அவசியமாக பேணப்படவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகளை சுயாதீன ஆணைக்குழுவென்று கண்காணிக்க அனுமதிக்கப்படவேண்டுமென நவநீதம் பிள்ளையின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக, குயாங் வாங் காங் தெரிவித்துள்ளார். (செ-11)

## நவிபிள்ளையின்...

பதாகைகளையும் தாங்கி நின்றனர்.

சீருடையினர் மற்றும் அரசு,சார்பான கட்சிகளின் ஏற்பாட்டில் ஐ.நா கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று கண்டனப்பேரணியொன்றுநடத்தப்பட்டது.

யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கிற்கு அண்மையில் இருந்து ஆரம்பமான இந்த கண்டனப் பேரணி யாழ்.நகர்ப் பகுதியை வந்தடைந்தபோது நவநீதம்பிள்ளையின் உருவப் பொம்மை சிவில் உடைதரித்தவர்களால் மண்ணெண்ணெய் ஊற்றி தீயிட்டு எரிக்கப்பட்டது.

அத்தோடு அங்கு நின்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் கூக்குரலிட்டு தமது எதிர்ப்பினையும் தெரிவித்தனர். (செ-6)

## அமெரிக்க பிரேரணை...

அரசு, அரசு சார்பான கட்சிகளின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கிற்கு அண்மையில் முனீஸ்வரன் கோவிலுக்கு முன்பாகவிருந்து ஆரம்பமான இந்தக் கண்டனப் பேரணி யாழ். மத்திய பேருந்து நிலையத்தை வந்தடைந்தது.

ஏற்பாட்டாளர்கள் பலர் என்பதாலும், பல இனத்தவர்களும் கலந்து கொண்டதாலும் பேரணியில் கலந்து கொண்டவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இதனால் ஒவ்வொரு பகுதியாக பேரணியில் கலந்து கொண்டவர்கள் பிரிந்து சென்றதனால் ஏற்பாட்டாளர்கள் சிறிது நேரம் பெரும் சங்கடத்திற்குள்ளாகியிருந்தனர்.

பின்பு ஒருவழியாக வீதிப் போக்குவரத்தை இடைமறித்து; நடு வீதியில் நிறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் உருவப் பொம்மையும் எரிக்கப்பட்டது.

இதையடுத்து கண்டனப் பேரணியில் கலந்து-கொண்ட சிலர் கலைந்து சென்றதும், மேலும் ஒரு குழுவினர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் உருவ பொம்மையையும் கொண்டு வந்து எரித்தனர்.

பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு பால்மா பைக்கற்,சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டிருந்தது.

அத்தோடு இந்தக் கண்டனப் பேரணியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர் இராமநாதன் அங்கஜன், ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் உள்ளிட்டவர்களும் அரசாங்கத்தின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபை உறுப்பினர்களும் கட்சி உறுப்பினர்களும், வேலையில்லா பட்டதாரிகளும், தொண்டராசிரியர்களும் அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்படும் பட்டதாரி பயிலுநர்களும், முன்னாள் போராளிகளும், இராணுவத்தினரும் இதில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதவிர பிரேரணைக்கு ஆதரவுதெரிவித்து இலங்கையைப் போன்ற நண்பர்களை பகைத் துக் கொள்ள வேண்டாம் என்றும்;

யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கத்திற்கு எதிராகவும் இந்தியாவுக்கு எதிராகவும் பதாகைகளையும் கோஷங்களை யும் எழுப்பியவாறு கண்டனப்பேரணியில் ஈடுபட்டனர்.

இப் பேரணியில் தமிழைக் கொலை செய்யும் வகையில் எழுத்துப் பிழையுடன் கூடிய பதாகைகள் நிறையவே காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

## வாக்கெடுப்பு இன்று...

கோரிக்கையாகும். இதற்கேற்ற வகையில் அமெரிக்கத் தீர்மானத்தில் இந்தியா திருத்தங்களை கொண்டுவர வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்கத் தீர்மானத்தில் இந்தியா சில திருத்தங்களை கொண்டுவர முடிபு செய்துள்ளது.

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங் நேற்று டில்லியில் அவசர ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நிதி அமைச்சர் ப.சிதம்பரம், வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளியுறவுச் செயலாளர் ரஞ்சன் மத்தாய், ஐ.நா. மனிதவுரிமை கவுன்சில்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திலீப் சின்ஹா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமெரிக்கத் தீர்மானத்தில் இடம்பெற்றுள்ள அம்சங்கள் குறித்து பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அதிகாரிகள் விளக்கிக் கூறினார்கள். மேலும் அந்தத் தீர்மானத்தில் இந்தியாவின் சார்பில் கொண்டுவரப்படும் திருத்தங்கள் பற்றியும், திருத்தங்களில் இடம்பெற வேண்டிய வாசங்கள் குறித்து கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

அமெரிக்கா தாக்கல் செய்துள்ள தீர்மானத்தின் மீது ஏற்கெனவே சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவின் சார்பில் இன்று சில திருத்தங்கள் சேர்க்கப்படும் அதன்பிறகு தீர்மானத்தின் இறுதி வடிவம் ஐ.நா மனிதவுரிமை கவுன்சில் கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டு அதன் மீது உறுப்பினர்களின் விவாதம் நடைபெறும்.

விவாதத்தின் முடிபில் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்புகள் நடைபெறும். இவ் விவாதம் இன்றுடன் முடிந்துவிட்டால் இன்றே வாக்கெடுப்பு நடைபெறும், விவாதம் நீடித்தால் வாக்கெடுப்பு நாளை (வெள்ளிக்கிழமை) நடைபெற வாய்ப்புள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றுவது தொடர்பாக சபாநாயகர் மீரா குமார் நேற்று அனைத்துக் கட்சி தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வருவதற்கு பாரதிய ஜனதா, சமாஜ்வாடி, ஐக்கிய ஜனதா தளம் உள்ளிட்ட பல கட்சிகளின் தலைவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். எனவே ஒருமித்த கருத்து ஏற்படாமல் கூட்டம் தோல்வியில் முடிந்தது.

இதனால் இலங்கை பிரச்சினை தொடர்பாக பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

### வாக்கெடுப்பு பி.ப.2.30க்கு

ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணை மீதான வாக்கெடுப்பு இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 2.30 மணியளவில் நடத்தப்படவுள்ளது.

31நாடுகளின் இணை அனுசரணையுடன் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் மீது வாக்கெடுப்பைக் கோருவது என இலங்கை தீர்மானித்துள்ள நிலையிலேயே வாக்கெடுப்பை நடத்துவதற்கான நேரம் குறிக்கப்பட்டுள்ளது. (செ)

## வரலாறு...

களத்திற்கு சென்று மாணவர்களின் போராட்டத்தை ஆதரித்து வாழ்த்திப் பேசினார்கள்.

அரசியல்வாதிகளுக்கு இடமில்லை என்றும் கோசங்களை எழுப்பிய மாணவர்கள் தி.மு.க பதவி விலகி நடிக்கிறது என்றும் கோஷங்களை எழுப்பினார்கள். காங்கிரஸ் கட்சி அதன் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங் முதலியோருக்கு எதிராக மாணவர்கள் சென்னை எங்கும் கோசங்களை எழுப்பினார்கள் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாள் முழுதும் கொளுத்தும் வெயிலில் இருந்து போராடிய மாணவர்கள் இறுதியில் சென்னை காமராஜர் வீதியை இடைமறித்து இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உருவ பொம்மையை எரித்து தமதுஎதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தொடந்தும் போராட்டங்களை நடத்தப் போவதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்புஎன்று அடையாளப்படுத்திபோறாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


### தவறிவிட்டது

830230270 V, 86518349 V இலக்கமுடைய அடையாள அட்டைகளும் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரமும் பருத்தித்துறை ஓராம் கட்டைக்கும் மாலு சந்திக்கும் இடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் 0212264862 அல்லது 0772178949 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தயவு செய்து அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C-2754)

### Diploma in Pharmacy

Leading To Bsc Pharmacy
2 Years Course
CMCC Syllabus
Full Practical
Addmissions Open
Monthly Rs.3000/= ONLY
*Initial Payment Rs.20000/=
உடனடி வேலை வாய்ப்பு!!
16-03-2013ல் இருந்து

Visalam Wide and Beyond
Visalam MINDS
127/1 Temple Road Jaffna
021 221 9695 | 075 979 9695

### தேவை

கொம்பியூட்டர் ரைப்பிங், போட்டோ பிரதி தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

'பிரகாந்த்'
(திருநெல்வேலி கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)
0773138881 (2193)

தற்போது யாழ் நகரில்...





இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org